Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly
விலை: 16.00
நாதம் - 15 | வெள்ளி - 26 | 27 - 02 செப்ரெம்பர் - 2004

27 AUG 2004

## கோயிலுக்குள் பொலிஸ் படை



## ஆமிக்கேன் அப்பக்கடை...?



# திருமுக அறிமுகம்

அரசியலில் மட்டுமல்ல இலக்கியத்திலும் மூவகைப் போக்குகள் உள்ளன. ஆளும் வர்க்கத்திற்கு சாதகமான போக்கு சமரச சீர்திருத்த வாதப்போக்கு எழுச்சியுற்று, தவிர்க்க முடியாதபடி போராடி வரும், உழைக்கும் மக்களுடன் இணைந்து வளரும் போக்கு. இந்த மூன்றாவது வகை நிலைப்பாட்டில் நின்று போராடி எழுதி வளர்ந்து இலக்கியங்களைப்படைத்தவர் கே.டானியல். டானியல் குறித்து சித்தன் என்பவர் எழுதிய குறிப்பே மேலே காணப்படுபவதாகும்.

நிலவுடமை ஆதிக்கத்தின் மேல் கட்டப்பட்ட சாதிமுறையை அகற்றுதல். அதைப் பாதுகாத்து நிற்கும் அரசு இயந்திரத்தை மாற்றுதல், சகல ஆதிபத்திய சிந்தனைகளையும் சாடி அழித்தல், அதற்கான போராட்டப் பாதை புரட்சியே! அடக்குமுறை அழிய சகல மக்களுக்குமான விடுதலைக்கு வழி புரட்சி மட்டுமே...! என நம்பியவர் அதனையே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இறுதிவரை வலியுறுத்தியவர் தன் எழுத்துக்களிலும் படைத்தவர் டானியல்.

"பள்ளிப்படிப்பை ஐந்தாம் வகுப்புடன் முடித்திருந்த எனக்கு அதற்கு உட்பட எழுதவும் பேசவும் மட்டுமே தெரிந்திருந்தது. எந்த வேற்று மொழியையும் படிக்க அல்லது குறைந்த பட்சம் பேசிக்கொள்ளவாவது



எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. இதற்கான காரணம் குடும்பத்தின் வறுமைநிலை. இன்னும் கூறப் போனால் நாளொன்றிற்கு ஒரு வேளைச்சோற்றுக்கே வழியில்லாத நிலை. சாதி அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட அவஸ்தைகள்..."

"எனது குடும்பத்தொழில் சீலை வெளுப்பு, இதைச் சற்று நேராகச் சொன்னால் சாதியில் நான் வண்ணான். அதனை விடவும் தமிழர்களுடைய 'அழகு தமிழில் கூறுவதானால் 'கட்டாடி' என்று சுருக்கிவிடலாம். இதை ஏன் குறிப்பாக நான் கூறவேண்டும்? சமூக சாதீய அடக்குமுறைக்குள் மிகவும் கீழ்ப்படியில் இருக்கும் இந்த

**கே.டானியல்**

கட்டாயகள் எவ்வளவு தூரத்திற்குச் சாதீயக்கொடுமைகளை அனுபவித்திருப்பார்கள் என்பதை உணர்த்துவதற்காகவும், அறியவைப்பதற்காகவும் தான். இந்தள் நெடுகச் சாதியைப்பற்றித்தான் எழுதுது... ஏன் இப்படிச் செய்யுது என எனிவே கேலிக் கீதம் பாடுபவர்களுக்கு... நான் ஏன் இப்படி எழுதுகிறேன் என்பதை உணர்ந்து இவர்களும் அதனைச் சற்று தொட்டுப்பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான்...

இவை டானியல் தன்னைப்பற்றி எங்கதை என்ற நூலில் குறிப்பிடப்படுக்கும் வார்த்தைகளேயாகும். இதுபோதும் டானியல் என்ற சாதாரணமான சமூக சாதிய ஒடுக்குமுறைகளைக் குறித்த எதிராக எப்படி ஒரு இலக்கியப்போராளியானார் என்பதைப் புரிந்துகொள்வதற்கு...

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் பிறந்த அவரின் வளர்ச்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் - தமிழ் மக்கள் மத்தியில் சாதிய அடக்குமுறை கொடுமைகள் அதிகரித்திருந்தது. அந்தக் கொடுமைகள் அசிங்கமானவை தமிழினத்திற்கே தலைக்குனிவையும் அவமானத்தையும் தருபவை... வார்த்தைகளால் எழுதப்பட முடியாதவை.

தன்னைச் சுற்றியுள்ள ஒரு சமூகத்தவரால் தான் பிறந்து வாழும் சமூகத்தவர் எவ்வாறு மனித நேயமற்று ஒடுக்கப்படுகிறார்கள் என்பது மனித உணர்வு கொண்ட எந்த சாதாரணனையும் பாதிக்கவே செய்யும். அதற்கெதிராக கிளர்ந்தெழவே வைக்கும்.

அப்படிச்செய்யாதவன் மனிதனேயல்ல.... அடிமைதான்.

டானியல் அடக்கி அடிமையாக அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. அதனால் அதனை சாடி அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் மனிதனாக அவர், முகிழ்ப்புக் கொண்டபோதே அவர் இலக்கிய போராளியாக தன்னை உருவாக்கிக்கொள்ள நேர்ந்தது.

முன்னர் இழிசனர் இலக்கியம் படைத்த எழுத்தாளர் என்றும் பின்னர் தற்போது தலித் இலக்கியத்தின் மூலவர் என்றும், வர்ணிக்கப்படும் டானியல் இலக்கியப்பதிவுகளைக் குறித்த வரலாற்று இலக்கியங்களேயாகும்.

"யாவும் கற்பனை" என தமது படைப்புக்களுக்கு அடிக்குறிப்பிடும் போலிக் கற்பனை வாத இலக்கியவாதிகளுக்கு மத்தியில் உண்மையை உண்மையாகவே ஒளிவு மறைவின்றி மக்கள் மொழியில் தனக்கு தெரிந்த இயல்பான முறையில் எழுதியவர் டானியல். அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் சமூகத்தின் குரலாகவும் அவர்களுக்கான பாதுகாப்புக் கவசமாகவும் அவரது இலக்கியப்படைப்புகள் ஒவ்வொன்றாக அணிவகுத்து நின்றன என்றால் அது மிகையல்ல.

யாழ் மண்ணின்-தமிழ் மக்களின் ஒரு காலத்தைய வரலாற்றின் கறைபடிந்த துயர் நிறைந்த காலகட்டத்தை சமூக- அரசியல் மற்றும் மானுட நோக்கில் இலக்கியப்பதிவுகளாக்கிக் கொண்டவை அவரது படைப்புக்கள். போராளிகள் காத்திருக்கின்றார்கள் பஞ்சமர் (இருபாகங்கள்) கனல் கோவிந்தன், டானியல் குறுநாவல்கள், பஞ்சகோணங்கள், அடிமைகள்... என நீளும் அவரது படைப்புகள் யாவும் வியந்து பாராட்டப்பட்டதும் உண்டு. வீண் என விமர்சிக்கப்பட்டதும் உண்டு. ஆனால், அவர் அவைபற்றி அக்கறை கொண்டது கிடையாது.

"உண்மை கசப்பானது மட்டுமல்ல.... அது சுடவும் செய்யும் அதற்கு நானென்ன செய்ய முடியும்... நான் உண்மையைத்தான் எழுதுகிறேன்.. எனக்குத் தெரிந்ததும் புரிந்ததும் இதுதான்..." என்பார் அவர். அவரது அரசியல் போக்கு பற்றி விமர்சிப்பவர்களும் உண்டு. தேசிய இனப்பிரச்சினையில் அவர் சரியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை... அது பற்றி எதுவும் எழுதவில்லை எனக்குறைகாண்போரும் உண்டு. அவர் மானுட அடக்குமுறைக்கு எதிராக இறுதிவரை எழுதினார்.... பேசினார் வாழ்ந்தார் என்பது மட்டும் உண்மை.

சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்மக்களை வழிநடத்தின விதம் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர்களின் தேர்தல் கால நிலைப்பாடுகளை முரணாக பின்னர் செயற்படும் போலித்தன அரசியல் போக்கை அவர் முற்றாக நிராகரித்தார்.. அவ்வளவுதான்.

மேதாவித்தனம் காட்டி தம்மை பெரும் அறிவாளி விமர்சகர்களாக இனங்காட்டுவோரின் இலக்கிய நாகரிகம் அவருக்குப்பொருந்தாத ஒன்று அவரின் தண்ணீர் நாவலை பஞ்சமரைப்படிப்போர்கள் அவரின் குமுறும் ஆத்மாவை புரிந்து கொள்ள முடியும்.

அவர் ஒடுக்கப்பட்ட தனது சமூகத்தவரின் உளக் குமுறலை இலக்கியமாக்கியதால் அவை வாழும் இலக்கியமாகி நிற்கின்றது.

வெறும் ஐந்தாம் வகுப்பு மட்டும் எட்டிய அழுத்தங்களுள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த டானியல் அதை தகர்த்தெறிந்து முனைப்புக் கொண்ட படைப்பாளியாகி எழுதிய படைப்புகள் இன்று பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றதென்றால் அது அவருக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

அட்சயன்

# கார சாரம்

## நாங்கள் என்ன போத்துக்கேயர் காலத்துக்கா போறம்...?

அண்மையில் நடந்த ஒரு அதிசய நிகழ்ச்சி. சிங்கள தேசத்தின் தலைவியும், அதி உத்தம சனாதிபதிக்கும்,ஜே.வி.பி என்றழைக்கப்படும் மக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர் அநுர திஸாநாயகாவுக்கும் நடந்த உரையாடல் நிகழ்ச்சி. அம்பாந்தோட்டையில் ஆயிரம் குளங்கள் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளன. இந்த அங்குரார்ப்பண (தொடக்க) விழாவில் பிரதம அதிதி (விருந்தினர்) யாகக் கலந்து கொள்வீர்களா? என்றார் ஜே.வி.பி அமைச்சர் சனாதிபதிக்கோ மாபெரும் அவமானமாகப் போய் வதாவது.

அதிகரிச்சுவாற சனத்தொகையின்ர உணவுத்தேவைக்கு அமெரிக்கன் மாவும் சீனா அரிசியும் பர்மா, யப்பான், இந்தியா பருப்பு வகையும் இருக்க, குளமென்னத்துக்கு குளம். இலங்கையின்ர குள அமைப்புகள் உலகப்புகழ் பெற்றது. அப்ப,அரசன்ர பிரதான கடமையே குளங்கள் அமைக்கிறதாகத்தான் இருந்தது. அம்மையாற்ற பரம்பரையில தாங்கள் கட்டிய குளங்களையே தங்கட சொத்தாகக் கருதி அதுக்குள்ளேயே உயிரை விட்டவர்களும் இருக்கினம். பிறகு பிறகு எங்கட மண்ண ஆக்கிரமிக்க வந்தவையால தான் விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டதும், கூப்பன் மா புழக்கத்துக்கு

வடிவாக்காட்டுது. ஆயுதம் வாங்க, மக்களைக்கொல்ல, எல்லாம் நேர மெடுத்தே செய்தவா இல்லத்தானே. அடுத்த தேர்தலுக்குப் பிறகு அம்மா அரசியல் அநாதையாத்தானே போகப்போறா அதோட எந்தெந்த நாட்டிலயெல்லாம் வங்கியிருப்போ அந்தந்த நாட்டிலயெல்லாம் குடியிருக்கப் போறாவாக்கும். இப்ப உலகமயமாக்கலுக்கு திணிபட்டு உள்ளதையுங் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன். எண்டு இருந்த கொஞ்ச நஞ்ச வளத்தையும் ஊரவைக்கு வித்துக்கொண்டிருக்கிறா. பின்னக் கதையோடகதை ஜே.வி.பிக் காறரென்ன குளங்கள் வெட்ட வன்னிக்கும், ஏன் வடக்குக்கும் கிழக்குக்குமே வரப்போகினம்? அதுகுமில்லைத்தானே அவயட திட்டங்களெல்லாம் தங்கட எல்லைக்க தானே - எங்கட மண்ணுக்குள்ள இருக்கிற பிரச்சினையும் இதுதானே- குளங்களத்திருத்தி ஏதோ நல்லது செய்யவெண்டு காசைக்கட்டிக் கொண்டு வந்திருக்கிறவை தங்கட வேலையளைத் தேவையான இடங்கள்ள செய்திருக்கினமோ. இல்ல செய்யினமோ எண்டா

விட்டது இந்தக் கேள்வி. பின்னே சற்றலைட் (சந்திரிகை) அம்மையாரை குளம் தோண்ட அழைக்கலாமோ. "குளங்களைத் தோண்டுவதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை'' என்று பொட்டென்று நெத்தியிலடித்த மாதிரிப் பேசி விட்டார். புதை குழிகளைத் தோண்டிப் பதவிக்கு வந்தவர், புதிய புதிய புதைகுழிகளை இந்தமண்ணுக்கு அளித்த பெருமைக்குரியவர். குளம்...ங குளங்களைத் தோண்டு

வந்ததும். நித்தம் நெல்லஞ்சோறு தின்னுறது தமிழற்ற வழக்கம். இண்டைக்கு குளங்கள் பாழடைஞ்சு, நகரப்பகுதிக் குளங்களில வீடுகளெழும்பி நிக்குது, இன்னுமொரு வேடிக்கை சொல்லித்தான் தீரவேணும். வவுனியா மாவட்டத்தில குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு பவுசரில குடிநீர் விநியோகிக்கப் போகினமாம். குளங்கள் வெட்டுறதுக்கு, சனாதிபதிக்கு நேரமில்லை எண்டு சொல்லுறது, அவவின்ர தேசப்பற்றை

இல்லை. வசதியான நகரங்களை அண்டின இடங்கள்ள நாலுபேர் புழங்கிற இடமாப்பாத்து கலர் கலரா வாகனங்கள்ள வந்து போறவை, இந்த மண்ணில வாழுறவையிட வாழ்வியல் முறையள ஆய்வுசெய்யிறதிலயும் மினக்கெடுகினம். எனக்கென்னவோ நாங்கள் பழையபடி போத்துக்கேயர் காலத்துக்க போறமோ எண்டும் சந்தேகமாக் கிடக்கு ஏன் எங்கடயாக்கள் கண்ணைத் திறக்கினமில்லை.

மாயா

"ஈட்டி எட்டினமட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்'' எண்டொரு பழமொழி இருக்கு. இதப்பற்றி எல்லாம் பாக்கோணுமெண்டு நான் நினைக்கேல்லத்தான். ஆனால், இந்தப் பணத்தைக் கண்டாப் பிணமும் வாய் திறக்குமெண்டு சொல்லுவினம். பணத்தைக் காணாட்டி பிணங்கிடக்கிற கதவும் திறக்காது எண்டத நான் அண்மையில்கண்டன். சும்மா சொல்லக்கூடாது. மருத்துவமனையொன்று, பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்தியிருக்குதெண்டு, தாரைதப்பட்டை எல்லாம் முழக்கித்தான் சொன்னவை. அதோட போச்சே. வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

சாமானுகள வாங்கு.... அரிசியப் பாத்து வாங்கு.... சரி ...ஏறு. ரெஸ்ட் கவுஸுக்கு விடு.... வெளியில நிப்பாட்டு இந்தா... இந்த லிஸ்டுக்கு காசைக்கட்டிவிடு..கட்டியாச்சா.... நீ காரில இரு நான் போயிற்று வாறன். (ஐயா இறங்கி காசுகட்டின குடிவகைய குடிச்சிட்டு கோல்லீப் ஊதியபடி வருகிறார்) ம்....இப்ப பொடிகிடக்கிற இடத்துக்கு விடு...ம்.... ஆர் சாக்காட்டின நீதானே. ..ம்.... .நீதவானட்டப் போய்ச் சொல்லு... (இவ்வளவும். பொலிஸ்) இனி, திரும்பப்போய் திரும்ப வந்து மனிசியின்ர தாலியக்கழட்டி ஈடுவச்சு காசு பிரட்டி உடலைக் கொண்டே பிரேத அறை வாசல்ல வச்சா,வாசல் காவல் காரனுக்கு கதவு திறக்க ஓடர்

உடன பாத்துக்கொணந்திரலாமாம்... சங்கிலி அடைவு கடைக்குப் போனது. வாகனம், மொழிபெயர்ப்பாளர், முழிபெயர்ப்பாளர் (செத்தவரின் தாய் பிள்ளை உறவுகள்) பொலிசையாமார், வாகனம் ரெடி ஏழுமணிக்கு வரச்சொன்னவை. எட்டுமணி, ஒன்பது மணி ஆங்காங்க ஆசுப்பத்திரி விறாந்தை வழிய வாடிப்போய் இருக்குதுகள். சும்மா போறவனும் ஒருக்கா வந்து அபிப்பிராயம் சொல்லுறான்! நீங்கள் யோசியாதையுங்கோ, இது அவரைப்பிடிச்சாத்தான் செய்யலாம். செலவைப் பாத்தா பொடி போகாது!. ஆளாளா காசு கறக்க நிக்கிறான். பறிகுடுத்தவன் செத்த சவத்தை

## எப்ப கேள்வி கேட்கப் போறம்...?

செய்யிறதைப் பெரிய விழாவாகவே கொண்டாடினதும், பிறகு..... அந்தவாகனத்தை தனியார் ஒருவர் தன்ர சுயதேவையளுக்காக ஓடித் திரியிறார் எண்டதையும் கூட, பத்திரிகையள் விளம்பரமா, துலாம்பரமா செய்தியாக்கினவை தான். இப்ப வைத்தியசாலைக்குப் போய், இக்கட்டுகள்ள மாட்டுப் படேக்கதான் இதெல்லாம் ஞாபகத்துக்கு வந்து குழப்புது. ஆசுப்பத்திரிக்க ஒரு சந்தேகத்துக்கிடமான சவம் வருகிதெண்டா சாகக்குடுத்தவைக்கு செத்தவீடு, 'அ...ஆர் செத்த .... உன்ர தங்கச்சியோ.... என்னமாரிச் செத்த...ங....பொடியப் பாக்கோணும்....ம்.....வாகனமேதும் கொணந்தநீங்களோ..... ' எடுங்கோ..... ம் மார்க்கட்டு விடுங்கோ... எண்டு ஆரம்பிச்சார் பொலிஸையா.

''சேர் பொடி... அங்கயில்லை....''

''நீ.... பேசப்படாது. மார்க்கட் வந்திட்டுது. அரைக்கிலோ தக்காளி, முருங்கைக்காய் இந்தா இந்தலிஸ்ட்டில உள்ளதுகளை வாங்கிக் கொண்டா... ஓய்...ஒரு கோல்ட்லீவ் வாங்கித் தந்திட்டுப் போ.... மரக்கறிய உள்ளுக்கவை.ஏறு, கடைத்தெருவுக்கு விடு, இந்தா இந்தலிஸ்டில உள்ள

வரவேணும். ஆஸ்பத்திரிக்கு டீஎம்மோ இல்லை. என்னசெய்யிற நூற்றியம்பது ரூபா குடுக்க கதவு திறக்குது. இனி... டாக்குத்தர் வரமுதல் சவம் நாறிப்போகுமே. அதை குளிரில வைக்க ஐநூறு ரூபா.... பிறகு அதில நிக்கிறியளே பொலிசையாமர்ருக்கு சாப்பாடு, காவலாளிக்கு கன்ரீன் சிலவு. அங்காலு மிஞ்சாலும் ஓடியோடிக் கதைக்கிற "சிண்"ணுகளுக்கு சோடா. போக வரஆட்டோ எல்லாம் முடிச்சபிறகும் டாக்குத்தர் இல்லையே....... ஆளில்லாத்துக்கம் அழுதாலுந் தீராது சோற்றில்லாத்துக்கம் சொன்னாலுந் தீராது. வீட்டில பந்தல் போட்டு கதிரையள் வாடகைக்கு எடுத்துப் போட்டு செத்தவீட்டுக்கு சனம் வந்து காத்திருந்து "பொடி வந்திட்டுதே" பொடிவந்துட்டுதோ எண்டு துளவாரம் போட, வீட்டில உள்ளவை வாறவையக் கட்டிக் குழற, போனவை வெறுங்கையா வருகினம். நாளைக்குத்தான் டொக்டர் வருவாராம். அடுத்தநாள் விடிய அதே நாடகம் பொலிசையாவோட தொடங்கி திரும்ப அரங்கேறி, பொழுதுபட, அதைப் பரிசோதிக்கிற வசதி இஞ்ச இல்லையாம். அம்புலன்ஸில போறதெண்டா அஞ்சாறு நாள் செல்லுமாம். நீங்களா வாகனம் பிடிச்சா

அடக்கம் பண்ணிப் போட்டு ஆசார முறைப்படி காடாத்து எட்டு அந்திரட்டியச் செய்து போட நிக்கிறான். ஊருச் சனம் விடுப்புப் பாக்கத்திரியுது. இதுவே அன்றாடம் உழைச்சுத் தின்னுற பரம ஏழைக்குடும்பத்துக்கு நடந்திருந்தா அந்தச் சனம் என்ன செய்யும். "ஊசி ஒண்டு போட முன்நூறு ரூபாயாம். எண்டார் என்ர நண்பர் ஒருவர் அது காசுள்ளவனுக்கு'' இல்லாதவனுக்கு, இல்லாதவன் சாகட்டும், செத்தபிறகும் காசுக்கலையிறாங்களே- குடுத்தாத்தானே சவமெடுக்கலாம். சும்மா விடு. இப்பகோவில்ல போய் கடவுளோட கதைக்கிறண்டாலும் ஒராள் வச்சுத்தானே கதைக்கிறம், அதுக்கும் காசுதானே வேணும் ம்... பணமில்லாதவன் பிணம்.பிணம் தேவையெண்டாலும் பணந்தான் வேணும். சீரழிஞ்சு போய்க்கிடக்கிற சிறிலங்கா நிர்வாகத்துக்கு இது ஒரு தினையத்தனை உதாரணந்தான்- எண்டைக்கு சவம் எழும்பி மன்னிக்கோணும் சனம் எழும்பி கேள்வி கேக்கப்போகுது இவ்வளவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நடந்தது பாருங்கோ.

# யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழுவா? யுத்தக் கண்காணிப்புக்குழுவா?



***தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதென்றால் இடைக்கால நிர்வாக அமைப் பொன்றை ஏற்று அதன்மூலம் ரோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட நிதியைப் பெறவேண்டும். ஆனால் அந்த நிதிமூலம் எஸ்.எல்.எவ்.பியே பலமடையும் என்ற அச்சம் இப்பொழுது ஜே.வி. பியினர் மத்தியில் காணப்படுகிறதாம்.***



யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு வரவர யுத்தக்கண்காணிப்புக் குழுவாக மாறிவருகிறதா எனக் கேட்கத் தோன்றுகிறது. கிழக்கிலும் கொழும்பிலும் நடப்பதை வைத்துப் பார்த்தால் அப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு மென்தீவிர யுத்தத்தை இனியும் எவ்வளவு காலத்திற்குத்தான் யுத்தநிறுத்தமீறல் என்று சொல்லிக்கொண்டிருப்பது?

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுமட்டுமல்ல இதைப் பின்னிருந்து இயக்கும் மேற்கு நாடுகளும்தான் இந்த மென்தீவிர யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர இயலாதிருக்கின்றன.

அண்மையில் அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக்கடற்படைத் தளபதி இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிற்கு விஜயம் செய்தமை என்பது ஒரு யுத்த முஸ்தீபாகவே பரவலாக மீடியாக்களில் காட்டப்பட்டது. ஆனால் அரசாங்கத்துடன் இராணுவ ரீதியாகவும் நெருங்கி ஒத்துழைக்கத்தயார் என்ற சமிக்ஞையை காட்டி சந்திரிகாவை தம்வசப்படுத்தி சமாதானத்தை நோக்கி அவரை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அமெரிக்கா மேற்கொண்ட ஒரு நகர்வாகவும் இதை எடுத்துக்கொள்ள முடியும்.

எனினும் மேற்கு நாடுகளில் இத்தகைய நகர்வுகளாலும் கூட சந்திரிகாவை சமாதானத்தின்பால் சாயவைப்பது கடினமாகவே உள்ளது.

இப்பத்தியில் சில கிழமைகளிற்கு முன் சொல்லப்பட்டதுபோல மூன்று காரணங்களால் சந்திரிகா தடுமாறுகின்றார். ஒன்று இந்தியா மற்றது ஜே.வி.பி மூன்றாவது அவருடைய பதவி ஆசை.

அவருடைய பதவிக்காலம் முடிந்தபின் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கவேண்டுமென்றால் ஏதாவது ஒரு குறுக்குவழியை அவர் கண்டுபிடிக்கவேண்டும். யுத்தம் இத்தகைய குறுக்குவழிகளில் ஒன்றாக இருக்கும்வரை அவர் இந்தியாவை மீறி அமெரிக்காவின் பக்கம் போகமாட்டார்.

இந்நிலையில் யுத்தம் ஒன்று வெடிக்குமாயிருந்தால் அதில் படைத்துறை மட்டத்தில் அவரைப் பலப்படுத்தப் தாங்கள் தயார் என்பதையும், எனவே அவர் இந்தியாவின் பக்கம்சாய்ந்து சமாதானத்தை முறிக்கத்தேவையில்லை என்பதையும் சூசகமாக உணர்த்துவதே பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்கக் கடற்படைத்தளபதியின் விஜயத்தின் உள்நோக்கம்.

அதாவது யுத்தநிறுத்தத்தை அரசாங்கத்தரப்பு முறிக்காதவரை சமாதானமோ, யுத்தமோ அரசாங்கத்தைப் பாதுகாக்க அமெரிக்கா தயார் என்பதை அமெரிக்கா அவ்வப்போது சூசகமாக வெளிக்காட்டிவருகிறது.

ஒஸ்லோபிரகடனம், டோக்கியோ பிரகடனம் என்பவற்றின்படி ஐக்கிய இலங்கைக்குள்தான் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற உத்தரவாதத்தை அமெரிக்கா இந்தியாவிற்கு கொடுக்குமாயிருந்தால், இந்தியா சமாதான முயற்சிகளை நேரடியாக குழப்பாது என்று அமெரிக்கா நம்புகிறது. எனவே இந்தியாவை குறிப்பிடத்தக்க அளவிற்கு கையாளலாம் என்றும் அமெரிக்கா நம்புவது தெரிகிறது.

ஆனால் இங்கேயுள்ள பிரச்சினை சந்திரிகாவின் பேராசைகளைப் பாதுகாக்கும் ஓர் அரசியலும், ஜே.வி.பி.யும்தான்.

தனது பேராசைகளைப் பாதுகாக்கும் ஓர் அரசியலிற்கு சந்திரிகா தலைமை தாங்கிக் கொண்டிருக்கும்வரை ஜே.வி.பியை உடணடியாக முறித்துக்கொள்ள முடியாது. அதுபோல இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை செய்வதற்கான அவருடைய கனவுகளையும் கைவிடமுடியாது.

அவருடைய பேராசைகளைப்பாதுகாப்பதற்கான அதிகம் பத்திரமான ஒரு குறுக்குவழியை அவர் கண்டுபிடிக்கும்வரை இப்பொழுது நிலவும் தேக்கத்தை உடைக்கமுடியாது. அதாவது நிலவும் மென்தீவிரயுத்தத்தை தடுத்து நிறுத்தமுடியாது.

அப்படி ஒரு ஒப்பீட்டளவில் பாதுகாப்பான ஒரு குறுக்குவழியை அவர்கண்டுபிடிக்கும்வரை ஜே.வி.பியுடனான உறவைக் குறித்தும் அவர் ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க மாட்டார்.

ஜே.வி.பியிற்கும் அவரிற்குமான கூட்டு தெறிக்கும் நிலைக்குக்கிட்ட வந்துவிட்டது.

"அளவிற்கு மிஞ்சி தாடி வளர்த்து, தொப்பியணிந்து தமது தொண்டை கட்டும்வரை தெருக்களில் கூச்சல்போடும் பைத்தியக்காரர்கள் எமது கட்சியில் இருந்ததில்லை" என்று கூறுமளவிற்கு ஜே.வி.பி யுடனான அவரது உறவு கசக்கத் தொடங்கிவிட்டது.

ஜே.வி.பி அவரை இரு முனைகளால் சுற்றிவளைக்கப் பார்க்கிறது. முதலாவது அரசிற்கு எதிரான தொழிற்சங்கப் போராட்டங்களை திரை மறைவில் இருந்து ஊக்குவிப்பது, இரண்டாவது இடைக்கால நிர்வாக அமைப்பை மூர்க்கமாக எதிர்ப்பது.

ஜே.வி.பி இப்படி ஒரு முடிவிற்குப் போகவலிமையான ஒரு காரணம் உண்டு. அது என்னவெனில்

**நிலாந்தன்**

- அவர்களுடைய தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை அவர்களால் நிறைவேற்றமுடியவில்லை என்பதோடு இனிமேலும் கிட்டிய எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கையும் கருகத் தொடங்கியமையே.

இப்போதுள்ள பூகோளப் பொருளாதார யதார்த்தத்தின்படி ஜே.வி.பியின் கலப்புப் பொருளாதாரக் கொள்கை எப்போதோ காலாவதியான ஒரு பொருளியல் கனவு என்பதை ஜே.வி.பி யிற்கு வாக்களித்த மக்களும், அடிமட்ட ஜே.வி.பி. உறுப்பினர்களும் மெல்ல மெல்ல உணரத் தொடங்கிவிட்டார்கள். தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஜே.வி.பி. தனக்கெதிராக மெல்லத் திரண்டு வரும் வறிய சிங்களவரின் கோபத்தை திசைதிருப்பவே இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை முரட்டுத்தனமாக எதிர்க்கிறது. இந்த எதிர்ப்பில் இருக்கும் இனவாதத்தால் வறிய சிங்களவரை திசை திருப்பி விடலாம் என்று ஜே.வி.பி நம்புகிறது. இது ஏற்கனவே யு.என்.பி யும் எஸ்.எல்.எவ்.பி யும் கையாண்ட ஒரு உத்திதான்.

இலங்கைத்தீவின் ரூபாவின் பெறுமதி ஏனைய ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாணயங்களுக்கு எதிராக வீழ்ச்சியுறத்தொடங்கிவிட்டது.

விலைகள் படுவேகமாக ஏறத்தொடங்கிவிட்டன. மானியங்களைக் குறைக்கவேண்டிய ஒரு கட்டம் வந்துவிட்டது. நாட்டின் நீர் முகாமைத்துவத்தைக்கூட தனியார் மயப்படுத்தும்படி ஒரு நிர்ப்பந்தம் உதவி வழங்கும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து வரத்தொடங்கிவிட்டது.

இந்நிலையில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதென்றால் இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை ஏற்று அதன்மூலம் ரோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட நிதியைப் பெறவேண்டும். ஆனால் அந்த நிதிமூலம் எஸ்.எல். எவ்.பியே பலமடையும் என்ற அச்சம் இப்பொழுது ஜே.வி.பியினர் மத்தியில் காணப்படுகிறதாம்.

சந்திரிகாவுடனான இதுவரைகால கூட்டு அரசாங்கத்தின் அனுபவத்தின்படி அவர்கள் அப்பிடியொரு முடிவிற்கு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே சந்திரிகாவைப்பலப்படுத்தும் சமாதானத்தைவிடவும் நாட்டைக் குழப்பும் அரசியல், ஏற்கனவே நாட்டை இரு தடவைகள் குழப்பிய ஜே.வி.பி.யிற்கு வசதியானதாக தோன்றுகிறது போலும். இது விடயத்தில் இப்பொழுது ஜே.வி.பி. இருகூறுகளாகி நிற்பதாகவும் கூறப்படுகிறது. இதன்படிலால் கந்த அணி, வீரவன்ச அணி என்று இரு அணிகள் ஜே.வி.பிக்குள் உருவாகி வருகின்றனவாம் இந்நிலையில் ஜே.வி. பியைக் கையாள்வது சந்திரிகாவிற்கு வரவரக் கடினமாகிக் கொண்டே போகிறது.

1970களில் அவரது தாயாராலும் 1980களின் இறுதியில் பிரேமதாசவாலும் நசுக்கப்பட்ட ஒரு சக்தியை அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார். அவருடைய பேராசைகளைப் பாதுகாப்பதற்காக வைத்துக்கொண்ட ஒரு உறவின் விளைவே இது. பரஸ்பரம் ஒருவர் மற்றவரை உறிஞ்சி எப்படித்தம்மைப் பலப்படுத்திக்கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் உருவான ஒருஉறவு அது.

அதில் ஒருவர் மற்றவரை எந்தளவிற்குச் சுரண்டலாம் என்பதில் பரஸ்பரம் வரையறைகள் தோன்றி விட்டன.

சமாதானத்தை விட யுத்தம் பரவாயில்லை என்ற முடிவை நோக்கி ஜே.வி.பிதிரும்பிவிட்டது.

சந்திரிகாவும் அப்படியொரு திருப்பத்துக்கு வரக்கூடும். அது அவருடைய பேராசைகளைப் பாதுகாக்கும் எத்தகைய ஒரு குறுக்குவழியை அவர் கண்டுபிடிக்கப்போகிறார் என்பதில்தான் பெரிதும் தங்கிருக்கிறது.

அவர் அப்படியொரு குறுக்குவழியைக் கண்டுபிடிக்கும் வரை ஜே.வி.பியைத் தாங்கிக் கொள்ளக்கூடும். ஆனால், அதுவரை ஏற்கனவே மெலிந்துவிட்ட யுத்தநிறுத்தம் இப்பொழுது நிலவும் மென் தீவிர யுத்தத்தை தாங்குமா? ●




# நறுக்கென...

கடைசியில் ஜே.வி.பி சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடவுள்ளதாக செய்தி வந்துள்ளது.

ஒரு காலத்தில் ஜே.வி.பியின் மறக்கப்பட்ட அதன்முதல் தலைவர் ரோகண விஜேவீரவுக்கும் இங்குள்ள சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்குமுள்ள தொடர்பு பிரசித்தமானது. சீனாவினூடாகவே வடகொரியத் தொடர்புகள் விஜேவீரவுக்கு ஏற்பட்டதென்றும் 1971ஏப்ரல் கிளர்ச்சிநடவடிக்கைகளுக்கு இதுவே பின்னணிச்சக்தியாக இருந்ததெனவும் பேசப்பட்டது.

அந்தக்கிளர்ச்சியை அடுத்து வடகொரிய தூதரகம் இலங்கையில், அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசால் மூடப்பட்டவரலாறும் உண்டு. சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர்களான நா.சண்முகதாசன், எஸ்.டி.பண்டாரநாயக்கா உட்பட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவரலாறுமுண்டு.



பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் விடுதலை செய்யப்பட்ட விஜேவீரவும் அவரது தோழர்களும் புரட்சிகர தோற்றங்களை சனநாயக மாற்றங்களாக மாற்றிக்கொண்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் குதித்ததும், தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டதையடுத்து 1987 - 1990காலப்பகுதிக்குள் மீண்டும் கிளர்ச்சிஅரசியலில் இறங்கி அராஜக நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அதனை இரண்டாவது புரட்சி எனக்காட்ட முயன்றதும் இலங்கையின் இடதுசாரிகளின் வரலாற்றை முடித் துவைக்க உதவிய கைங்கரியங்களேயது, அந்தக் கிளர்ச்சியுடன் ஜே.வி.பியின் சிவப்புச்சாயம் வெளுத்ததுடன் ரோகண விஜேவீர உட்பட அதன் சகல தலைவர்களும் பூண்டோடு பிரேமதாச அரசினால் அழிக்கப்படவும் நேர்ந்தது.

அப்போது ரோகணவிஜேவீரவை ரகசியமாக காட்டிக் கொடுத்துவிட்டு தப்பியோடித் தலைமறைவானவர்களே

## பழைய வரலாற்றை உருவாக்க ஜே.வி.பி யினர் முயல்கின்றனரோ?

இப்போதைய ஜே.வி.பியின் நெறியாளர்கள் எனக் கூறப்படுவதுமுண்டு.

ரோகணவிஜேவீரவின் மனைவியும் பிள்ளைகளும் இன்னமும் கடற்படைப் பாதுகாப்பில் இருக்கவைத்துவிட்டு அமைச்சர்களாகி அரசியலில் ஒண்டிக்கொண்டு ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய ஜே.வி.பியின் தலைவர்களின் செயற்பாடுகள் இதனை நிரூபிப்பதாகவே உள்ளது.

புரட்சிவாதிகள், சந்தர்ப்பவாதிகளாகி, தற்போது இனவாதிகளாகிவிட்ட நிலையில் மீண்டும் தாங்கள் இடதுசாரிகள்- சிவப்புகள் - தான் எனக்காட்டிக்கொள்ள பகீரதப் பிரயத்தனம் எடுப்பதும் தெரிந்ததே.

வரும் செப்டம்பர் 3முதல் 5வரை சீனாவில் நடைபெறவுள்ள ஆசியநாடுகளின் அரசியல் கட்சி மாநாட்டில் இம்முறை ஜே.வி.பியும் கலந்துகொள்ளப்போகிறதாம்... அப்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உடன்பாடும் செய்யப்போகிறதாம்...!

சரி... சிறிமாவோ காலத்தில் அவர் ஆட்சிபீடம் ஏறியதற்கு பின்பலமாக இருந்த ஜே.வி.பியே பின்னர் அவர் ஆட்சியை அழிக்க கிளர்ச்சியை மேற்கொண்டது தெரிந்தவிடயமே... ஆனால் அதனை இந்திய உதவியுடன் அவர் துவம்சம் செய்தார்...

இப்போது மகளின் - சந்திரிகாவின் காலத்தில் பழையவரலாற்றை உருவாக்க அவரது ஆட்சி மீண்டு மலர உதவிய ஜே.வி.பி முயல்கிறது போல் தெரிகிறது...அவர் என்ன செய்யப்போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போம்...!

---

ஒரு ஆட்சியின் அலங்கோலத்திற்கும் பொறுப்புணர்வற்ற தன்மைக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்பாடுகள் மிகவும் சிறந்த உதாரணமாகும்.



ஆளுக்காள் முரண்பாடான அறிக்கைகளை விடுவதிலும், அச்சுறுத்தல் விடுவதிலும் பின்னர் அதை மறுத்து அறிக்கை விடுவதிலும் சனாதிபதி முதல் அக் கட்சியின் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் வரை ஒருவரையொருவர் மிஞ்சுபவர்களாகவே உள்ளனர்.

ஒரு கட்டுக் கோப்பான இறுக்கமான, அரசியல் நாகரிகங்களை உணர்ந்து செயற்படக் கூடிய ஆட்சியாக இன்றைய ஆட்சி இருப்பதாக தெரியவில்லை. சனாதிபதி ஒரு பேச்சு பேசுகிறார் என்றால் அவரது செயலகத்திலிருந்து வெளியாகும் அறிக்கை

## ஆட்சியின் அலங்கோலத்துக்கு ஐ.தே.ம.முன்னணியே சாட்சி

இன்னொன்றை உள்றுகிறது.

ஜே.வி.பி யினர் வேறொன்றை கூறி சனாதிபதியையும் அவரது செயலகத்தை அச்சுறுத்தும் படியில் அறிக்கைகளை விடுகின்றனர்.

பிரதமர் தானும் தன்பங்கிற்கு போகுமிடமெல்லாம் ஏதோ ஒன்றை அலம்பி வருகிறார்.

இடையே அநுரா வேறு தானும் உயிரோடுதான் இருக்கின்றேன் என்பதைக் காட்ட அர்த்தமற்ற வகையில் புலம்புவதும். கேட்கவே செய்கின்றது.

ஆளுக்காள் தனித்தனி அதிகாரம் காட்டுகிறார்கள். மிகவும் நெருக்கடி நிலவும் போதெல்லாம் சனாதிபதி சுற்றுப் பயணம் கிளம்பிவிடுகிறார்.

பிரச்சினையாகவும் பெருதாகிக்கொண்டே போவது குறித்து அரசோ சனாதிபதியோ ஆழமான தேசியப் பார்வையுடன் சிந்திப்பவர்களாக இல்லை...குட்டையைக் குழப்பி லாபம் பெறநினைக்கும் அரசியலே சிறிலங்காவின் ஆட்சி மரபாகி விட்டது.

உதாரணத்திற்கு ஒன்று; திருகோணமலை விவகாரம்:- திருகோணமலையில் விடுதலைப்புலிகள் புதிய முகாம்களையும் பதுங்கு குழிகளையும் அமைத்துவருவதாகவும். இதனால் திருகோணமலை துறைமுகத்தின் எதிர்காலப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தனக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறும் பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத் நிலைமைகளை ஆராய அங்கு [illegible]ஜயமும் செய்வதாக செய்திகள் வெளியாகின.

அதேசமயம் திருமலைத் துறைமு[illegible]திற்கு எந்தவிதமான அச்சுறுத்தல் நிலையும் ஏற்படவில்லை.. அதன் பாதுகாப்பு ஸ்திரம[illegible] இருக்கிறது என பாதுகாப்பு அமைச்சரான சனாதிபதியே அறிக்கையும் விடுகிறார்.பாதுகாப்பு அமைச்சருக்கும்- பாதுகாப்புச் செயலருக்குமிடையே ஒருங்கிணைப்பும் ஒருமித்த செயற்பாடுமில்லாத நாடு சிறிலங்காவேயாகும்.

யார் வேண்டுமானாலும் எதையாவது சொல்லி, மக்களைப் குழப்பி, பீதியில் இருக்க வத்துக்கொண்டே அரசியலை வெற்றிகரமாக நடத்தி காலம் கடத்தும் தந்திரத்தை ங்களப் பேரினவாதிகளிடம் தான் எவரும் கற்கமுடியும்.

---

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இடம் பெறும் சம்பவங்கள் எதுவும் யுத்தநிறுத்த உடன்பாட்டை பாதிக்காது' இவ்வாறான வார்த்தைகளைத் திருவாய்மலர்ந்தருளியுள்ளவர் வேறுயாருமல்ல. இலங்கைக்கான யப்பானிய தூதுவரான அக்கியோ சூடா தான்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், வன்னியிலிருந்து அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், ஆயுதக்குழுக்களுக்கு இராணுவம் பாதுகாப்பும் புகலிடமும் வழங்கி வருவதன் மூலம் ஏற்படுத்தப்படும் அசம்பாவிதங்களே போர்நிறுத்த உடன்பாட்டுக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தலாகும் என போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டேக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்ட வேளையில் ஜப்பானிய தூதுவர் கிழக்கில் வைத்து மேற்குறித்த கருத்தை கூறியுள்ளமையேயாகும்.

## கொஞ்சமாவது யதார்த்தமாய் பேசுங்களேன் தூதுவரே...!



மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் அரசியல் படுகொலைகள் மற்றும் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டோர் யாவர்? அவர்களுக்குப்பின்னணியில் நின்று செயற்படுத்துவோர் எவர்? என்பதை விபரித்துக்கூறவேண்டிய அவசியமேயில்லை.

தேசவிரோத தமிழ்க்குழுக்களைச் சேர்ந்த சிங்கள இராணுவத்துடன் இணைந்து துணைப் படையாகச் செயற்படும் நபர்கள்- குறிப்பாக அண்மைக்காலத்தில் இந்த நபர்களுடன் புதிதாகக் கைக்கூலிகளாக இணைந்துள்ள கருணா கும்பலைச்சேர்ந்த நபர்களே இந்தக் குழப்பத்தையும் பீதியையும் உண்டுபண்ணும் வன்முறைகளில் ஈடுபட்டுவருபவர்களாவர்.

இவர்களை நெறிப்படுத்தி வருவோர் இராணுவ புலனாய்வுப்பிரிவைச்சேர்ந்த போர் வெறியர்களான இராணுவ அதிகாரிகளேயாவர்.

இவர்களுடைய நடவடிக்கைகள் எதுவும் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படுபவையல்ல. இந்த குழப்பத்தை உண்டுபண்ணி அதன் மூலம் விடுதலைப்புலிகளைச் சீண்டி அவர்களை போர்க்கோலம் கொள்ளவைக்கும் உள்நோக்குடன் பாதுகாப்புத் துறையின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்படுபவையேயாகும்.

சமாதானத்தை எவையெல்லாம் பாதிக்குமோ அவற்றையெல்லாம் அரசாங்கம் செய்துகொண்டே பேச்சுவார்த்தைக்குத் தயாராவதாகவும் கூறிக்கொள்வது புலிகளின் பொறுமையைச்சோதிக்கும் நடவடிக்கைகளேயாகும்.

ஜப்பான் தூதுவருக்கு இவை குறித்து தெரியாமலும் இருக்கலாம். மட்டு மாவட்ட குழப்பநிலை யுத்த நிறுத்த உடன்பாட்டை பாதிக்காது என அவர் சொல்வது, மட்டக்களப்பில் குழப்பவாதிகளை இராணுவத்தால் பாதுகாக்கப்படும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் ஒன்றும் பாரதூரமானவையல்ல என்ற அர்த்தத்தை தொனிப்பதாகவே உள்ளது.

இப்படிச் சொல்லிய கையுடன் மட்டக்களப்பில் அபிவிருத்திகளை மேற்கொள்வது குறித்தும் அவர் ஆராய்ந்துள்ளாராம். அங்கு அன்றாட வாழ்வே அவலமாக இருக்கையில் அபிவிருத்தியைப்பற்றி பேசுவது அபத்தமாக இல்லையா?

நாம் அடிப்படை பிரச்சினைகள் - அன்றாடப்பிரச்சினைகளுக்கே தீர்வுகாண முயன்றுகொண்டிருக்கிறோம்; மதிப்பிற்குரிய ஜப்பான் தூதுவரே...!

---

இறுதியில் நோர்வே தனது சலிப்பையும், வெறுப்பையும் வெளிப்படுத்தியேவிட்டது. இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு தேவையில்லையெனில் தாம் அந்த முயற்சிகளில் இருந்து விலகிக்கொள்ளத்தயாராக இருப்பதாக நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான கிஜிஸ்டா ரொய்டா தெரிவித்துவிட்டார்.

உண்மையில் அவர் மனம் நொந்து தான் இவ்வாறு கூறியிருக்கிறார். ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மூன்று வருடங்களின் முன்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணையாளராகச் செயற்பட

## சமாதான முயற்சியில் நோர்வேக்கு சலிப்பு



நோர்வே அரசிடம் உதவிகோரியது அரசாங்கமேயாகும். நோர்வே அனுசரணைப் பணியை விடுதலைப் புலிகளும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது வேறுவிடயம்.

நோர்வே இலங்கையின் அழைப்பினை மதித்து இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்கான அனுசரணையாளராக செயற்பட முன்வந்தமையானது ஆழமறியாமல் காலைவிட்டு அவமானப்படும் விடயமாகி விட்டதை நோர்வே இப்போது உணரத்தொடங்கிவிட்டது.

தனது இந்த மூண்றாண்டுகால சமாதான சேவைக்கு எத்தகைய மதிப்பினை, கௌரவத்தை சிங்கள பெரும்பான்மை இன பேரினவாதத்தலைமைகள் வழங்கியுள்ளன என்பதை நோர்வே கவலையுடன் உணரத் தொடங்கிவிட்டது.

இந்த நாட்டின் தர்மத்தின் காவலர்கள் எனப்பீற்றிக் கொள்ளும் புத்தபிக்குகளே அமைதி முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நோர்வேயின் தேசியக் கொடியை எரித்து அவமதித்தமையானது அந்த நாட்டின் ஆத்மாவில் காயம் ஏற்படுத்தும் ரௌடித்தன நடவடிக்கையேயாகும்.

எத்தனை தடவை நோர்வேயின் விசேட தூதர் எரிக் சூல்ஹெய்மின் கொடும்பாவியை சிங்கள இன வெறியர்கள் தலைநகர வீதிகளில் எரித்திருப்பார்கள்?

ஆனால், நோர்வே பொறுமைகாக்கவே செய்தது. அது அந்த நாட்டின் அரசியல் நாகரிகமாகும்.

இதே சனாதிபதிதான் நோர்வே அரசிடம் எரிக்சூல்ஹெய்ம் பக்கச் சார்பாக நடக்கிறார். அவரைசமாதான முயற்சியில் இருந்து எடுத்து விடுங்கள் எனக்கோரிக்கை விடுத்தார்.

அப்போதும் நோர்வே நாகரிகமாகவே அவரை விலக்கிக் கொண்டது, பின்னர் இதே சனாதிபதிதான் ஆட்சிமாறியதும் நோர்வேக்கு அழைப்பும் விடுத்தார். அதே சூல்ஹெய்மை வரவேற்கவும் செய்தார்.

இரண்டையும் நோர்வே ஏற்றமைக்கு சனாதிபதியின் நேர்மையின் மீது கொண்டமதிப்பாலல்ல.. சமாதானத்தின் மீதான அபிமானத்தால் மட்டுமே.. தொடர்ந்தும் அழைக்கப்பட்ட கௌரவ விருத்தினரை அவமதிக்கும் நடவடிக்கைகளையே இன்றைய சனாதிபதியின் தோழர்களும், அவரை ஆதரிக்கும் அரசியல்வாத பிக்குகளும் செய்கின்றதை தடுக்கமுடியாது வேடிக்கை பார்க்கும் ஒருவராகவே சந்திரிகா இருக்கிறார்......

நோர்வேக்கு வெறுப்பேற்படாமல் என்ன செய்யும்? நோர்வே அரசே உங்காளுக்கே இவ்வளவு சலிப்பும் வெறுப்பும் ஏற்படுகிற தென்றால் நாலுதசாப்த காலமாக சமாதானத்தின் பேரால் சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு எவ்வளவு கோவம் இருக்கும் பாருங்கோ....!

**செங்குட்டுவன்**

# சிங்களப்புலனாய்வின் சவால்களும் சவால்களை நசுக்கும் தமிழர் புலனாய்வும்

நீலன்

தமிழ் தேசியத்தின் பலமான தளத்தை சீர்குலைத்து தமிழரின் எழுச்சியை நசுக்குவதற்காக சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் இராணுவப் போர்முறைகளை, அரசியற் போர் முறைகளை, புலனாய்வுப்போர் முறைகளை முன்னெடுத்தபோதிலும் தமிழ் தேசியம் பெரும் சிறப்புப் பலத்தோடு தாய் மண்ணில் வேரூன்றியுள்ளது.

இவ் ஆணிவேரைக் கொத்திப்பதம் பார்க்க சிங்கள ஆட்சியாளர்கள் வகுக்கும் வியூகங்களில் புலனாய்வுப்போர் முறைகள் மிக முக்கியமானதாக இருக்கின்றன.

இப்புலனாய்வு வியூகங்களைத் தகர்க்கும் போதுதான் சிங்களப் புலனாய்வுச் சவால்களை தமிழர் தேசம் எதிர்கொள்ள ஏதுவாக அமையும்.

ஆதலால் சிங்களப் புலனாய்வுச் சவால்கள் பற்றியும், அவ்வாறான சவால்களை தமிழர்களின் புலனாய்வு ஒத்துழைப்பால் நசுக்கப்பட்டு தமிழர்கள் பாதுகாக்கப்படுவது பற்றியும் இப்பொழுது கவனிப்போம்.

தமிழர் தாயகப் பகுதியிலுள்ள உட்கட்டுமானங்களான சமூகக் கட்டமைப்பு, தொழில்சார் கட்டமைப்பு, புலிகளின் நிர்வாகக்கட்டமைப்பு, பொதுநிர்வாகக் கட்டமைப்பு மற்றும் ஏனைய நிர்வாகக் கட்டமைப்புகள் என அனைத்து மையங்களுக்குள்ளும் ஊடுருவி புலனாய்ந்து கொள்வதில் சிங்களப் புலனாய்வு அமைப்பு போதிய கவனமும், அதீத தீவிரமும் காட்டுகின்றது. ஆகவே ஊடுருவி உளவறிவது சிங்களப் புலனாய்வு அமைப்பின் போர்க் களமற்ற போரின் முதன்மை இரகசியமாக இருந்து வருகின்றது.

இத்தகைய இரகசியப் போரின் உளவுப் பணிகளுக்காக உளவு வட்டங்களை சிங்களப்புலனாய்வாளர்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் உருவாக்கிக் கொள்வதில் விடாப்பிடியாக இருந்து வருகின்றார்கள்.

இவ் உளவு வட்டத்தினர் புலிகள் பற்றிய புதினங்களையும் புலிகள் பற்றிய இரகசியத் தகவல்களையும் சேகரிப்பவர்களாகவும் அவைகளைக் கொண்டோடிகளாக செயற்படுபவர்களாகவும் இயங்குகின்றனர். தேவைப்படும் பட்சத்தில் நாச வேலைகளுக்கு உதவி புரிந்து தமிழர் தாயகப் பகுதிகளை நாசம் செய்பவர்களாகவும் தொழிற்படுகின்றார்கள்.

இங்கு தமிழர் மண்ணில் நடைபெற்ற உண்மை நிகழ்வுகளை முக்கிய புலனாய்வுப்பாடங்களாக கற்றுக் கொள்வோம்.

1990,91ஆண்டுகளில் சிங்கள அரச படைகளின் அடக்குமுறை கோரத்தனத்தால் பெருமளவிலான தமிழர்கள் பல்வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிளாக மடுப்பிரதேசத்தை சூழ்ந்து வாழ்ந்து வந்தார்கள். இம்மக்களுடன் மக்களாக சாதாரண தொழிலாளியாக 'குமார்' கலந்திருந்தார். இவர் தென்னிலங்கையிலுள்ள கலவெல என்கிற இடத்தினை சொந்தமாகக் கொண்டிருந்த நிலையில், புலிகள் இய்க்க நிர்வாக உட்கட்டுமானப்பகுதியொன்றில் வேலை செய்வதற்காக தன்னை இணைத்துக்கொண்டார்.

மறுபுறத்தில் குமாரின் நடவடிக்கைகள் பற்றிய சந்தேகமான தகவல்கள் புலிகளின் மன்னார் மாவட்ட புலனாய்வுப் பணிமனைக்கு கிடைத்திருந்தன. அத்தகவல்கள் மேலதிக புலனாய்வுச்செயற்பாடுகளில் இருந்து வரும்வேளை குமாரின் உள்நுழைவு சந்தேகப் பார்வையை மேலும் விரிவடையச் செய்தது. இத்தகைய புலிகளின் புலனாய்வாளர்களின் தீவிரமான புலனாய்வு வலைப்பின்னலுக்குள் குமார் சிக்கிக்கொண்டார்.

அதன் போதே குமார் சிங்களப்படை முகாம் ஒன்றில் இராணுவ புலனாய்வுப்பயிற்சிகளை பூரணமாக நிறைவு செய்த ஒரு புலனாய்வாளன் என்பது பற்றியும் அவர் ஒரு உளவு வட்டத்தை உருவாக்கும் நோக்குடன் இங்கு வந்துள்ளது பற்றியும் மன்னார். சிலாவத்துறை பகுதிகளில் ஆங்காங்கே புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு சில அதிரடித் தாக்குதலுக்கான சூத்திரதாரியாக செயலாற்றி இருந்துள்ளமை பற்றியும் தெரியவந்தது.

இவற்றிற்கு அப்பாலும் அவரின் அடுத்தகட்ட பெரியதொரு நாசவேலைக்கான புலனாய்வுச் சவாலுக்கு தமிழர் தேசம் முகம் கொடுக்க இருந்த வேளையில்தான் அப்பெரும் சவால் தமிழரின் புலனாய்வுப்பங்களிப்பால் நசுக்கப்பட்டது.

மேற்காட்டிய உண்மை நிகழ்வை ஒத்த இன்னுமொரு புலனாய்வுச் சவாலை நோக்குவோம்.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள வவுனியா பாடசாலை ஒன்றின் காவலாளியாக கடமையாற்றிய கந்தசாமி என்பவர் சிங்கள இராணுவப்புலனாய்வாளர்களான ராயு மற்றும் கேதீஸ் ஆகியோருடன் ஓர் உறவைப்பேணி வந்துள்ளார்.

இப்படியாக உறவு இருந்து வரும் வேளையில் சிங்கள இராணுவப் புலனாய்வாளர்கள் கந்தசாமிக்கு பண ஆசையை ஊட்டினார்கள். அதாவது தடைசெய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள், பற்றிகள், கற்பூரப் பொதிகள் என பொருட்களை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று வியாபாரம் செய்வதற்கான ஒரு களத்தை 93 இல் அமைத்துக் கொடுத்தார்கள்.

இக்களத்தினை கந்தசாமி தன் வருமான நோக்கத்திற்காக பயன்படுத்தி வரும் போது புலிகளின் தடைமுகாம் நிர்வாகத்தினருக்கு தேவைப்படும் தடைசெய்யப்பட்ட பொருட்களை தங்குதடையின்றி வழங்கும் ஒரு நம்பிக்கையான வியாபாரியாக கந்தசாமி தோற்றம் பெற்றார். அந் நம்பிக்கைக்களத்தினை தனது வியாபாரத்திற்கான ஒரு களமாக பயன்படுத்தி வரலானார்.

இச்சூழலை எதிர்பார்த்து காத்திருந்த சிங்களப் புலனாய்வாளர்கள் பத்துக்கிலோ C4 வெடிமருந்தை (பெரியளவில் அழிவை உண்டு பண்ணக் கூடிய ஆற்றல் இவ் வெடிமருந்துக்கு உள்ளது) கற்பூர வடிவிலான சிறு சிறு பொதிகளாக மிக நுட்பமாக பொதிசெய்து அவற்றை உண்மையான கற்பூர பொதிகளோடு கலந்து பெரிய உரப்பை பொதியாகக் கந்தசாமியிடம் ஒப்படைத்து, கிளிநொச்சியில் வழமையாக வைத்து எடுக்கும் தனியாள் வளவொன்றில் வைக்கும் படி அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி கந்தசாமியும் கற்பூர உரப்பைப்பொதியை கிளிநொச்சியில் குறித்த வளவினுள் வைத்துவிட்டு மீள வவுனியா சென்றுவிட்டார். இவ் வேளை தான் புலிகளின் வன்னிப் புலனாய்வுப்பணிமனைக்கு சந்தேகத்திற்கு இடமாக பெரிய உரப்பை பொதி ஒன்று இருப்பது பற்றிய தகவல்கள் கிடைத்தன. இத் தகவலை அடுத்து விரைவான செயலில் இறங்கிய புலிகளின் புலனாய்வாளர்கள் உரப்பைப் பொதியைக் கைப்பற்றினர். அதன் பின்னர் பொதியை முழுமையாக பரிசோதனை செய்தபோது பத் துக்கிலோ C4 வெடிமருந்து கற்பூர பெட்டிகள் இனம் காணப்பட்டன.

இவ்வெடிமருந்து தொடர்பாக மேலதிகப் புலனாய்வுப் பணிகளை புலிகள் மேற்கொண்ட போது அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாயின. அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் மக்கள் கூடும் இடத்தினை இலக்கு வைத்து நாசவேலைக்காகவே வெடிமருந்து கொண்டுவரப்பட்டது என தெரியவந்தது.

தமிழ் மக்களின் இதயத்தில் அழியாவடுவை ஏற்படுத்திய கொம்படி இறங்குதுறை குண்டுவெடிப்பு நடைபெற்ற சிலமாதங்களின் பின்பே இம்முயற்சியை சிங்கள இராணுவப் புலனாய்வாளர்கள் மேற்கொண்டார்கள்.

இப்புலனாய்வுச் சவாலை நசுக்கி தமிழர்களை காத்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுள்ள புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு தமிழர்கள் வழங்கிய புலனாய்வு ஒத்துழைப்பால் அன்று தமிழர்கள் மிகப்பெரிய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள இரு உண்மை நிகழ்வுகளைப் போன்று இன்னுமொரு புலனாய்வுச் சவாலை இங்கு கவனிப்போம்.

யாழ்ப்பாணத்திலுள்ள குருநகரில் வாழ்ந்து வந்த விஜயரட்ணா (சனா) கடுகஸ் தோட்டத்தைச் சொந்த இடமாகக்கொண்டவர். அவர் தனது தாய்வழி உறவினரான யாழ்ப்பாணப் பெண்ணை 90 இல் திருமணம் செய்து குடும்பமாக வாழ்ந்து வந்தார்.

அவர் யாழ்ப்பாணத்திற்கு வரமுன் சிங்கள இராணுவத்தொண்டர் படையில் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் வந்தபின் தன் தாய் மாமனின் சிபார்சில் யாழ் போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தராக வேலையில் சேர்ந்து கொண்டார்.

இப்படியாக அவர் வாழ்ந்து வரும் சூழ்நிலையில்தான் சிங்கள இராணுவப் புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான முத்தலிப்பின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. அதாவது முத்தலிப்பின் முகவரான கறுப்பனின் தொடர்பைப் பயன்படுத்தி வந்த சனா யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் புலிகள்பற்றியும், சண்டைகளின் போது காயமடைந்து வரும் புலிகளின் எண்ணிக்கை பற்றியுமான தகவல்களை வழங்கிவந்தார்.

காலப்போக்கில் கறுப்பன் கொண்டு வந்த C4 வெடிமருந்தை யாழ்ப்பாண வைத்தியசாலைக்குள் உள்நுழையும் காயப்பட்ட புலிகளின் வாகனமொன்றினுள் வைத்து தாக்குதல் செய்வதற்கான திட்டத்திற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல் திட்டத்தினை செயல்படுத்த சனா கறுப்பனுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய சம்மதம் தெரிவித்தார்.

இவ்வாபத்துமிக்க இக்கட்டான சூழ்நிலையில்தான் புலிகளின் யாழ்ப்பாண புலனாய்வு பணிமனைக்குத் தகவல் கிடைத்தது. அத்தகவலை அடுத்து புலிகளின் புலனாய்வாளர்களால் வெடிமருந்து கைப்பற்றப்பட்டு அத்தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. இம் முறியடிப்பு புலனாய்வுப் பணிக்கு தமிழர்களது புலனாய்வு உதவிகளும் இருந்துள்ளன. இப்புலனாய்வு உதவியானது சிங்களப்புலனாய்வுச் சவால் ஒன்றை நசுக்கியது.



இவைகள் யாவற்றையும் நன்கு உற்று நோக்கின் சிங்களப் புலனாய்வாளர்களால் தமிழர் தேசம் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. அத்தோடு வியாபாரத்திற்காக வவுனியா நகர் சென்று வந்த தமிழர்கள் சிலரின் பணத்தாசையால் அவர்களின் மனோதிடம் உயர்வானதாக இருக்கவில்லை என்பதும் புலனாகிறது. இவைகள் எல்லாவற்றிற்கும் மேன்மையாக தமிழர்களின் புலனாய்வுப் பங்களிப்பால், புலனாய்வு ஒத்துழைப்பால், புலனாய்வு உதவியால் சிங்களப் புலனாய்வாளர்களின் சவால்கள் நசுக்கப்பட்டுள்ளன.

எப்படியாயினும் சிங்களப் புலனாய்வு அமைப்பினர் தமிழர்கள் சிலரை தம் வலைவிரிப்பினுள் சிக்கவைத்து அவர்களை தமது புலனாய்வு அடிமைகளாக கையாளும் முயற்சியை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றார்கள். இத்தகைய அடிமை மனப்பாங்குள்ள தமிழர்கள் சிலரை தம் உளவுப்பணிகளுக்காகவும் நாசவேலைகளை மேற்கொள்வதற்காகவும் முதலீடுசெய்து வருகின்றார்கள்.

இவ்வாறான தீய முதலீடுகளை செய்து புலனாய்வு வேலைகளை முன்னெடுக்கும் சிங்களப் புலனாய்வாளர்களின் சவால்கள் தமிழ் தேசம் எதிர்கொள்ளவே வேண்டியுள்ளது. அத்தோடு தமிழர் தாயகம் தமிழர்களுடைய சொந்தப்பலத்தால் தன்னை மீட்டுக் கொள்ளும் என்கிற தமிழர்களின் நம்பிக்கையை சீர்குலைத்து பலவீனப்படுத்தவும் முயற்சிக்கின்றது.

ஆகவே தமிழர்கள் சிங்களப்புலனாய்வின் அடிமைகளாக இருப்பதனை விடுத்து சிங்களப் புலனாய்வுச் சவால்களை நசுக்கும் தமிழர் புலனாய்விற்கு நேரடிப்பங்களிப்பு செய்யும் தன்மானமுள்ள தமிழர்களாக எழுச்சிபெறுவோம்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 27 . 08 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# உண்மைகள் உறங்குவதில்லை!

உண்மைகள் எப்போதும் உறங்குவதில்லை என்பார்கள். அரசு எவ்வளவுதான் உண்மையை மறைக்கமுயன்றாலும் அரசின் அனுகுமுறையும் நடவடிக்கைகளும் அரசின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தவேசெய்யும்.

நாட்டில் செம்மையாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த யுத்த நிறுத்தத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் ஆபத்தை தோற்றுவித்ததற்கான முழுப்பொறுப்பும் அரசையே சாரும்.

ஆனால் இதற்கு மாறாக இன்று தோன்றியிருக்கும் நெருக்கடிகளுக்கு புலிகளே காரணம் போல சர்வதேசத்தின் மத்தியில் அரசு காட்ட முயன்றதில் தோற்றுப்போய்விட்டது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் விடுதலைப்புலிகளுக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை உருவாக்க கண்காணிப்புக்குழு உதவ வேண்டுமென மேஜர் ஜெனரல் டொன் புருவ் கொவ்டேயிடம் கோரியிருக்கிறார்.

இந்தக்கோரிக்கையானது நாட்டில் தோன்றியிருக்கும் நெருக்கடிக்கு அரசு தனித்து முகம் கொடுக்கமுடியாத நிலையில், கண்காணிப்புக்குழுவினரை துணைக்கு அழைப்பதையே காட்டுகிறது.

இது ஒருவகையில் கண்காணிப்புக்குழுவினரின் செயற்பாடுகளையே முற்றுமுழுதாக அரசுக்கு சார்பானதாக மாற்றியமைக்க அரசு முயல்வதுபோல் உள்ளது.

அதாவது கண்காணிப்புக்குழுவினரை புலிகளுக்கு எதிராகச்செயற்படும்வகையில் அரசு பயன்படுத்த முனைவதையே காட்டுகிறது. அத்தோடு அரசின் அடாவடித்தனங்களுக்கு கண்காணிப்புக்குழுவினரை பலியிட முயல்வது போன்றதே அரசின் இந்த அழைப்பாகும்.

ஆனால் இலங்கையில் நிலவும் யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பட்டடிருக்கும் அச்சுறுத்தலையும் ஆபத்தான பின்னணியையும் அதற்கான காரண காரியங்களையும் நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் சரியான முறையில் இனம் கண்டுள்ளனர் என்பதையே நிலைமைகள் சுட்டுகின்றன.

அண்மையில் உலக சமாதானத்திற்கான ஏற்பாட்டுக்குழுவினருக்கு இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளிக்கும் வகையிலான கலந்துரையாடலில் நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல் கெய்ம் தெரிவித்த கூற்றானது இதனை தெளிவுபடுத்தி நிற்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழ் ஆயுதக்குழுக்களை ஈடுபடுத்துவதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் அவர் அரசே போர் நிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலாக செயற்படுகிறது என்பதோடு நடைபெறும் தாக்குதல்களின் பின்னணியில் தமிழ் ஆயுதக்குழுக்களையும் அரசு பயன்படுத்தி வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்மூலம் இலங்கை சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருக்கும் நிலையில் யுத்த நிறுத்தத்தை ஒழுங்கான முறையில் காப்பாற்றவேண்டுமாயின் கடைப்பிடிக்கவேண்டிய உரியவழிமுறையை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆனால் அரசு இதனைப்புரிந்து கொள்ளும் என்றோ அல்லது இதனை கைவிட்டுவிடும் என்றோ கொள்ளமுடியாது. அரசிற்கு இப்போது சமாதானத்தை விட யுத்தத்தின் மேல்தான் அதிக பிரியமாகவுள்ளது.

புலிகளை எப்படியாவது சீண்டி யுத்தமுனைக்கு அரசு அழைக்க முனைகிறது என்பதே உண்மை. ஆனால் யுத்தத்திற்கு புலிகளை நேரடியாக அழைக்கமுடியாது சூழ்ச்சிகளை மேற்கொள்கிறது.

ஆனால், புலிகள் இயக்கமோ அரசின் சூழ்ச்சிகளை புரிந்துகொண்டவர்களாக யுத்தத்திற்குள் பிரவேசிக்காது சூழ்ச்சிகளை முறியடித்து வருகின்றனர்.

இதனால் அரசு தனது பருப்பு எவையும் புலிகளிடம் அவியாத நிலையில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்க கண்காணிப்புக்குழுவினரை அழைத்துள்ளனர்.

ஆனால் உண்மையில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டது போல நாடு யுத்தத்தை நோக்கி செல்கிறது என்பதே உண்மை.

அதாவது அரசு புலிகளை யுத்தத்தை நோக்கி அழைக்கிறது என்பதே இதன் பொருளாக நாம் கொள்ளலாம்.

## தூரனின்பார்வை



# சமாதான சூழலுக்கு அரசே அச்சுறுத்தல்

**கெட்டிக்காரன் புழுகு எட்டே நாள்தான் என்பார்கள். 'கொட்டாவ' சம்பவத்துடன் இராணுவத்தரப்பினரின் பொய்ப் பிரசாரங்கள் யாவும் வெட்டவெளிச்சமாகி விட்டன. அந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த நபரை இராணுவ மற்றும் அரசதரப்பினர் பலவகையிலும் மறைக்க முயன்றும் அது சாத்தியமற்றதாகிவிட்டது.**

இன்றைய சமாதான மற்றும் போர்நிறுத்த சூழலுக்கு அச்சுறுத்தல் எதனால் ஏற்பட்டு வருகின்றது என்பது இறுதியாக சமாதான முன்னெடுப்புகளின் பிரதான அனுசரணையாளரான நோர்வே தரப்பினர்க்கு மிகத் தெளிவாக தெரிந்துள்ளதாகவே கூறவேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில், சிறிலங்கா அரசும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், தேசவிரோத சக்திகளாக மாறி அரச துணைப்படையில் அங்கம்வகித்து வரும், அல்லது இராணுவத்திடம் சரணடைந்து அவர்களின் பாதுகாப்பின் கீழ் கைக்கூலிகளாக இயங்கி வரும் தமிழ் ஆயுதக் குழுக்களை பயன்படுத்திவருவதென்பது இன்று நேற்று ஆரம்பித்த ஒரு விடயமல்ல.

தலையாட்டிகள், ஆட்காட்டிகள், என்றெல்லாம் ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட இந்த தேசவிரோத-சமூகவிரோத-இனவிரோத செயற்பாட்டாளர்களின் சுயநல நடவடிக்கைகள்தான் தமிழ்மக்களின் போராட்டம் மிக முக்கியமான காலகட்டங்களில் எதிரிகளுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் காட்டிக்கொடுக்கக் காரணமாயிற்று என்றால் அது பொய்யில்லை.

"குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளான", இந்த தேசவிரோத தமிழ் ஆயுதக் குழுக்களின் துரோகத்தனமான நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் சந்தித்த இழப்புகள், பின்னடைவுகள் மிகமிக அதிகமாகும்.

பேரினவாத சக்திகளின் எடுபிடிகளாக மாறி இந்தத் தமிழ் ஆயுதக் குழுக்கள் தனிப்பட்ட முறையில் கூட எதையாவது சாதிப்பார்களா என்றால் எதுவும் இல்லையென்றே பதில் கிடைக்கும்.

இன்றைய சூழலில் சமாதானம் என்பது எந்த வகையிலும் தவிர்க்கவே முடியாத ஒரு தேசிய அவசியம் என்பது உலகின் சகல தரப்பினராலும் வலிறுத்தப்பட்டுவரும் வேளையில், அதற்கான சாதகமான சூழல் ஒன்றினை சர்வதேச சமூகமே முன்வந்து இங்கு உருவாக்கியுள்ள நிலையில் அதனைக் குழப்பும் நோக்குடன் பேரினவாத அரசியல் தலைமைகள் தீவிரமாகச் செயற்பட்டுவருவது வெளிப்படையான விடயமேயாகும்.

சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் தீவிரமான ஆர்வமானது சிங்கள ஆட்சியாளருக்கு முழுமையாக ஏற்றுக் கொள்ளமுடியாத விடயமாகவே அன்றிலிருந்து இன்று வரை இருந்துவருகிறது.

சமாதான சூழல் என்பது தமது அன்றாட அரசியல் நலன் களுக்கு ஆபத்தானது என்பதே பேரினவாதச் சிந்தாந்தமாக உள் ளது.

எனவேதான் சமாதானத்தை முன்னெடுக்கும் எந்த முயற்சியையும் ஆதரிப்பது போல ஆதரித்துக்கொண்டே அதனை வேறுவழிகளில் எதிர்த்துக் குழப்பும் முயற்சிகளை நன்கு திட்டமிட்டமுறையில் சிறிலங்கா ஆட்சியாளர்களினால் அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

இதற்கு அவர்கள் கையாளும் பிரதான வழி தமிழர்கைகளைக் கொண்டே அவர்களின் கண்களைக்குத்தும் முறையாகும்.

அரசியலில் அநாமதேயங்களாகிப் போன தமிழ் ஆயுதக் குழுக்களையும், அரும் பொட்டு வெற்றியில் ஆட்சியுடன் ஒட்டிக் கொண்டு அதிகாரம் செய்யமுறபடும் தமிழ்க்குழுக்களின் அடிமட்ட உறுப்பினர்களையும் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் சமாதானத்தின் பிரதான பங்காளிகளான விடுதலைப் புலிகளுக்கெதிரான வன்முறைகளைத்தூண்டி அவர்களுக்கு சினத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தவும், அவர்களை சமாதான வழிகளை விட்டுவிலகி போர்க் கோலம் கொள்ளவைக்கவும் முயன்றுவருகின்றனர்.

இத்தகைய குழப்ப நடவடிக்கைகள், வன்முறைகள், கொலைகள் போன்றவற்றை மேற்கொள்ள இராணுவபுலனாய்வுப்பிரிவினர், இத்தமிழ் ஆயுதக் குழுக்களின் பலவீனங்களைப் பயன்படுத்திவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் கருணா விவகாரம் படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு இராணுவப் புலனாய்வுப்பிரிவினரின் திட்டமிட்ட செயற்பாடுகளே காரணமாகும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள கருணா கும்பலுக்கு பின் பலமாக நின்று நெறிப்படுத்திய இராணுவ புலனாய்வுப் பிரிவினர், பிரதேசவாதத்தை இதற்கான காரணப் பொருளாக்கி காட்டியதுடன் கிழக்கில் நடந்த சகல அசம்பாவிதங்கள் வன்முறைகள், படுகொலைகள் அனைத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட உள்முரண்பாடுகளே காரணம் என்று பிரசாரம் செய்ததுடன் அதற்கும் இராணுவ மற்றும் அரசதரப்பிற்குமிடையே எந்தத்தொடர்பும் கிடையாதெனவும் பிரசாரம் செய்யவும்முறபட்டனர்.

கெட்டிக்காரன் புழுகு எட்டே நாள்தான் என்பார்கள். 'கொட்டாவ' சம்பவத்துடன் இராணுவத் தரப்பினரின் பொய்ப் பிரசாரங்கள் யாவும் வெட்டவெளிச்சமாகிவிட்டன. அந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தநபரை இராணுவ மற்றும் அரசதரப்பினர் பலவகையிலும் மறைக்கமுயன்றும் அது சாத்தியமற்றதாகிவிட்டது.

கிழக்கின் இன்றைய கொதிநிலைக்குக் கருணா தரப்பினரும் காரணமென்றால் கருணா தரப்பினர் உட்படசகல தமிழ் ஆயுதக்குழுக்களையும் போஷித்துப் பாதுகாக்கும் இராணுவ தரப்பினரே முழுமுதற்காரணம் என்பதை இன்று சர்வதேச சமூகம் தெளிவாக உணரத் தொடங்கி விட்டது எனலாம்.

அதன் வெளிப்பாடே புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழ் ஆயுதக் குழுக்களை ஈடுபடுத்துவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என தெரிவிக்கப் பட்டிருப்பதாகும்.

இது அரசாங்கத்திற்கு சினத்தினை மூட்டவே செய்யும்.

உண்மைசுடும்... அதற்கு நாம் என்ன செய்யமுடியும்?

# புனரமைப்பு அரசியல்

பு.சத்தியமூர்த்தி

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டமொன்றை ஐ.ம.சு.முன்னணி அரசு ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் 'நாட்டின் பொருண்மியத்தைக் கட்டியெழுப்பவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசு முழு முயற்சிகளையும் மேற்கொள்ளும்' என இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சிறிலங்காவின் பிரதமர் மஹிந்தராஜபக்ச தெரிவித்தார்.

"எமது கூட்டமைப்பு அரசின் மூன்றாவது அமைச்சரவைக் கூட்டத்தின் போது விவசாய அமைச்சினால் தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டத்துக்கான ஆலோசனையை அமைச்சரவை அங்கீகரித்ததுடன் 400 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியது. 400 மில்லியன் ரூபா இத்திட்டத்தைச் செயற்படுத்தப் போதுமானதாக இல்லை. மக்களின் பலத்தினாலும் நலன் விரும்பிகள், நன்கொடையாளர்களின் உதவியுடன்தான் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்"

"கிராமம், குளம், வயல் நிலங்கள் என்பன எமது நாட்டின் பாரம்பரிய உரிமைகள். பண்டைய காலத்தில் இவை எவ்வாறு பாதுகாக்கப்பட்டதோ அதேபோன்று மீண்டும் அடிப்படையிலிருந்தே பாதுகாக்க எமது அரசு முன்வந்துள்ளது. இது ஒரு அரசியல் நடவடிக்கையல்ல. அதனையும் தாண்டிய புனிதமான செயல் பொருளாதாரம் என்றுமில்லாதவாறு வீழ்ச்சிகண்டுள்ளது. எம்மால் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளது. ஈராக் யுத்தம் ரஷ்யாவின் இன்றையநிலை காரணமாக இந்த விலைஅதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றைக்கட்டுப்படுத்தும் சக்தி எமக்கில்லை. " இவ்வாறு அவரது உரை அங்கு தொடர்ந்தது.

இந்த நிகழ்வையும் அங்கு ஆற்றப்பட்ட உரையையும் வைத்துக் கொண்டே சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் எங்கு நிற்கிறது என்பதுவும் எங்கே செல்ல விளைகிறது. அதன் போக்குகள் எவ்வாறு அமையக்கூடும் என்பது குறித்தும் நாம் விளங்கிகொள்ளமுடியும்.

வெளிப்படையாகப் பார்த்தால் இது மிகவும் நல்லதொருதிட்டம் தான். நீண்டகாலப்பலன்களைத் தந்து மக்கள் சுயமாக வாழக்கூடிய நிலையை இத்திட்டம் கொண்டுவரும் தான். ஆனால் இதனுடைய சூத்தை எங்கே இருக்கிறதெனில் இதனுடைய செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலாகும். அத்தோடு இத்திட்டத்தை நிறைவேற்றவுள்ள அரசின் பங்காளிகளின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நோக்கங்களின் அடுத்த கண்டம் தங்கியுள்ளது.

உண்மையிலேயே சற்று யோசித்துப் பாருங்கள். பத்தாயிரம் குளங்களைப் 'புனரமைக்க'400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதெனில், ஒரு குளத்துக்கான சராசரி ஒதுக்கீடு எவ்வளவு? பிரச்சினை புரிகிறதா உங்களுக்கு? வெறும் 40,000 ரூபா வைத்துக் கொண்டு குளத்தினில் என்ன 'புனரமைப்பினை' நிகழ்த்திவிட முடியும்.

இதற்கு மேல் இத்திட்டத்துக்கு ஏதாவது நிதி ஒதுக்கப்படுமென எவரும் குறிப்பிடக்கூட இல்லை. ஒருவேளை அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமோ தெரியாது. ஆனால் அதுவரையும் இந்த அரசாங்கம் பிழைத்திருக்குமா? என்பது சந்தேகமே. இவ்வாறானதொரு கணிப்பு மஹிந்த ராஜபக்சவுக்கும் இருப்பதனால்தான் அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் அதிகரித்த நிதி ஒதுக்கீடு குறித்து அவர் குறிப்பிடவில்லைப் போலும்.

இங்கே ஒரு விடயத்தை நாம் கவனித்தல் வேண்டும். 40,000 ரூபாவினை ஒரு குளத்துக்கான ஒதுக்கீடாகக் கொண்ட இப் புனரமைப்புத் திட்டத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டோர் யார்? பிரதமர், விவசாய அமைச்சர் உட்பட பத்து அமைச்சர்களும் இரண்டு பிரதியமைச்சர்களும் இதில் கலந்து கொண்டனர்! அன்றைய தினம் நாடாளுமன்றுக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே மட்டுமே அரசின் சார்பில் சமூகமளித்திருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது உங்களுக்கு ஏதோபொறி தட்டுகிறதா? இந்தப் பன்னிரண்டு அமைச்சர்களும் யாப்பஹுவவின் ஹெலன் பெலஸ்ஸ என்ற குக்கிராமத்துக்குச் செல்வதற்கும் அதற்கான பாதுகாப்பு, உபசரிப்பு, விளம்பரங்கள், எடுப்புகள். சாய்ப்புகளுக்கு எவ்வளவு தொகை செலவாகியிருக்கும்! பல பத்து குளங்களுக்குரிய ஒதுக்கீட்டுக்குச் சமமான பணம் இங்கே கரைக்கப்பட்டிருக்குமல்லவா?

'இது ஒரு அரசியல் நடவடிக்கை அல்ல' என்று மஹிந்த ராஜபக்ச அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுதும், நாம் பகுத்துப்பார்க்கும் போது இது பச்சையான அரசியல் நடவடிக்கைதான் என்பது வெளிப்படுகிறது. இதை இன்னும் சற்று உடைத்துப் பார்ப்போம்.

இந்தத் திட்டத்துள் உள்ளடக்கப்படுபவை பெரும் நீர்த்தேக்கங்கள் அல்ல. கிராமங்களின் அடியாழங்களில் காணப்படும் சிறு குளங்களே இங்கு கவனத்திலெடுக்கப்படவுள்ளன. விவசாயத்தை மட்டுமே சீவனோபாயமாகக்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களே இலக்குவைக்கப்பட்டுள்ளன. கடந்த பொதுத்தேர்தலில் இந்த விவசாயிகளின் பாவனைக்குரிய உரத்தின் விலையேற்றம் குறித்து ஐ.ம.சு முன்னணி அதிகம் பேசியது கவனிக்கத்தக்கது.

குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தை அமைச்சரவையில் முன்வைத்தது ஜே.வி.பி யின் அனுர குமாரதிசாநாயக என்பதும் அவர் சந்திரிகாவின் அமைச்சரவையில் விவசாய அமைச்சர் என்பதுவும் இங்கு கவனிக்கத்தக்கவை. இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஏற்கனவே பல்கலைக்கழகங்கள், தொழிற்சங்கங்களுள் ஊடுருவித் தனக்கெனப் பலமான தளமொன்றைக் கட்டியெழுப்பிவிட்ட ஜே.வி.பி விவசாயிகள் மத்தியில் தனது கட்டுமானத்தை நிறுவிக்கொண்டுவந்த திட்டமே இதுவாகும். ஜே.வி.பியின் பலம் என்பது அது கிராமங்களிலிருந்து தனது வேலையைத் தொடங்குவதாகும். கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது நகரப்பகுதிகளில்வாக்களிப்பு விழுக்காடு வீழ்ச்சியடைந்த அதேவேளை ஜே.வி.பியின் செல்வாக்குப் பிரதேசங்களான கிராமங்களில் வாக்களிப்பு உயர்வாக இருந்ததைக் கவனிக்க வேண்டும்.

அதேவேளை சந்திரிகாவின் சுதந்திரக்கட்சியுடனான கூட்டு வேலைத்திட்டத்தில் இறங்கியவுடன் ஜே.வி.பி கேட்டுப் பறித்துக்கொண்டவை நான்கு அமைச்சுக்கள். விவசாயம், மீன்பிடி, காணி,கலாசார விழுமியங்கள் என்பவையே அவை.

இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். மாணவர், தொழிலாளர் மத்தியில் தனக்கிருக்கும் செல்வாக்கினை விவசாயிகள், மீனவர்கள் மத்தியிலும் கட்டியெழுப்ப அது முயல்கிறது. அதன் ஒரு எத்தனமே மேற்படி குளப் புனரமைப்புத்திட்டம். இதன் நிறைவேற்றத்துடன் சமநேரத்தில் நாடளாவிய ரீதியாக விவசாயிகள் மத்தியில் தம்மை தாபித்துக்கொள்ள முடியும் என்பது ஜே.வி.பி யினர் கணிப்பு. அதற்கு அது அரசாங்கத்தில் உள்ள தனது அமைச்சினைக் கச்சிதமாகப் பயன்படுத்துகிறது.

இப்போது சந்திரிகா அம்மையாரின் சொந்தக் கட்சியான சிறிலங்கா சுதத்திரக் கட்சிக்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத இக்கட்டுநிலை. தனது தற்போதைய சகபாடியும் எந்த நேரமும் கழுத்தைப் பிடித்து நெரிக்கக் காத்திருக்கும் போட்டியாளருமாகிய ஜே.வி.பி தம்மை உறிஞ்சி வளர்கிறது என்பதை அறிந்துகொண்டே அனுமதிக்க வேண்டிய அல்லது சகித்துக் கொள்ள வேண்டிய துயரம் அதற்கு. ஏனெனில் அனுமதிக்காவிடிலோ ஜே.வி.பி பிய்த்தெறிந்துவிட்டுப் புறப்பட நேர்ந்தால் ஏற்கனவே பலவீனப்பட்டுப் போயுள்ள தனது கட்சிக் கட்டமைப்புடன் ஐ.தே. கட்சியையும், ஜே.வி.பி யையும் எதிர்த்துப் போட்டியிட சுதந்திரக் கட்சியால் முடியாது.

எனவே, அரசாங்கத்தைப் பாவித்து தான் பலம்பெற ஜே.வி.பி செய்யும் முயற்சிகளை முறியடிப்பது சுதந்திரக்கட்சிக்குள்ள உபாயங்களில் ஒன்று இந்த உபாயம் குளப்புனரமைப்புப் பணிகளின் மீதும் பயன்படக்கூடும். குறைந்தளவு நிதி ஒதுக்கீடும், எதிர்கால ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பெதுவும் இன்மை இதற்கு நியாயமாக, பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் நிலைமை பற்றிய விலாவாரியான அறிக்கைகளும் சுட்டிக்காட்டுவது அதுவாகவும் இருக்கலாம்.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப விழாவில் பிரதமரும் அமைச்சர்களும் பெருமெடுப்பில் கலந்துகொண்டதற்கும் காரணமுண்டு. விவசாய அமைச்சரின் கீழ்வரும் திட்டமான இதனை அவரே தொடக்கிவைத்து நடாத்திச் செல்ல அனுமதிக்கப்பட்டால் அது ஜே.வி.பி யின் செல்வாக்கை அதிகரிக்கக்கூடும். எனவேதான் அமைச்சர்கள் முழுப்பேருமே களம் புகுந்து விட்டார்கள், பிரதமர் தலைமையிலே. ஜே.வி.பி மட்டுமல்ல நாங்களும் உங்கள் மீது அக்கறையாக இருக்கிறோம் என்பதே மஹிந்த ராஜபக்ச சிங்கள விவசாயிகளுக்கு வழங்கிய செய்தி.

இது ஒரு புறமிருக்க அண்மைக்கால அரச ஊடகங்களிலே 'நாட்டின் பொருண்மியத்தை சுயசார்புடன் கட்டியெழுப்புதல்' குறித்து சற்று அதிகம் பேசப்படுவது அவதானிக்கப்படுகிறது. 1970ஆம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் பொருளாதார நடவடிக்கைகளை சிலாகித்து ஆசிரியர் தலையங்கங்களும் தீட்டப்படுகின்றன. உப உணவு உற்பத்திகள் குறித்தும் வலியுறுத்தப்படுகிறது. இந்தப் போக்கு மேற்படி குளப்புனரமைப்புடன் ஒரே புள்ளியில் பொருந்துவது போலப்படுகிறது.

ஆனால் இவை எதுவுமே சாத்தியப்படப் போவதில்லை. உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் அரசின் மீது நெருக்கடியைக் கொடுக்க ஆரம்பித்து விட்டன. நாட்டின் நீர்வளத்தினைத் தனியார்மயப்படுத்துவதற்கான அழுத்தத்தினை 'நீர்முகாமைத்துவ நடவடிக்கை' என்ற பேரில் அவை வலியுறுத்துகின்றன. இவற்றின் நிதி உதவியுடன் மேற்படி நிபந்தனைகளை இந்நிறுவனங்கள் பிணைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.






## நாற்றிசை நடப்பு

# அமெரிக்காவின் நகர்வு ஆபிரிக்க கண்டத்தை நோக்கி...?

அமெரிக்க இராணுவத்தை ஐரோப்பாவிலிருந்தும் ஆசியாவிலிருந்தும் குறைக்கப் போவதாக சனாதிபதி புஷ் அறிவித்துள்ளார். அமெரிக்க இராணுவத்தின் பெரும் தொகுதி தங்கியிருக்கும் இவ்விரு கண்டங்களிலிருந்தும் 70 ஆயிரம் வீரர்களை வாபஸ் பெற அமெரிக்க சனாதிபதி திட்டமிட்டிருப்பது வேறொரு நோக்கத்தினை நோக்கமாகக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இதனை அமெரிக்க இராணுவம் வெளிப்படையாக தெரிவிக்காதுவிடினும் மறைமுகமாக இன்னோர் கண்டத்தை நோக்கி அல்லது பிராந்தியத்தை இலக்கு வைத்து படையினரை நகர்த்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கின்றது என்பது தெரிகின்றதகவல் என உலக இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும், அடுத்த நிலையில் அரசியல் முரண்பாடுகளை பிரதிபலிக்கும் கண்டமாக ஆபிரிக்கா விளங்குவதனால் ஆபிரிக்காவை அமெரிக்கா இலக்கு வைத்துள்ளதாக கருத முடியும். ஆசியாவுக்குள் அதிக முரண்பாடு தனியாததனால் அமெரிக்காப்படை வாபஸ் பெறுவதனால் ஐரோப்பாவுக்குள் இருந்தே அதிகம் நிகழவாய்ப்புண்டு என்ற கருத்தும் நிலவுகின்றது. எதுவாயினும் அமெரிக்காவின் அடுத்த ஆதிக்க விஸ்த்தரிப்பின் நேரடி கண்டமாக ஆபிரிக்கா விளங் கப்போகிற தென்பது தெளிவாக அவதானிக்க முடிகின்றது. வில்லியம் புஷ்ஷின் பதவிக்காலம் மேலும் நான்குவருடம் சாத்தியப்படுமாயின் அதற்கான உறுதிப்பாடு அதிகரிக் கலாம். ஏனெனில் புஷ் பதவியேற்ற கடந்த நான்கு ஆண்டுகளின் முதலா வதாண்டில் கிழக்காசியாவிலிருந்தும், ஐரோப்பாவிற்குள்ளிருந்தும் பல இலட்சம் படைகளை மத்திய ஆசியாப பக்கமும், மேற்காசியாப் பக்க மும் நகர்த்தினார் என்பதைப் வைத் துக் கொண்டே இவ்விடயத்தை பரீசீலனைக்கு உட்படுத்த வேண்டும்

### சூடானின் டர்பூர்

ஆபிரிக்க கண்டத்திலும் உலகத்திலும் சூடானின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு முன்னனுபவமாக பேசப்பட்டாலும் சூடானின் மறுமுனையில் வன்முறை தீர்வின்றி நீடிக்கிறது. மத முரண்பாடுகளுக்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களும் தீர்வின்றி டர்பூர் பிரதேசம் மக்கள் பல இலட்சம் பேர் இடம் பெயர்ந்ததுடன் பல ஆயிர கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். உணவு, அடிப்படை வசதி இன்றிய டர்பூர் பிரதேச மக்கள் பெருமளவு துயரங்களை அனுபவிப்பதுடன் அழிவுக்குள்ளாகி வருகின்றனர். இப்பிணக்கை தீர்ப்பதற்கு சூடானிய அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை காலக்கெடு விதித்திருப்பதுடன் சூடான் அரசு ஆயுதம் தாங்கிய அமைப்புக்களுடன் பேச ஆரம்பித்துள்ளது. பேச்சுகளின் முதல் இரண்டு நாட்களில் தோல்விகளை சந்தித்தாலும் தீர்வுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்பது தெளிவாகவே தெரிகின்றது. அரசும் சூடானின் ஆயுதக்ககுழுக்களும் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டுவதுடனான சூடானிய குழுக்களை வழிநடத்துவதாகவும் கூறப்பகிறது.

சாட்டின் கிழக்குப் பகுதியில் பிரான்சின் படைகள் நிலை கொண்டிருப்பது என்பது சாட்டை பாதுகாப்புடன் டர்பூர் பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதென பிரான்சின் தூதரகம் தெரிவித்துள்ளது. பிரான்சின் குடியேற்றவாதத்துக்குள் ஆபிரிக்க நாடுகள் பலவும் அகப்பட்டிருந்தன என்பது சாட்டின் எல்லையோரத்தில் பிரான்சின் துருப்புக்களை நிறுத்தியுள்ளதன் மூலம் தெளிவாக விளங்குவதுடன் குடியேற்றவாத உறவுகளிலிருந்து சாட் விடுபடவில்லை என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

ஆபிரிக்க கண்டத்தின் சமாதானப் படையின் கண்காணிப்பு குழுவாக காணப்பட்டாலும் அப்பிரதேசம் பூரணமான அமைதியை வெளிப்படுத்திய பிரதேசமெனக் கூறமுடியாது. இதனால் வேறு அரசுகலோ ஐ.நா. சபையின் பொருளாதாரத் தடையோ, அல்லது பன்னாட்டுப் படைநகர்வோ சாத்தியப்படலாம் அதற்கு தயாராகும் போக்குக்கே. சூடான் வழிசமைத்துக் கொடுக்கின்றது இது சூடானின் டார்பூர் பகுதி மட்டுமல்ல ஆபிரிக்க கண்டமே எதிர்காலத்தில் ஆபத்தினை அனுபவிக்க வாய்ப்பை கொடுத்து விடும்.



### சதார் எதிர் அமெரிக்கா

ஈராக் போரின் இன்னொரு போர் நஜாப் நகரமாகும். கடந்த பல வாரங்களாக இந்தநகரம் பெரும் அழிவுகளையும் அனர்த்தத்தையும் அனுபவித்து வருகின்றது. கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான அல்சதார் இனங் காணப்பட்டதிலிருந்து பெரியளவான தாக்குதல் இந்நகர் மீது நிகழ்ந்துவருகிறது. இதனால் அமெரிக்கத்துருப்புகள் அழிக்கப்பட்டிருப்பதுடன் கிளர்ச்சியாளரும் அமெரிக்கப்படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இத்தொகையைவிட நஜாவ்மக்கள் அதிகமாக கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்.

நஜாப் நகரில் சதார் வாழ்ந்ததாக கூறப்படும் பள்ளிவாசல் தற்போது அமெரிக்கப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆயிரக்கணக்கான படைகளுடன் சதார் தலைமறைவாகிவிட்டதாக சொல்லப்படுவதை உறுதிப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆனால் சதார் தொடர்ந்து 16 நாட்களுக்கு மேலாக அப்பள்ளிவாசலையும், பிரதேசத்தையும் தனது செல்வாக்குக்குள் வைத்திருந்தார். சதார் அமெரிக்கப் படைகளுக்கு சவாலாக வெளிப்படையாக அமெரிக்காவை எதிர்த்தார். சதாம் உஷைன் போன்று சூழுரைத்தார். ஆன ல் அமெரிக்கத் துருப்புக்கள் நக ம் போது எந்தவித எதி ந்தாக்குதலையும் காட்டாது படை களுடன் மறைந்துள்ளார். சதாம் போல இருந்தாலும் சதார் தந்திர சாலியாக விளங்குகிறார். படைகளை தக்கவைத்திருப்பதுடன் அமெரிக்க இராணுவமே அதிர்ச்சியடையும் விதத்தில் நடவடிக்கை அமைந்திருந்தது. சதார் பிடிக்கப்பட்டாலும், இறந்து போனாலும் அமெரிக்கப் படைகளுக்கு அதிர்ச்சி கொடுப்பவராக கணிக்கப்பட்டுள்ளார் என்பதே அவர்பற்றி கூறக்கூடிய தகவலாகும். சியா முஸ்லிம்களை அமெரிக்கர்களுக்கு எதிராக திசை திருப்பியதில் அதிகளவான பங்கு சதாரைச் சாரும். சதார் போன்று கிளர்ச்சியாளர்களும், ஈராக்கில் தொடராகவே மோதும் நிலையை உருவாக்கிவிட்டுட்டுள்ளனர்.

மறுபக்கத்தில் பிறநாட்டவர் கடத்தப்படுவதும், தலை துண்டிக்கப்படுவதும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. பக்தாத், மற்றும் பாதுயா, ஹில்லா, போன்ற பகுதிகளில் தாக்குதலும், தற்கொலைத் தாக்குதலும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கத்துருப்புக்கள் மட்டுமன்றி ஈராக்கியர்களும் கொல்லப்படுவதனை அவதானிக் கலாம். மொத்தத்தில் அமெரிக்காவும் அதன் இராணுவமும் புதிய எதிரிகளை உருவாக்கி அவர்களால் அதிக தொல்லைகளை அனுபவித்து வருகின்றன.

### மாவோயிஸ்டுக்களின் நேபாளம்

இமாலய அரசென வர்ணிக்கப்படும் நேபாளம் தற்போது மாவோயிஸ்டுக்கிளர்ச்சியாளர்களின் கைகளில் அகப்பட்டுள்ளது. இக் கிளர்ச்சியமைப்பும் அதன் கிளர்ச்சிவாதிகளும் மிக நீண்டகாலமாக போராடிவருகின்றனர். பொருளாதார அரசியல் மட்டத்தில் மேற்கையும் அதன் கொள்கை களையும் நிராகரிக்கும் கிளர்ச்சியா ளர்கள் மன்னராட்சி முறைமையை நிராகரித்துவருகின்றனர். மன்னனா? நாடாளுமன்றமா? என்ற பிரித்தானியப் பாரம்பரியத்தை 21ம் நூற்றாண்டிலும் பேசிக்கொள்ளுகின்ற மக்களாக நேபாளியர் காணப்படுகின்றனர்.

இந்தியாவின் பிடிக்குள் அகப்பட்ட நேபாளம் சீனாவின் பின்புலத்தோடு மாவோஸ்டுக்களை எதிர்கொள்ள முடியாத நிலைக்குள் ஆளப்பட்டுவருகிறது. இங்கு மன்னன் ஒரு பக்கமாகவும் நாடாளுமன்ற ஆட்சியாளர்களும் கிளர்ச்சியாளர்களும் மறுபக்கம் போன்றுமல்லவா நிலமையுள்ளது. இதனால் கிளர்ச்சியாளர்கள் தமது ஆட்சிப்பரப்பை படிப்படியாக விஸ்தரிப்பதுடன் அதிகாரத்தை நிறுவியும் வருகின்றனர். ஆட்சியாளர்கள் தமக்குள் முரண்பட்டு கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் கிளர்ச்சியாளரை சீனா தூண்டியிருக்கின்றது. இது மாவோஸ்டுக்களின் தீவிரத்தை காட்டுகிறது. மாவோஸ்டுக்களை ஒடுக்குவதற்கு நேபாள அரசாங்கத்திற்கு அமெரிக்காவும் உதவி வருகின்றது. நேபாள இராணுவம் மிகமோசமான கெடுபிடிக்குள் அகப்பட்டுள்ளது. மன்னனின் அதிகாரத்தின் இலக்கை நிர்ணயித்துக் கொள்ளும் பிரதமரும் அவரின் ஆட்சித்துறையும் நாடாளுமன்றமும் பாதுகாப்பற்ற விதத்திலுள்ளன. மன்னனின் தான்தோன்றித்தனமானஅதிகாரப்போட்டியிலும் ஆதிக்க உணர்வினாலுமே நேபாளத்தின் அரசியல் நெருக்கடியை அடைந்துவருகின்றது.

நேபாள அரசியலோடு ஏற்கனவே சீனாவும், இந்தியாவும் சம்பந்தப்பட்டிருப்பதுடன் தற்போது அமெரிக்காவும் தலையை நீட்டியுள்ளது. மொத்தத்தில் பிராந்திய சர்வதேச சக்திகளின் போட்டிக்களமாக மாறிவரும் நேபாளத்தை தனித்து நிலை நிறுத்துகின்ற வாய்ப்புக்குரிய எந்த அமைப்பும் காணப்படுவதாக இல்லை. மேலும் மேலும் மன்னன் மாவோஸ்டுக்களை நசுக்குவதற்கு இராணுவத்தை பலப்படுத்துவதுடன் கிளர்ச்சி குழுக்கள் பலவற்றை உருவாக்கி

**ஐங்கரன்**

மாவோஸ்டுக்கள் பாணியில் மாவோஸ்டுக்களை முறியடிக்க திட்டமிடுகின்றார். இதனால் ஏற்பட்டிருக்கும் போட்டி நாட்டை முழுமையாக பாதிக்கும்; பொருளாதாரத்தை முற்றாக அழித்துவிடுமென நேபாளிய பொருளாதார நிபுணர்கள் வாதிடுகின்றனர்.

உலக வறியநாடுகளின் பட்டியலுக்குள் முதல் பத்து நாடுகளிலும் ஒன்றாக விளங்கும் நேபாளத்தில் 25 மில்லியன் மக்கள் ஒரு நாளையில் (அரை) 1/2 டொலரையும் வருமானமாகக் கொள்ளாதவர்களாக உள்ளனர். ஆரம்ப பாடசாலைக்கான வாய்ப்பின்மை, சுகாதார வசதியின்மை, சுத்தமான குடிநீரின்மை, உற்பத்தி நிலங்கள் பயிரிடப்படாது தரிசு நிலமாக காணப்படுவது போன்ற நிலைமைகள் நீடிக்கின்றது. இது நேபாளத்தின் பொருளாதாரத்தை மோசமான நிலைக்குள் கொண்டு செல்கின்றது.

எனவே மாவோஸ்டுக்களின் கிளர்ச்சியால் நேபாளத்தின் பொருளாதாரம் மட்டுமன்றி இராணுவ அரசியல் அனைத்தும் ஸ்தம்பிதம் அடையும் நிலமையுடன் பிறநாடுகளின் தலையீடுகளுக்கும் வழிவகுக்கும் நிலமையும் காணப்படும் வாய்ப்பு உருவாகிவருகிறது. மாவேஸ்டுக்கள் காத்மண்டுவையே அண்மையில் ஸ்தம்பிதமடையச் செய்துள்ளனர் என்பது அவர்களின் பலத்தை காட்டுகிறது. நேபாள அரசாங்கமும், மன்னனும் மாவோஸ்டுக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்க தவறுவார்களாயின் உலக நாடுகளின் தலையீடு விரைவில் சாத்தியப்படும் நிலைமை ஏற்படலாம்.

### தென்னாசியாவும் அல்கொய்டாவும்

தென்னாசியாவுக்குள் பாகிஸ்தான் பக்கம் அதிக ஈடுபாட்டை செலுத்தி வரும் அல்கொய்டா அதிக மான அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. சனாதிபதி முஷரப் பையும் அவரது ஆட்சியையும் அழிவுகளுக் குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் அல்கொய்டா பலமான ஊடுருவலை பாகிஸ் தானில் ஏற்படுத்தி விட்டன. ஒரு காலத்தில் பாகிஸ்தானை வளர்க்கப்பட்ட அல்லது உதவி புரிந்த இஸ்லாமியத் த°வீரவாதம் அமெரிக்காவின் தகர்ப்புக்கு பின்பு முஷராப்பின் ஆட்சிக்கு பின்பும் பாகிஸ்தானின் எதிரிகளாக்கப்பட்டுள்ளது. முஷராப் ஆட்சியை தக்க வைக்க தயார்படுத்தப்பட்ட எதிரி என்ற அரசியல் நாடகம் பாகிஸ் தானின் அழிவுக்குள்ளாக்க ஆரம்பித்துள்ளது. முஷராப் ஒரு ஆட்சியாளனாக மட்டுமே விளங்கலாமே அன்றி பாகிஸ்தானுக்கு எதையும் சாதிக்கும் ஆட்சியாளனாக விளங்க முடியாதென்பது தெளி வாகிறது.

இந்திய-பாகிஸ்தான் உரையாடலின் பின்புலத்தில் அல்கொய்டாவின் தாக்குதல் அச் சுறுத்தல் காரணமாக அமை யலானமென நம்பப்படுவதற்கு வாய்ப்புண்டு. பாகிஸ்தான் சமாதான உரையாடலில் அதிக நம்பிக்கை கொண்டியங்க அல்கொய்தாவை மறுபக்கத்தில் முறியடிக்க இர்ாணுவம் போராட வேண்டியதென் பதை கருத்தில் கொண்டதாகவே அமைந்துள்ளது. ஆட்சியில் அவர் கொண்ட அரசியலுக்கும் நாடோ, மக்களோ, எதையும் எதிர்பார்க்க முடியாதென்பதையே பாகிஸ்தான் போன்ற நாட்டின் அரசியல் தலை வர்கள் ஏற்படுத்திவருகின்றனர். எல்லாவற்றையும் தமது ஆட்சிக் காகவும் ஆட்சியில் ஏற்படும் நெருக் கடிக்காகவும் பயன்படுத்திக்கொண்ட ஒன்றாக அரசியலை கையாண்டு வருகின்றனர். இதன் விளைவுகளே அரசியல பொருளாதார சமூக வரு மைக்கும் நாடுகளின் அழிவுக்கும் வளர்ச்சியற்ற மீட்சியற்ற அரசியல் சமூக கட்டமைப்புக்கும் காரணமாகவுள்ளது.

எனவே உலக இராணுவ வலைப் பின்னலுக்குள் நேரடி ஆதிக்கப் போட்டிக்காக முந்திக் கொள்ள தயாராகும் அமெரிக்க படைவாபசும் உலகநாடுகளில் எழுந்துவரும் அரசியல் மாறுதலுக்குரிய தயார்படுத்தலாகவே உள்ளது. ஆபிரிக்கக் கண்டம் மேற்கு எதிர்ப்பினால் அதிக நெருக்கடியை அடைகின்ற நிலை காணப்படுவதால் படை வாபஸ் மீளவும் ஒரு பிரசன் னத்திற்கு தயாராவதையே காட்டுகின்றது. இந்தியா, சீனா ஒருபக்கமாக ஆபிரிக்கா மீதான கவனத்தை செலுத்த முயலும் போது ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா என்பன மறுபக்கமான ஆதிக்கப் போட்டியை நிறுவ ஆபிரிக்கா அரசியல் பொருளாதார, இராணுவ மையமாக மாறுகின்ற கட்டத்தை காணலாம்.

## நேர்நோக்கு

# சந்திரிகா – ரணில் சந்திப்பு ஏன்?

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவது தொடர்பான முயற்சிகளில் இறங்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் எந்த விடயத்தில்? என்பது குறித்து முரணான கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஒன்று தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துதல். இரண்டு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெறுதல். மூன்று அரசியல் அமைப்பில் சனாதிபதி முறையை ஒழிப்பதுடன் தேர்தல் முறையை மாற்றியமைத்தல் என இவை அமைகின்றன.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவது என்பது சாத்தியமான விடயமாக அல்லது தேவையான ஒன்றாகத் தெரியவில்லை. ஏனெனில் அதற்கான அவசியம் சனாதிபதி சந்திரிகாவுக்கு இல்லை. இப்பொழுது பதவியிலிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை எவ்வாறேனும் பாதுகாக்கவேண்டிய தேவை ஜே.வி.பி க்கும் உண்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் உண்டு. அதேவேளை இந்த நாடாளு மன்றம் கலைந்து போகாமல்பார்த்துக்கொள்ளும் தேவை ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாகச் சந்திரிகாவைப் பொறுத்தவரை அரசியலமைப்பு மாற்றமொன்று அவருக்கு மிகமிகத் தேவையாக உள்ளது. நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறையை நீக்கி நாடாளுமன்றத்திற்கு அதிகாரங் களை வழங்கித் தனது அரசியல் வாழ்வை நீடித்துக்கொள்வதே அவரது முக்கிய குறியாகும். அதற்காகவே அவர் கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்து நாடாளுமன்றத்தினை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இப்பொழுது நாடாளு



மன்றத்தில் பெரும்பான்மை இல்லாவிடினும் அது அவர் கையை விட்டு நழுவிச் செல்வதை விரும்பமாட்டார்.

ஜே.வி.பி யைப் பொறுத்தவரை இன்றைய ஆட்சியில் அவர்கள் சிறு பான்மையினராக இருந்தாலும் ஆட்சி அவர்களின் கைகளில்தான் இருக்கிறது. ஆட்சியைவிட்டு வெளியேறத் தயங்கமாட்டோம் எனக் கூறி மிரட்டிக் கொண்டே அவர்கள் ஆட்சியில் நீடித்திருப்பது லாபகரமானதாகும். வெளியேறினால் மீண்டும் இவ்வா றானதொரு சந்தர்ப்பம் கிட்டவும் மாட்டாது. எனவே கிடைத்த சந் தர்ப்பத்தைக் கட்சியைப் பலப்படுத்த அவர்கள் பயன்படுத்தி வரு கின்றனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடும் அவ்வாறே இருக்கிறது. அவர்களே எதிர்பாராதவாறு கூடுதல் ஆசனங்களும் ஆட்சியாளருடன் பேரம் பேசக்கூடிய வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டியிருக்கிறது. இதனால் அவர்கள் ஆட்சிக் கவிழ்ப்பை விரும்பமாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது கடந்த ஆட்சி அனுபவத்தின் மூலம் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபடாது என்றே கூற வேண்டும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் கையில் நிறைவேற்று அதிகாரம் இருக்கும் வரை நாடாளுமன்றத்தைக் கைப்பற்றினாலும் செயலற்ற அரசாங்கமாகவே இருக்க முடியும். இரண்டு வருடகாலமாக அவ்வாறான ஒரு நிலையில் இருந்தமையினாலேயே அது கடந்த தேர்தலில் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. எனவே சனாதிபதியின் பதவிக் காலம் முடியும் வரை இன்றைய அரசாங்கத்தையும் செயலற்றதாக வைத்திருக்க முயலுமே தவிர கவிழ்க்க முனையாது.

இன்று ஏனைய சிறிய கட்சிகளும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வராமைக்கு அதன் செயலற்ற தன்மையே காரணமாக அமைகின்றது. தாம் இணைந்து பெரும்பான்மையை அரசாங்கத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தாலும் ஜே.வி.பி யின் செயற்பாடுகள் எந்த விடயத்துக்குமே முட்டுக் கட்டையாக அமையும் என்பது அவற்றுக்குத் தெரியும். இவ்வாறான தொரு நிலையில் தேசிய அரசாங்கம் என்ற அளவுக்கு சனாதிபதி சந்திரிகாவும் ரணிலும் பேச்சுக்களை நடத்த முன்வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

அடுத்ததாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இவ்வாறானதொரு முயற்சி மேற்கொள்ளப்படுமா? என்றால் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க தாம் தயாராக இருப்பதாக ஐ.தே.க அறிவித்து வருகிறது. ஒரு முறை அறிவித்து விட்டு அதனை மீளப்பெற்றாலும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு அக் கட்சி வலியுறுத்தியே வருகின்றது. ஏனெனில் தனது இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் சரியென அதன் மூலம் நிரூபிக்க முடியுமென அது எதிர்பார்க்கின்றது.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஐ.தே.க வுடன் பேசினால் அது இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச வலியுறுத்தும் ஆனால் அது ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலையில் சந்திரிகாவுக்கு உபயோகமானதாக இராது.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட இன்று சந்திரிகாவுக்கு முக்கியமானது அரசியல் அமைப்பு மாற்றம். அதாவது சனாதிபதி முறை ஒழிப்பு தேர்தல் முறைமை மாற்றம் ஏனெனில் அவரது சொந்த அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் காரணியாக அது இருக்கின்றது. ஆனால் இவ் விடயத்தில் ஐ.தே.க ஒத்துழைக்குமா? என்பது கேள்விக்குரியது. ஏனெனில் அடுத்த நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியை ரணில் எதிர்பார்த்திருக்கிறார். அதனை இழக்க அவர் விரும்பமாட்டார். அத்துடன் சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் வாழ்வை நீடித்துக் கொடுக்கும் முயற்சியில் ஐ.தே.க ஈடுபடும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை பொருத்தமான தேர்தல் முறையொன்றை உருவாக்க நாடாளுமன்ற குழு ஒன்றை முன்னரே ஐ.தே.க ஏற்படுத்தியுள்ளது. அதற்கு சனாதிபதியோ அவரது கட்சியினரோ பெரிதாக ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆனால் தேர்தல் முறையால் ஐ.தே.க வும் பல பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதால் அதற்கு ஐ.தே.க இணங்கக்கூடும் இந்நிலையில் சந்திரிகா இரண்டையும் ஒன்றாகவே செய்ய வேண்டும். அதாவது சனாதிபதி முறை நீக்கமும் தேர்தல் முறை மாற்றமும் ஒன்றாகவே மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்துவாராயின் சந்திப்புகள் பயனற்றுப் போகவே வாய்ப்பு உண்டு.

**வேலவன்**

# மட்டக்களப்பின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாத நிதி....

கடந்த இரண்டு தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளின் அனைத்து கட்டுமானங்களும் முற்றாக அழிக்கப் பட்டன. இவ்வாறான நிலையில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் போர் ஓய்வுக் காலப்பகுதியில், வடக்கு கிழக்கு பகுதிகள் அபிவிருத்திப்பணிகளில் இருந்து புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது; வருகின்றது.

கடந்த ஆண்டு தென்பகுதியின் பொருளாதார வளர்ச்சிவீதம் 5.5வீதமாக இருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த நான்கு மாத காலப்பகுதியில் தென்பகுதியின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.5ஆக அதிகரித்துள்ளதென அக்கட்சி தெரிவிக்கிறது. அதே வேளை வடக்கு கிழக்கின் பொருளாதார வளர்ச்சி 0%



வீதத்திலேயே உள்ளது. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பெரும்பான்மைக் கட்சிகள் அனைத்தும் தங்களுக்குள் இழுபறிப்பட்டு, காலத்தை கடத்தும் அதே வேளை, தென்பகுதி அபிவிருத்தியில் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட்டு வருவதையே மேலுள்ள பொருளாதார வளர்ச்சிவீதம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்நிலையில் அரசினால் சர்வதேசக்கண்துடைப்புக்காக வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு கிள்ளித் தெளிக்கும் நிதியும் சர்வதேச நிறுவனங்களினால் (உலகவங்கி, ஆசியவங்கி உட்பட) கிராம அபிவிருத்திக்கென வழங்கப்படும் நிதியும், திட்டங்கள் உரிய காலத்துள் நிறைவுறுத்தப்படாததால் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.அண்மைய அறிக்கை ஒன்றின்படி மட்டக் களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 132கோடி 42இலட்சத்து 57ஆயிரம் ரூபாவில் 67 கோடி 82 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா மாத்திரம் செலவு செய்யப்பெற்றுள்ளது. இதில் 64 கோடியே 56இலட்சத்து 96ஆயிரம் ரூபா செலவு செய்யப்படவில்லை. அதாவது இம் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 48%செலவு செய்யப்படவில்லை. குறிப்பாக 'நியாப்' திட்டத்தின்கீழ் செய்யப்பட வேண்டிய 230 வேலைகளில் 38மட்டுமே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட விடயங்களில் திட்டங்கள் காலதாமதம் அடைவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. ஆனால், திட்டங்களை நிறைவுறுத்துவதில் ஏற்படுகின்ற தடைகள் நீக்கப்பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தினை துறைசார் அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய கட்டாய தேவை உள்ளது. காரணம் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் மிகவும் வறுமையானவர்கள், தங்களுடைய பிரதான தொழிலாக நளாந்தக்கூலி, விறகு வெட்டல், மீன்பிடி, விவசாயம் என்பன உள்ளடங்கும். இதில் பெரும்பாலானோர் முதல் கூறப்பட்ட இரண்டு தொழிலையும் செய்பவர்களாகவே உள்ளனர். ஒருசில நகரை அண்டியபகுதி மக்கள் இதில் விதிவிலக்காக உள்ளனர். இம்மாவட்டத்தில் அண்மைநாட்களாக வரட்சி தலைவிரித்தாடத்தொடங்கியுள்ளது. இதன்காரண மாக தற்போது வரட்சியான மாவட்டமாகவும் சிறிலங்கா அரசினால் அறிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதிமக்களின் "பூர்த்திசெய்யவேண்டிய தனித்தேவை கள்" தேங்கிக்கிடக்கின்றன. வருமான அதிகரிப்பு வழிகள் இன்றி வாடி நிற்கின்றனர். இவர்களின் துறைசார் அபிவிருத்திக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி மீளவும் நிதி நிறுவனங்களிடம் சென்றுள்ளது, அபிவிருத்தி ஆர்வலர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு குறித்த காலப்பகுதிக்குள் திட்டங்கள் நிறைவுறுத்தப் பெறாமைக்கு இப்பகுதி அபிவிருத்தியாளர்களால் கூறப்படும் கருத்துக்கள் பல உள்ளன. அவற்றில் தற்போது முக்கியபிரச்சினையாகக் கருதப்படுவது, திட்டங்களுக்கான நிதி உரிய காலப்பகுதியில் கிடைப்பதில்லை என்பதாகும். இது தீர்க்கமுடியாத பிரச்சினையன்று. இம்மாவட்டத்தை பொறுத்தவரை மாகாண அமைச்சு காரியாலயத்துக்கு அண்மையாகவே உள்ளது. எனவே திட்டங்களில் ஏற்படுகின்ற குறைகள் உடனடியாக சுட்டிக்காட்டி திட்டங்களை துரிதப்படுத் தியிருக்கவேண்டும். அல்லது மாகாண அமைச்சின் அதிகாரிகள் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவ்வாறு புரிந்துணர்வு, கடமையுணர்வு, விட்டுக்கொடுப்புகளுடனும் சேவையாற்றி கிராமமட்ட அமைப்புகளின், மக்களின் ஆலோசனைகள், ஒத்துழைப்புகளுடன் இம்மாவட்டத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவேண்டியுள்ளது. அத்துடன் அபிவிருத்தி நிறுவனங் களிடையே உள்ள முகாமைக் குறைபாடுகள் நீக்கப்படுவதுடன் நடைமுறைப் படுத்துகின்ற திட்டத்தினூடாகவே இம்மாவட்ட எழுச்சியும் வீழ்ச்சியும் தங்கியுள்ளது என்பதையும் கவனத்தில் கொண்டு செயலாற்ற வேண்டியுள்ளது. எது எவ்வாறு இருப்பினும் அபிவிருத்தியாளர்கள் உளவிருப்புடனும், உணர்வுட னும் செயற்பட்டு நிதி நிறுவனங்களின் கைகளுக்கு நிதி மீளவும் சென்று வேறு திசைகளுக்கு திரும்புவதை தவிர்க்கவேண்டியபொறுப்பு உள்ளதென்பது மறுக்கமுடியாத ஒன்றேயாகும்.

**அ. அருள்**

# அறிவியல் மயமாக்கலுக்குள் தமிழ் மொழியின் பிரசன்னம்




எதிர்காலத்தில் தமிழ்மொழி செத்துவிடும் என்ற முன்மொழிவு மொழியிலாளர்களால் விடப்படுகின்றது. அதற்கான காரணம் நவீன அறிவியல் நவீன அறிவியல் ஆங்கிலம் - மற்றும் ஐரோப்பிய மொழிகளிலேயே இருப்ப தன் காரணத்தினால் முழுதாக அறிவியல் மயமாக்கல் நடக்கின்ற அதேவேளை அறிவியல் நவீனமய மாக்கலினாலேயே தமிழ்மொழி அழியும் என்பது இந்த முன்மொழி வின் உள்ளடக்கம் எப்படி காலத் துக்குக் காலம் தமிழ்சமகால மாற்றங் களை உள்வாங்கிவந்ததோ - அதே உள்வாங்கலை தமிழ் தற்சமய அறி வியல் மயமாக்கலிலும் செய்ய வேண்டியுள்ளது. முன்னைய காலத் தீல் குறிப்பாக கி.பி.1000த்தின் பின் வந்த அந்நியவருகையிலான சொற் கள் - தமிழாக்கம் பெறாமல் அப் படியே உள்வாங்கப்பட்டன. இதனா லேயே தமிழ் - சமஸ்கிருதம் - போத் துக்கீஸ், ஒல்லாந்து, ஆங்கில மயப் பட்டுவிட்டது. மொழிஅழிவுக்கு அடி அத்திவாரம் இதுதான். இதன்காரணத் தினால்தான் அறிவியலை தமிழ்ப்படுத் தும் இயக்கம் தமிழ்மொழியறி வியலாளர்களால் மேற்கொள்ளப்படு கின்றது.

தமிழ் அறிவியல் மயப்படுத் தலைத் தான் 'அறிவியல் தமிழ்'என்றசொல சுட்டுகின்றது. இந்த தமிழ் அறிவியல் மயப்படுத்தல் தான் தமிழ்மொழிதூய் மையாக்கல் - தமிழ் நவீனப்படுத்தல் ஆகும். அறிவியல் தமிழ் என்பது அறிவியல் சொற்களை சகல தமிழர் களும் அறியும் வண்ணம் தமிழாக் கல் - அல்லது தமிழ்சொல்லாக்கல் என்று கருதக்கூடாது. அறிவியல் தமிழ் எனப்படுவது - தமிழ் சொற் களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து ஆக்கல் ஆகும். தமிழ் புத்தி ஜீவிகள் அறிவியல் தமிழை - அல்லது தமிழில் அறிவியல் சொற்களை ஆக்குதலை கேலிக் குரியதாகக் கூறுகின்றனர். யார் யாரோ கண்டு பிடித்து பெயரிடப் பட்டுள்ள வற்றுக்கு புதிய சொற்களை உருவாக்க நீங்கள் யார் என்று கேள்வி எழுப்புவதும் - உருவாக்கிய வர் சூட்டியபெயரையே பயன்படுத்த வேண்டும் என்ற வரட்டுத்தனம் அவர்களிடம் உள்ளது. உண்மையில் அது அவர்களின் அறியாத்தனம். உலகில் உருவாக்கப்பட்ட பொருட் களுக்கு அதனை உருவாக்கியவர் கள் பெயர்களை சூட்டுகின்றனர். ஆனால் அதனை பயன்படுத்தும் பிறமொழி மக்கள் அதன் காரணகாரி யத்தை வைத்து அதற்கு தமக்குரிய பெயர்களை சூட்டுகின்றனர். ஐரோப்பா வில் உள்ள மொழிகள் ஒவ்வொன் றும், தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள மொழிகள் அறிவியல் உரு வாக்க சாதனங்களுக்கு தமது மொழி க்குரிய சொற்களை சூட்டி அதன் படியே அழைக்கிறார்கள். இதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் தமிழில் தான் இதற்கு புத்திஜீவிகள் எதிர்ப்பைக்காட்டுவதும், கேலிசெய்வதும் நடக்கின்றது. ஒரு பொருளை சுயமொழிப்பெயர்களால் சுட்டுவதால் அதனை எந்த ஒரு பாமர னும் விளக்கக்கூடியதாக இருக்கும். தமிழ் அறிவியல் மயமாக்கப்படாது போனால் தமிழ் மொழி அழிவது நிச்சயம்.





அதனால் தமிழை நவீனப் படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள் ளது. தமிழகத்தில் அரசு இதனை நடைமுறைப்படுத்தாவிட்டாலும் - இதற்கான பணிகளில் தமிழ்மொழி யறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இதில் அறிவியல் அறிஞர்களும்(விஞ்ஞானி களும்) ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் அறிவியல் சார் தமிழறிஞரான - மணவை முஸ்தபா, நீரியல் அறிவிய லாளர் வா.செ.குழந்தைசாமி, விண் வெளி அறிவியலாளர் நெல்லை, சு.முத்து உள்ளிட்ட அறிவியலாளர் அணியினர் தமிழில் நல்ல அறிவியல் சொற்களை உருவாக்குவதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். தமிழில் முடியவே முடியாது என்ற மருத்து வம், பொறியியல் கற்பவர்களுக்கே கூட முழுதாக தமிழ் மயப்பட்ட சொற்களஞ்சியங்கள், பாடத்திட்டங் கள், பாடநூல்கள் தமிழகத்தில் தயார்செய்யப்பட்டுவிட்டன. ஆனால் அதை அங்கு நடைமுறைப்படுத்த எவரும் தயாராகவில்லை. இன்று உலகினை அதிகம் ஆளும் கணனி இயக்கத்தொகுப்பு தயாரிப்பாளர் களான 'மைக்ரோசொப் நிறுவனம்' தனது கணனி இயக்கத்தொகுப்பு களில் தமிழ் எழுத்துருக்களை போடத்தொடங்கிவிட்டது. உலகம் தழுவி தமிழர்கள் அதிகம் கண னியை (இணையத்தை) பயன்படுத் துவதால் வணிகரீதியாக கணனியில் தமிழைக்கொண்டுவருவதில் 'மைக் ரோசொப்' முனைப்புக் காட்டுகின்ற தெனில் தமிழ் அறிவியல் மயப்படுத் தல் நடைமுறைச்சாத்தியமற்ற தொன்றல்ல.

உலகில் ஐரோப்பிய, தென் கிழக்காசிய மொழிகளில் மைக்ரோ சொப் என்ற அமெரிக்க நிறுவனம் வின்டோஸ் இயக்கத்தொகுப்பு களை அவர்களின் மொழிகளிலேயே தயாரித்து விட்டுள்ளது. இதற்கு அவற்றின் பொருளாதார பலம் காரணமான அவற்றின் இயல்தகு தன்மையே ஆகும். தமது மொழி களில் தரப்படா விட்டால் தமது தயாரிப்பு களை அவர்கள் நிராகரித்து விடுவார் கள் என்ற பயம் தான் காரணம்.

இன்று தமிழீழ போராட்டத் தினால் தமிழினம் உலகம் முழுதும் பரந்து வலுவான பொருளாதார சக்தியாகவும் வளர்ந்து வருகின்றது. இந்திய உபகண்ட மொழிகளில் இணையத்தில் அதிகம் பயன்படுவ தாக தமிழே உள்ளமை ஒருபலம். இது அதிநவீன அறிவியலான கணனியில் தமிழ் தாக்கம் செலுத் தும் பலத்தை காட்டுகின்றது. ஒரு கட்டத்தில் மைக்ரோசொப் தமிழில் வின்டோஸ் இயக்கத்தொகுப்புகளை (வணிகநோக்கினாலும்), தமிழிலும் தயாரிக்கும் நிலை வரலாம்.

ஆகவே தமிழ்வாழ தமிழ் அறிவியல்மயப்படவேண்டிய கட்டா யம் ஏற்பட்டுள்ளது. அப்போதுதான் தமிழ் வாழும் - தமிழினை அறிவியல் மயப்படுத்தல் என்பதை பிற்போக்கான தாகவோ - கேலிக்குரியதாகவோ கருதுவோரே பிற்போக்கானோர்-கேலிக்குரியோர் அறியாமையினர்.

**த.அருவி**

---

# மாரடைப்பு வராமல் தடுப்பது எப்படி?




01.நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப் பதாகத் தோன்றினாலும், உங்கள் நெருங்கிய இரத்த உறவினர்களுக்கு மார டைப்பு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, பாரிச வாதம் போன்ற நோய்கள் இருக்குமானால் நீங்களும் மாரடைப்பைத் தடுப்பதற் கான நடவடிக்கைகளை கரிசனையுடன் அனுசரிக்கவேண்டும். ஏனையவர்களுக்கும் கூட சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

02. மாரடைப்பு நோய்க்குக் காரணமான, இருதயத்திற் கான இரத்தக் குழாய்களை கொழுப்புப் பொருட்கள் அடைக்க ஆரம்பிப்பது சிறுவயதிலேயே தொடங்குகிறது. எனவே இந்த நோயைத் தடுப்பதற்கான சீரான உணவு முறைகளையும், ஏனைய நடைமுறைகளையும் நீங்கள் மாத்திரமின்றி உங்களது பிள்ளைகளும் அறிவதும், கடைப்பிடிப்பதும் நல்லது.

03. நீங்கள் புகைபிடிப்பவராயின் அதனை உட னடியாக நிறுத்துங்கள். புகைபிடிப்பவர்கள் இளவயதிலேயே திடீர் மரணமடைவதற்கான சந்தர்ப்பங்கள் ஏனையவர்களைவிட ஐந்து மடங்கு அதிகம் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. புகைப்பதை நிறுத்திய ஒரு வருடத்துக்குள்ளேயே அது சாதாரணமானவர்களின் அளவிற்குக் குறைந்துவிடுகிறது.

04. மனித இரத்தத்தில் கொலஸ்ரோல் என்ற கொழுப்புப் பொருள் இருக்கிறது. இது 180 mg/dl என்ற அளவிற்குக் கீழே இருப்பவர்களுக்கு மாரடைப்பினால் மரணம் உண்டாவது மிகக் குறைவு. இது 200 mg/dl க்கு மேற்பட்ட வர்கள் மருத்துவர்கள் கூறும் உணவுக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதும், 240 mg/dl மேற்பட்டவர்கள் அதனைக் குறைப்பதற்கான மருந்துவகைகளை உட்கொள்ளுவதும் அவசியமாகும். 20 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தமது இரத்த கொலஸ்ரோல் அளவை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அளவிட வேண்டும் என இதுபற்றி ஆராய்ந்த மேல் நாட்டு நிபுணர்கள் குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது. ஆயினும் இது எமது நாட்டில் சாத்தியமானதல்ல.



05. கொலஸ் ரோல் சேர்ந்துள்ள உணவு வகைகளான முட்டை மஞ்சள்கரு (வாரத்திற்கு இரண்டு), மிருக இறைச்சி, பாலாடை, நெய், சீஸ், பட்டர் போன்றவற் றைக் குறைந்த அள விலேயே உணவில் சேருங்கள். ஈரல், இருதயம், சிறுநீரகம், மூளை, இறால், ஈக்கு இறால், நண்டு போன்ற கொலஸ்ரோல் மிக அதிகமுள்ள உணவுகளைத் தவிருங்கள்.

06.ஏனைய கொழுப்புப் பொருட்களையும் மிதமாகவே உண்ணுங்கள். தேங்காய் எண்ணெய்க்குப் பதில் நல்லெண் ணெய், சோயா எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகிய வற்றை உபயோகியுங்கள், இவற்றிலுள்ள HDL என்ற உயர் அடர்த்தி லைப்போ புரதம் மனித உடலுக்கு மிக அவசியமானது.

07.மீன், பறவை இறைச்சி, தீட்டாத அரிசி, குரக்கன், கோதுமை, நூடில்ஸ், உருளைக்கிழங்கு, மரவள்ளி, ஏனைய காய்கறிகள், இலைவகைகள், பழவகைகள் போன்றவற்றை உணவில் அதிகம் சேருங்கள்.

# தலையிடியை அலட்சியப் படுத்தாதீர்கள்

தலையிடி மனிதர்களுக்கு அதிகமாக ஏற்படும் நோய்களில் ஒன்று: அயினும் பல சந்தர்ப்பங்களில் கடுமையான துன்பத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தலாம்.

தலையிடி என்பது தனி ஒரு நோயல்ல. அது வேறு ஏதாவது நோயின் அறிகுறியாகவே உண்டாகும்.



தடிமன், காய்ச் சல், வேலைப்பழு போன்ற பாரதூர மற்ற நோயின அறிகுறியாகவும் தலையிடி ஏற் படலாம், அல்லது மூளைக்காய்ச்சல். மூளைக் கட்டி, மூளையினுள் இரத்தப் பெருக்கு போன்ற மிகவும் ஆபத்தான நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

# அழிவுகளுக்குள் இலாபம் தேடும் வல்லரசுகளின் போக்குகள்

**சு.ஞாலவன்**

> *முன்னாள ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனும் ஒரு காலத்தில் அமெரிக்க அரசினால் மிகவும் விரும் பப்பட்டவர் தான்! அமெரிக்க நிறுவனமாகிய Halliburton இன் தலைமைப்பதவியை எட்டு வருடங்களாக வகித்த தற்போதைய அமெரிக்காவின் துணை சனாதிபதி டிக் சென்னி முன்பு சதாமின் அரசோடு நெருக்கமான வர்த்தக உறவுகளைக்கொண்டிருந்தவர் மாத்திரமன்றி புஷ் சீனியரின் ஆட்சியில் 1992 வரை பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தவர். என்ன தலை சுற்றுகிறதா?*

'மூன்றாம் உலக நாடுகளில் ஊழல் மலிந்து காணப்படுகின்றது' 'லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு அரசியல்வாதிகள் பொதுமக்களுக்குப் படுபாதகமான தீமைச்செயல்களில் ஈடுபடுகிறார்கள்'. மேற்கூறிய கருத்துக்கள் பொதுவாக சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம். ஆனாலும் இந்த அங்கீகாரத்தின்போது எளிமையான இன்னுமொரு உண்மை ஏனோ அவைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. லஞ்ச ஊழலின் போது கொடுப்பவர், பெறுபவர் என எப்போதும் இரண்டு தரப்பினர் சம்பந்தப்படுகின்றனர். லஞ்சம் மலிந்த இந்த மூன்றாம் உலக நாடுகளிலுள்ள ''பெறுபவர்களைப்'' பற்றி விழிப்பாயிருக்க முயலும் நாம், அதைக்கொடுத்து சுயலாபம் ஈட்டிக்கொள்ள விளைபவர்களின் பின்னணி பற்றியும் சிந்திக்கவேண்டும் அல்லவா! ஆகவே, இனிமேல் பொது மக்களின் அடிப்படை உரிமைகளை விற்று ஊழல் புரிந்தவர்கள் பற்றிய செய்திகள் காதில் எட்டும் போது, அந்த உரிமைகளைப் பறிப்பதில் தீவிரமாக இருந்தவர்கள் பற்றிய செய்திகளையும் அறிய முயலுங்கள்! இப்படியான சம்பவங்களைத் தொடர்ச்சியாக அவதானிக்கும் போது, நிரந்தரமான சார்புத்தன்மையோ அன்றி எதிர்ப்புணர்வோ இல்லாமல் அனைத்தும் பொருளாதார இலாபம் கருதியே கையாளப்படுகின்றன என்பது தெரிய வரும். இந்தவகையில் வரலாற்றின் சில கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்னணி பற்றி இங்கே பார்ப்போம்.

பெல்ஜியக்காலனித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடாகிய கொங்கோக் குடியரசு (முன்னாள் சையர்) பெயரளவில் விடுதலை பெற்றதாகக் கருதப்பட்ட போதும், 1960களில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான போராட்டங்களின் பின்னரேயே, பிரதமர் லுமும்பா (Patrice Emery Lumumba) இற்குக்கீழ் மக்களாட்சிப் பண்புகளுடன் கூடிய அரசாகப் பரிணமித்தது. கொங்கோ நாட்டின் கனிய வளங்கள், கொங்கோ நாட்டு மக்களின் சொத்துக்கள் என்று செயற்பட்ட இவரின் போக்கு, மக்களாட்சி சனநாயகம் என்று அடிக்கடி பேசிக்கொள்ளும் மேற்கு நாடுகள் அதுவரை கொங்கோவில் அனுபவித்து வந்தவைகளுக்கு இடையூறாக இருந்ததினால், அமெரிக்க உளவு நிறுவனமாகிய சி.ஐ.ஏ. பெல்ஜிய அதிகாரிகள் சிலரின் உதவியுடன் லுமும்பாவைக் கொன்று, அங்கே நிலவத் தொடங்கிய மக்களாட்சிக்கு முடிவுகட்டியது. அதைத் தொடர்ந்து தமக்கும் சார்பான மொபூட்டோவை( mobutu sese-seko) ஆட்சியில் அமர்த்தியது மேலைத்தேயம். தொடர்ந்து 32 வருடங்களாகப்பதவி வகித்த மொபூட்டோ தன் எஜமானர்களுக்குச் சிறந்த விசுவாசியாகவும், மக்களின் சொத்தைச் சூறையாடி ஐரோப்பிய நாடுகள் எங்கும் தன்பெயரில் சொத்துச் சேர்ப்பவராகவும் இருந்து வந்தார். இவரது ஆதரவில் அல்லது ஒத்துழைப்பில் பல பில்லியன் டொலர்களைச் சம்பாதித்து வந்த நிறுவனங்களின் சார்பில் அந்தந்த நாடுகள் இவரது அடாவடித்தனத்தை அமைதியுடன் அங்கீகரித்தன. இருந்தும் மொபூட்டோவின் தனிமனித ஓர்மம் அதிகரித்து, எஜமானர்களுக்கு அடங்காத பிள்ளையாக இவர் மாறியபோது, இவருக்கு எதிராகப்போராடிக்கொண்டிருந்த பிடல்கஸ்ரோவின் பாசறையில் வளர்ந்ததாகக் கூறப்படும் லோறன்ற் கபிலாவிற்கே உதவி செய்ய அமெரிக்கா தயாரானது. தீண்டத்தகாத புரட்சியாளர் எனக் கருதப்பட்டு வந்த கபிலா திடீரென்று அமெரிக்காவின் நண்பனாகக் கருதப்பட்டார்.

கபிலாவிற்கு ஆதரவாக அமெரிக்கக்குண்டுவீச்சு விமானங்களும் மொபூட்டோவின் படைகளைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இருந்தும் வெற்றி பெற்று சனாதிபதியாகப் பதவியேற்ற கபிலா, வாக்குறுதி அளித்தபடி தனது நாட்டுக் கனிய வளங்களை மேனாடுகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்காமல் முரண்பட்டார். மீண்டும் ஒரு தலையிடி உருவாகிவிட்டதே என்று யோசித்த அமெரிக்கா கபிலாவை அகற்றுவதற்காக, அப்பிராந்தியத்தில் இருந்து வந்த இனக்குழும வேறுபாடுகளைக் குரோதங்களாக்கி ருவாண்டாவை முன்னரங்கில் வைத்து 1998 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் கொங்கோ மீதான போரைத்தொடங்கியது. கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களின் பின்னர் 2001ஆம் ஆண்டு சனவரி மாதம் கபிலா கொல்லப்பட்டு, போர் ஓர் தற்காலிக தேக்கநிலையை அடைந்தது. 1945 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெற்ற கனிய வளங்களுக்கான போர்களிலேயே மிக மிக மோசமானதாக ஐ.நா.வினால் இது கருதப்பட்டது. இங்கு இருதரப்பிலும் கொல்லப்பட்டவை பெறுமதி குறைந்த ஆபிரிக்க உயிர்களே என்பதுதான் மானிடநேயத்தையே மூச்சுப் போல அடிக்கடி முணுமுணுப்பவர்களின் கருத்துப் போலும்! மேற்குறித்த காய் நகர்த்தல்களில் ஈடுபட்டிருந்த மேற்குநாடுகள், தத்தம் நாட்டு முதலீட்டாளர்களினதும், பாரிய நிறுவனங்களினதும் விருப்பு வெறுப்புக்களையே தங்கள் அரசியல் நிலைப்பாடாகக் கொண்டிருந்தன.

இதே போல அமெரிக்க நிறுவனங்களான **Exxon Mobil** மற்றும் **monsanto** கடந்த சனாதிபதித்தேர்தலின் போது ஜோர்ஜ் புஷ்ஷிற்கு அளித்த நன்கொடைகளின்(?) பிரதி பலிப்பாகவே, உலகச்சூழல் மாசடைவதைத் தடுக்கும் கியூட்டோ உடன்படிக்கைக்கு எதிராக அமெரிக்க அரசு செயற்படுகிறதென, வேர்ணர், வைஸ் **(K.Werner, H.Weiss)** போன்ற ஆய்வாளர்கள் உறுதி கூறுகின்றனர்.

அண்மைக்காலத்து நிகழ்வொன்றினை இங்கு எடுத்துக்கொள்வது சுவாரஸ்யம் மிக்கதாக இருக்கும். மத்திய ஆசிய நாடுகளான துருக்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெக்கிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து நிலவாயுவினையும், எரிபொருளினையும் தொடர்குழாய்கள் மூலம் விரும்பும் வேறு இடங்களிற்கு நகர்த்திச்செல்வதற்கு, அமெரிக்க நிறுவனமான **Unocal lud Enron** இற்கு ஆப்கானிஸ்தான் அவசியமாகப்பட்டது. தற்போது உலக மகாபாவிகளாக ஊடகங்கள் சித்தரிக்கும் தலிபான் பிரதிநிதிகள் அமெரிக்காவிலே 1997-98 காலப்பகுதியிலே செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி, அந்த அமெரிக்க நிறுவனம் தலிபான்களுக்கு பலமில்லியன் டொலர்களை வழங்கியது.




முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனும் ஒரு காலத்தில் அமெரிக்க அரசினால் மிகவும் விரும்பப்பட்டவர் தான்! அமெரிக்க நிறுவனமாகிய **Halliburton** இன் தலைமைப் பதவியை எட்டு வருடங்களாக வகித்த, தற்போதைய அமெரிக்காவின் துணை சனாதிபதி டிக் சென்னி முன்பு சதாமின் அரசோடு நெருக்கமான வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தவர் மாத்திரமன்றி, புஷ் சீனியரின் ஆட்சியில் 1992 வரை பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தவர் என்ன தலைசுற்றுகிறதா? மேலுள்ள பந்தியை மீண்டும் ஒருமுறை வாசித்து யார், யார், எப்படி எங்கே என்று நீங்கள் உள்வாங்கியவற்றை உறுதிப்படுத்திவிட்டுத் தொடருங்கள்! ஆமாம் இந்த **Halliburton** நிறுவனம் என்ன உற்பத்தி செய்கின்றது என்று கேட்கத் தோன்றுகிறதா? அமெரிக்க இராணுவத்தின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதில் இது முக்கியபங்கு வகிக்கின்றது. ஈராக் மீதான இரண்டாவது யுத்தம் ஆரம்பிக்க முன்னரேயே, சேதமாக்கப்படப் போகும், நாசமாக்கப்படப்போகும் ஈராக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஒப்பந்தங்களையும் **Halliburton** உடன் அமெரிக்காசெய்திருந்தது. அதாவது போரை நிர்ணயிப்பதில்ஒருவனாக இருந்தவரே, கட்டியெழுப்புவதிலும் தன்கை வரிசையினைக் காட்டியுள்ளார்.

'யாவும் கற்பனையே' கதை ஒன்றுகேட்கவிருப்பமா? கத்தி வைத்திருப்பவன் குத்துவான். காயப்பட்டவன் மருந்து கட்டுவான. ஆறிய காயத்திற்குப் பக்கத்திலே இன்னும் ஆழமாகக்குத்தச் சொல்லி, கத்திக் கடைக்காரன் கடனடிப்படையில் கத்தியை வழங்குவான். மருந்துக் கடைக்காரனுக்கும் மட்டற்றமகிழ்ச்சி, இப்படியே தொடர்ந்து எண்ணிப்பாருங்கள்!

மீண்டும் கட்டுரை தொடர்கிறது ஆப்கானிஸ்தான் பக்கம் திரும்புவோம். 1997,98காலப்பகுதியில் அமெரிக்காவின் ரெக்சாஸ் (texas -புஷ் கவர்னராக இருந்தமாநிலம்) நகரிலே விருந்தாளிகளாக இருந்த தலிபான் பின்னாளில் **Enron, Unocal** நிறுவனங்களின் விருப்புகளிற்கு முழுமையாக இசையமறுத்த போது போர் நிகழ்த்தப்பெற்றது. முஸ்லிம் அடிப்படைவாதிகளின் மூர்க்கத்தனமான எதிர்ப்பினை நினைத் தஞ்சி, அங்கிருந்த தலிபான்களின் கிராமியத்தலைவர்களான **Warlods** ஐ பணம் கொடுத்து வாங்கியது. இதற்காக **CIA** இனால் செலவு செய்யப்பட்ட 70 மில்லியன் டொலர் ஒப்பீட்டளவில் குறைவான தொகையே என்று சனாதிபதி புஷ் மகிழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

உலகரங்கிலே நிகழ்ந்தேறிய சில போக்கியல்புகள் மூலம் அவற்றைத் தீர்மானித்த காரணிகள் பற்றிப்பார்த்திருந்தோம். இதனூடாக சர்வதேச அரசியலின் செல்நெறியையும் கண்கூடாகக் காணலாம். எண்ணெய் வளமும், கனியவளமும் நிறைந்து, மேற்கூறிய நாடுகளைப் பீடித்திருந்த முக்கியத்துவம் நம் சிறிய தாயகத்தைப்பொறுத்தவரைஇல்லை. சிறிலங்கா அரசோடு ஒப்பிடுகையில் இராணுவச்சமநிலையைத் தாண்டிய ஒரு பலமான நமது நிலையே, இலங்கைத் தீவைப்பொறுத்தவரையில் சர்வதேச நாடுகளின் முழுமையான ஆதரவுநிலை அல்லது குறைந்தபட்சம் சிறிலங்கா அரசிற்கு ஆதரவளிப்பதை அவை நிறுத்திக் கொள்வதற்கு வழி வகுக்கும்.

இந்தவகையில் தீர்க்கதரிசனமான செல்நெறியில் தமிழினத்தை வழிநடத்தும் நமது தேசியத் தலைவரின் கீழ், ஒவ்வொருவரும் தாம்ஆற்றவேண்டிய கடமைகளின் அவசர அவசியத்தை உணர்ந்தவராய் செயலாற்றுவோம்! கூடவே தனிமனித விழிப்புணர்வும் முழுத்தேசியத்திற்குப் பலம் ஊட்டும் என் பதை அகத்தேற்று, ஆளுமைமிக்கவர்களாய் ஒவ்வொரு தமிழரும் எழுவோம்!

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

மண்டைதீவில் கண்ட மனதை உறைய வைக்கும் காட்சிகள் என்ன வென்பதை பார்க்குமுன் அதன் சூத்திரதாரிகள் அதனை நடத்தியவர்கள் கட்டளையிட்ட தளகர்த்தர்கள் பற்றிப் பார்க்கலாம். ஏனெனில் அவர்களே இன்று சிறிலங்காப்· படைத்துறை உயர் தலைமையில் உள்ளனர். கேள்வி கேட்கப்பட வேண்டிய, நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்- இன்று படைத்துறை உயர்மட்டத்தில் உள்ளனர். அவர்களின் மறுபக்கத்தை காட்ட,

மண்டைதீவில் உறையவைத்த காட்சியின் சூத்திரதாரிகளைப் பற்றி முதலில் சொல்லலாமென நினைக்கிறோம். தமது வீரபிரதாபமாக இராணுவம் 'திரிபிடபலய' நடவடிக்கைபற்றி வெளியிட்ட அறிக்கையின் சாட்சியமாக இத்தகவலை தருகிறோம். இது ஒரு பதிவு.

திரிபிடபலய நடவடிக்கை (தீவகமக்கள் படுகொலை நடவடிக்கை)

1990 ஓகஸ்ட் 22 இல் ஆரம்பிக்கப்பட்டது. உயர் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ

(1992 இல் திரிபிடபலயவில் அழித்த மண்ணில் அவர் அழிக்கப்பட்டார்)

இணைப்புக்கட்டளை தளபதி- பிரிகேடியர் ஜாலியநமுனி (ஓய்வு




பெற்றுவிட்டார்)

(02) சிங்க றெஜிமன்ட் லெப். கேணல் சரத் பொன்சேகா (இப்பொழுது இராணுவ தலைமை அதிகாரி)

(03) கஜபாகு றெஜிமன்ட் லெப்.கேணல் கோட்டபாஜா ராஜபக்ச (ஓய்வு)

(04) கஜபாகு றெஜிமன்ட் லெப். கேணல் சாமினி குணசேகர (56ஆம் டிவிசன் தளபதியாக கனகராயன் குளத்தில் இருந்து ஓயாத அலைகள் மூன்றில் தப்பியோடியதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டார்)

கொமாண்டோக்கள் - லெப். கேணல் சாமினிஹெற்றியாறாச்சி (தொடர்ந்து சமாதானம் வரை கொமாண்டோ தளபதியாக அழிப்புகளை செய்து வந்தவர்.)

கடற்படை பின்னணி SLNS ரணகாமி (P463) பீரங்கிப் படகு SLNS சூரயா பீரங்கிப் படகு (1995இல் திருகோணமலை துறைமுகத்தில் வைத்து கடற்கரும்புலி தாக்குதலில் அழிக்கப்பட்டது.

SLNS அபிதா (கட்டளைக் கப்பல்) கடற்கரும் புலிகள் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரால் வல்வை கடலில் 1991இல் தாக்கி சேதமாக்கப்பட்டு-பின்னர்-கடற்கரும்புலிகளால் தகர்த்து அழிக்கப்பட்டது.) திரிபிடபலயவின் அபிதா தளபதியாக இருந்து கடற்படை தலைமை அதிகாரி மட்டத்திற்கு உயர்ந்தவர் கப்டன் ரெரன்ஸ் சுந்தரம். படை இறக்கத்திற்கு நெடுந்தீவு மக்கள் போக்குவரவில் இருந்து பறிக்கப்பட்ட வலம்புரி, குமுதினி படகுகள் பயன்படுத்தப்பட்டன. தொடர்ந்து படைப்பயன்பாட்டிலிருந்த வலம்புரியும் போரில் அழிக்கப்பட்டது. அத்துடன் தரையிறக்கத்தில் கடற்படையின் தறையிறக்கக் கப்பல்களான SLNS கண்டுல, SLNS பப்பதா என்பனவும் பயன்படுத்தப்பட்டன. கண்டுல கற்பிட்டிக் கடலில் மூழ்கிப் போனது. பப்பதா கடற்கரும்புலிகளால் அழிக்கப்பட்டது. திரிபிடபலய அழிப்பு நடவடிக்கை வேளை ஊர்காவற்துறை, வேலணை, மண்டைதீவு மக்கள் தொகை 57000- இதில் தான் சிங்களப்படைகள் தம் ஆக்கிரமிப்பு படுகொலை நடவடிக்கையை மேற்கொண்டன. அவற்றின் அழிப்பின் சாட்சியம் தான் மண்டைதீவில் கிடந்தது.

வடதமிழீழத்தில் அநேகமாக முதல் பெரும் (MUSS) படுகொலை அதுவாகத்தான் இருக்கும். எத்தனை மனித மனங்களை உறைய வைக்கும் காட்சி- இன்றைய உலக மொழியில் கூறுவதானால் ஒருபெரும் மனித புதைகுழி அதைவிட பெரும் மனிதப் புதை கிணறு மண்டைதீவில் காணப்பட்டது.

அது தான் மக்களை உறையவைத்த காட்சி மண்டைதீவின் நகர்ப்புறம் அலங்கோலமாய் சிதறிக்கிடந்தது. மக்கள் எடுக்காது விட்டோடிய பொருட்கள் சிதைக்கப்பட்டு வீதிகள் எங்கும் சிதறிக்கிடந்தன. இருப்பிடங்கள் உடைக்கப்பட்டுக் கிடந்தன. பேரழிவுக் காட்சியாக அது கிடந்தது.

புகையிலைச் செடிகளினால் அள்ளக் குறையாத கடலில் உழைத்துக் களைத்துச் சேமித்த சொத்துக்கள் ஒரு கணத்தில் சிதறிக் கிடந்ததை மண்டைதீவில் காணக்கிடைத்தது.

அங்கு கடல்கள் மட்டும் சிதறடிக்கப்பட்டிருக்கவில்லை உழைப்பும் மனங்களும் கூடத்தான் சிதைக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டுக் கிடந்தன.



துருவன்




# மூத்த மனித குடியிருப்பாக கந்தரோடை

யாழ்ப்பாணத்தின் மூத்த மனித குடியிருப்பாக இருந்தது கந்தரோடை.

இன்று கந்தரோடையில் உள்ள பௌத்த மையத்தை 'கதுருகொட' என்ற பெயரில் சிங்களவரின் தொன்மை இருப்பின் சின்னமாக இது காட்டப்பட்டு வருகிறது.

கந்தரோடை இலங்கையில் தமிழ் பௌத்தத்தின் முதுதொன்மை சான்றாகும். யாழ்ப்பாணத்தின் மூத்த மக்கள் குடியிருப்பு கந்தரோடையில் இருந்தது என்பதற்கு அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் சான்று பகர்கின்றன. கந்தரோடை தொல்லியல் மையம் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேய தொல்லியல் ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு முதல் அகழாய்வு 1918இல் சேர் போல் பீரிஸினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவரின் அகழாய்வின் போதே கந்தரோடையில் பௌத்த மையத்துக்கான அடித்தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பவளப் பாறைகளாலான வட்ட அடித்தளங்களே போல் பீரிஸினால் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த அடித் தளங்களைக் கொண்டு 1960 களில் கடைசி 1975 வரையான காலத்தில் சிறிலங்கா தொல்லியல் திணைக்களம் மேற்புறக்கோளங்களை கட்டியது. உண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது அடித்தள வட்டங்களே ஆகும். தொல்லியல் திணைக்களம் மேற்புற கோளங்களை கட்டிய ஆண்டு கற்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தாம் கட்டிய கற்களில் அடையாளத்துக்காக துளைகளையும் அது இட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தின் சிங்கள பௌத்த மையமாக காட்டப்படும் இது -விகாரை வடிவுடையதாக இருந்து வருவதாக சிங்கள மக்களுக்கு தோற்றம் காட்டப்படுகிறது. ஆனால் கந்தரோடை பௌத்த தொல்லியல் மையத்துடன் அதன் சுற்றுப்புறம் தொல்லியல் அகழாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. கந்தரோடை பிராந்தியத்தில் 1970 களில் அமெரிக்காவின் பென்சில் வேனிய தொல்கலைச் சாலையினால் ஆராயப்பட்டு வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டது.



(கந்தரோடை- தற்போது)



(கந்தரோடை- அகழ்வின் போது)

பௌத்தத்திற்கு முற்பட்ட கால மனித வாழ்வு தமிழ் மக்களின் பெருங்கற் காலத்துக்குரியதாக கந்தரோடையில் இருந்ததை பென்சில் வேனிய பல்கலைக்கழகம் வெளிப்படுத்தியது. தமிழரின் பெருங்கற் காலத்துக்குரிய மட்பாண்டங்கள் கந்தரோடையில் எடுக்கப்பட்டன. இது பௌத்தத்துக்கு முற்பட்ட தமிழரின் தொன்மை வாழ்வை வலுவாக உறுதிப்படுத்தியது.

1973இல் "விமலா பேக்லே என்ற அமெரிக்க தொல்லியல் ஆய்வாளர் கந்தரோடை பற்றிய ஆவணங்களை அறிக்கை வடிவில் வெளியிட்டு கந்தரோடையின் தொன்மையை வெளிப்படுத்தினார். இவர் கந்தரோடை கி.மு 4நூற்றாண்டுக்கு முந்தியதான பெருங்கற்கால வாழ்வை உடையது என்றார். ஆனால் சான்றுகள் அப்போது C14 கதிரியக்க காலக்கணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் பின்னர் சிறிலங்கா தொல்லியல் திணைக்கள ஆணையாளராக இருந்த சிரான் தெரணியகல கந்தரோடை சான்றுகளை அறிவியல் காலக்கணிப்புக்கு உட்படுத்தினர். இதன்படி கந்தரோடை சான்றுகளின் காலம் 3040 ஆண்டுகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. 1977 இல் C 14 கதிரியக்க காலக்கணிப்பு முடிவு தெரணிய கலவினால் வெளியிடப்பட்டது. இன்றுள்ள காலக்கணிப்பு முறைகளில் காபன் 14 கதிரியக்க காலக்கணிப்பு, மட்பாண்டங்கள். மீதான வெப்ப கதிர் காலல் காலக்கணிப்பு என்பனவே உண்மையானதாகவும் உறுதியானதாகவும் உள்ளன. யாழ்ப்பாணத்தின் தொன்மை, மக்களின் வாழ்வு கந்தரோடையின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அதைவிட தொன்மைக்கால எழுத்து மட்பாண்டங்கள், நாணயங்களும் கந்தரோடையில் எடுக்கப்பட்டன. இப்பொழுதும் கந்தரோடையில் மக்கள் குடியிருப்புப்பகுதியில் தொன்மை மட்பாண்டங்களும் நாணயங்களும் மக்களால் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிகளவு நாணயங்கள் பொன்னம்பலம் என்ற ஆசிரியரால் எடுக்கப்பட்டு கொழும்பு களனிபல்கலைக்கழகத் திடம் கையளிக்கப்பட்டது. கந்தரோடை தொல்லியல் மையமாக இருப்பதற்கு அப்பகுதியில் இருக்கின்ற குளமும்- அதன் வண்டல் மையமும் காரணமாகும். கந்தரோடை ஒரு இயற்கையான நீர்த்தேக்கமாக இருந்தது. ஒரு முக்கியமான காரணமாகும். கந்தரோடையில் அகழாய்வு செய்ய அண்மை ஆண்டுகளில் யுனெஸ்கோ முன்வந்த போதும் சிறிலங்கா அரசு அதற்கு ஆதரவளிக்கவில்லை; ஏனெனில் கந்தரோடை பௌத்த மையம் என்றகருத்து இதன் மூலம் தகர்ந்து போய்விடும் என்பதாகும். ஆனால் அறிவியல் பூர்வமான தொல்லியல் ஆய்வுகளை இதுவரை தமிழ் வரலாற்றாளர்கள் செய்யப்படவில்லை என்பது துயர் தரும் ஒன்றாகும்.

குரலோன்



## மண்ணின் மைந்தர்களின் கதை

# ஒவ்வொரு கண்ணி வெடிக்குள்ளிருந்தும் எதிரியை சிதைத்திடும் வேங்கையவள்...

— க. மிரேசு —

ஓயாத அலைகள் மூன்றின் உக்கிரமான சண்டை நாளொன்று. யாழ்ப்பாணத்தை மீட்டிடும் அந்தச்சமர் தொடங்கி சுமார் மூன்று நாட்களாகிவிட்டன. யாழ் அரியாலைப் பகுதியில் இடைவிடாத எதிரியின் எறிகணைவீழ்ந்துகொண்டிருந்தது.

பலவிதமான எதிரியின் எறிகணைகள் வினாடிக்குபலவென வீழ்ந்துகொண்டிருந்தன. கந்தகப்புகை எங்குமே பரவி . கரும்புகை மூட்டமாகவே காட்சியளித்தது. அந்தப் புகைக்குள்ளிருந்து ஓர் உருவம் உடலெங்கும் புளுதியுடன் எம்மைநோக்கி வந்தது. அது மேஜர்:-இன்பநிலா என்பதை உறுதிப்படுத்திவிட்டோம். எமக்கு கிட்டவாக வந்தவள், எறிகணைகள் வீழ்ந்துகொண்டிருந்த போதும் காப்பரணுக்குள் வரவில்லை.

தங்கச்சி உள்ளே வாங்கோ,.........

தங்கச்சி உள்ளே வாங்கோ... என்று எம்மில் ஒருவன் சொல்லச் சொல்ல அவள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தவளாய் எறிகணைகள் விழுகின்ற பக்கமாக ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் ஒரு பரபரப்புதெரிந்தது.

தங்கச்சி என்ன பார்க்கிறியள், செல்விழுகிறது தெரியலையே என்று கேட்டதும், எம்மை கோபமுடன் திரும்பிப்பார்த்தவள் எல்லாம் தெரியும் என்று சிடுசிடுத்தாள். பின் ஏதோ நினைத்தவளாக காப்பரண் வாசலில் வந்து நின்றாள்.

சில நிமிடங்கள் அந்த இடத்தில் நிசப்தமாக இருந்தது, அந்த நிசப்தத்தை இன்பநிலாவே கலைத்தாள். வேகமா ஓடிவாங்கோ, வேகமா ஓடிவாங்கோ என்று கையசைத்து, கையசைத்து கத்தத்தொடங்கினாள்.

இன்பநிலா ஓடிவந்த அதே பக்கமிருந்துசில போராளிகள் ஓடிவந்து எமது காவலரணுக்குள் புகுந்தனர். எல்லோருக்கும் மூச்சிரைக்க, காப்பரணில் ஒவ்வொரு இடத்திலும் அமர்ந்து, தங்களை ஆசுவாசப் படுத்தினர். பலநிமிடங்கள் சென்றதும் ஓடிவந்தவளில் ஒருவள் கதைக்கத் தொடங்கினாள்.

செல் இப்படி விழுந்து கொண்டிருக்க ஏன் ஓடிவந்தனீங்க, ஏன் அக்கா இப்படி ஓடிவந்தனீங்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்க, இன்பநிலா எதுவித பதிலும் சொல்லவில்லை. அவள் எதுவுமே சொல்லமாட்டாள் என்பது மட்டும் எமக்கு நன்றாகத் தெரியும்.

மேஜர் இன்பநிலா பொன்னம்மான் கண்ணிவெடிப்பிரிவின் வேலைத்திட்டங்களுக்கான பொறுப்பாளராக நாவற்குழி சண்டைக்கு வந்திருந்தபோதே அவளது திறமைகளையும், வீரத்தையும், எந்த நேரத்திலும் எதையும் எதிர்கொள்ளும் மனத்துணிவுடனும் செயற்படுவதையும் நாம் கண்டுகொண்டோம்.

அதே நாவற்குழி சண்டையில் ஒரு நாள் எதிரியின் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்தன. எறிகணைகள் மழைபோல்கொட்டத் தொடங்கிவிட்டன. எதிரி முன்னேறுவதற்கான அறிகுறிகள் தென்படவே தனது வேலை செய்து முடிக்கப்படவில்லை. அதனைச் செய்துவிட வேண்டும் என்று, இரண்டு போராளிகளை கூட்டிக்கொண்டு பலத்த எறிகணைகளின் வீழ்ச்சியிலும் முன்னரங்கு சென்று கண்ணிவெடிகளை புதைத்தாள்.

அப்படி அவள் முன் சென்று தான் இரவிரவாக கண்ணிவெடி வைக்க முயற்சி செய்தும் முடியாதுபோன வேலையை காலை செய்வது என்பது ஒரு சாதாரண விடயமல்ல, காரணம் பகல் பொழுது. எதிரியின் பதுங்கிச் சுடுபவன், இலக்கு அறிவிப்பாளன், முன்னணி அவதானிப்பாளன் என எல்லோருமே மேஜர் இன்பநிலாவின் செயலை அவதானித்துக்கொண்டே இருந்தனர் இவற்றையும்விட நிமிடத்திற்கு 50இற்கும் மேற்பட்ட எறிகணைகள் விழுந்து வெடித்துக் கொண்டே இருக்கின்றன. இவை அனைத்துக்கும் மத்தியில்தான் இன்பநிலா கண்ணிவெடிகளை புதைக்கிறாள். இந்தச்செயலானது அவளின் மேன்மையான இலட்சிய தாகத்தை வெளிப்படுத்தியது.

உண்மையிலேயே இன்பநிலா போராட்ட இலட்சியத்தில் மிகுந்த நேசம் கொண்டவள் என்பதை, அவளது களவாழ்வும் ஏனைய செயற்பாடுகளும் பலமுறை வெளிப்படுத்தின என்பது உறுதியாகிவிட்டது.

1996ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்டவளுக்கு, பாரியளவான மனவடு இருந்தது. இலங்கையின் சிங்கள பேரினவாதம் தனது இன அழிப்பு நடவடிக்கையாக சூரியக்கதிர் என்றும், சத்ஜெய என்றும் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, பல இலட்சம் மக்களை ஏதிகளாக ஓடவைத்து நாசப்படுத்தியதை நேரிலேயே கண்டவள் இன்பநிலா. எனவேதான் இனியும் பொறுக்கமுடியாது என்றவள், தன்னை முழுமையாக விடுதலைப் போராட்டத்திற்குள் இணைத்துக் கொண்டாள். அன்றிலிருந்து எப்படியாவது மீண்டும் கிளிநொச்சி, யாழ்நகரை மீட்டிடவேண்டும் என்ற மிகையான இலட்சியத்துடனேயே செயற்பட்டாள்.

மேஜர் இன்பநிலா ஆரம்ப பயிற்சியை முடித்துக்கொண்டபிறகு பரந்தன் ஆனையிறவுச்சமருக்கு சென்று முதன் முதலாக தனது கள அனுபவத்தைப்பெற்றுக்கொள்கிறாள். அதன்பின் தன்னை சோதியா படையணியில் இணைத்து, படையணியின் கண்ணிவெடிப்பிரிவில் தனது சேவையை ஆரம்பிக்கிறாள்.

விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியின் காரணமாக பொன்னம்மான் கண்ணிவெடிப்பிரிவு ஆரம்பிக்கப் பட்டபோது, அதில் தன்னையும் இணைத்துக்கொண்ட மேஜர் இன்பநிலா, எத்தனை எத்தனையோ இடர்நிறைந்த சமர்களில் எல்லாம் தனது கண்ணிவெடி செயற்பாட்டை திறம்பட செய்து முடிப்பதிலேயே கவனமாக இருந்தாள். காடு, மேடு, என எம்மவர் காவல் நிலைகளை அமைக்கும் போதெல்லாம் அங்கு சளைக்காமல் செல்லும் அவள் என்னதான் கடினம் என்றாலும் தனது கடமையைமுடிக்காமல் வருவதில்லை என்பது மட்டும் உண்மை.

ஆனையிறவு பரந்தன் தாக்குதல்களை முடித்துக்கொண்டு தனது பயிற்சிகளையும் திறம்பட முடித்துக்கொண்டவள், எங்கள் தேசத்தின் எல்லைதாண்டிவரும் எதிரியை, எல்லைக்கு முன்பே பலியெடுக்க வேண்டும் என்பதில் தீவிர உணர்வுடன் செயற்பட்டாள்.

எதிரியானவன் எங்கள் எல்லையையோ, காவலரணையோ, முகாம்களையோ, எதனைத் தாண்டுவதென்றாலும் நிச்சயமாக எல்லாவற்றிற்கும் முன்பாகவே கண்ணிவெடிகளைக் கடந்தே வரவேண்டும் என்பது போர் நியதி. அப்படி எதிரியானவன் எம்மைநோக்கி நகர்கின்ற பாதைகளை சொல்லிவைத்தாற்போல் இனங்கண்டு, அந்த இடங்களில் கண்ணிவெடிகளை புதைத்திடும் திறமை அவளிடமே இருந்தது.

"தங்கச்சி...இந்த இடத்தில வையுங்கோ!"

"இந்த இடத்தில கொஞ்சம் கவனமெடுங்கோ" இந்தா பாருங்கோ இந்த பாதை முடிவிலவாற வெளியால கூடுதலான ஆபத்து வரலாம் இதையும் கூடுதலாக கவனமெடுங்கோ!" என்று வரைபடம் பார்த்து குறிப்பிடும் பொறுப்பாளரிடம் தனது கருத்தையும் தெளிவாக சொல்லிவைப்பாள்.

"அண்ணா...! இதால வரமாட்டான் இதுக்குள்ளால நிச்சயமாக வருவான் எனவே இதனைத்தவிர்த்து இதில வைப்பம் என்பாள்."

"அண்ணா நான் இரவு சென்று இந்த இடத்தைப்பார்த்தேன் நிச்சயமாக இதால வருவான்" என்று சொல்லிவிட்டே அவள் சென்று இரண்டோ, மூன்று நாட்களில், அவள் சொன்னது உண்மையாகி இருக்கும்.

இறுதியாக அவள் குறித்து சொல்லிவிட்டுப்போன இடத்தில் ஏதோ வெடிச்சத்தம் கேட்கும், அப்படி கேட்ட இடம்சென்று பார்த்தால், எதிரியின் சிதைவுற்ற காலோ, அல்லது அவனது சிதைந்த இராணுவ சப்பாத்தோ சிதறிக்கிடக்கும் இதை வைத்துக்கொண்டே அவளது கண்ணிவெடி அனுபவத்தை புள்ளிபோட்டுப் பார்க்கலாம்.

மேஜர் இன்பநிலா ஓயாத அலைகள் இரண்டுக்கும் கண்ணிவெடி அணியாக சென்று அதன்பின் முரசுமோட்டை, ஊரியான், சுட்டதீவு பகுதியிலும் ஏனைய பகுதியிலும் கண்ணிவெடி புதைப்பதிலும், கண்ணிவெடி அகற்றுவதிலும் ஓய்வில்லாத தனது சேவையை செய்தவள் ஒட்டுசுட்டான் பகுதியிலும் கண்ணிவெடி சம்பந்தமான வேலைகளைச் செய்து வந்தாள்.

மேஜர் இன்பநிலா கண்ணிவெடிகளை வைப்பதில் மாத்திரம் கைதேர்ந்தவள் அல்ல, சிங்கள எதிரியானவன் பலப்பல விதமான, எத்தினையோ நாடுகளிலிருந்து கொள்வனவு செய்த விதவிதமான தன்மைகளையும், விதவிதமான வடிவமைப்புகளையும் கொண்ட கண்ணிவெடி வெடிபொருட்கள், சூழ்ச்சிப் பொறிகள் என எல்லாவற்றையும் செயலற்றுப்போக வைக்கும் அபார அனுபவமும் அவளிடம் இருந்தது. புதுப்புதுவிதமான எமது கண்ணிவெடிகளைக் கையாளவும், எதிரியின் புதுப்புதுவிதமான கண்ணிவெடிகளை செயலற்றுப்போக செய்வதற்காக அவள் நிறையவே படித்தும், அனுபவம் உள்ளவர்களிடம் கேட்டும் தெரிந்துகொண்டாள்.

இதை விடவும் எதிரியிடம் கைப்பற்றிய கண்ணிவெடிகளை அவனுக்கு எதிராகவே வைத்து எதிரிக்கு பெரிய அழிவுகளைச் செய்தவள் என்ற சாதனையும் அவளிடம் இருக்கவே செய்தது. இத்தனைக்கும் இன்பநிலா மிகவும் எளிமையானவள், எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுவாள், அவளுடைய செயற்பாடுகளில் இயக்கத்தின் விசுவாசமும் பற்றும் வெளிப்படையாகவே இருக்கும். எதிரி பக்கத்தில் வந்துவிட்டாலும் பயப்படாமல் தனது வேலைகளை துணிவுடன் செய்யும் அசாத்திய துணிச்சல் அவளிடம் உண்டு.

மேஜர் இன்பநிலா தாயகத்தையும், தலைவனையும் எந்தளவு நேசித்தாளோ அதேயளவு தனது சுடுகருவியையும் நேசித்தாள். எங்கு சென்றாலும் தனது சுடுகருவியுடனேயே செல்லும் அவளுக்கு மணலாற்றில் சாதனையான ஒரு நாளும் காத்துக்கிடந்தது.



மணலாற்றில் தனது சுடுகருவியை இறுகப்பற்றியவாறு இன்பநிலா நடந்துகொண்டிருந்தாள், அவளுக்கு முன்பின்னாக அவளுடைய அணிகளும் நகர்ந்துகொண்டிருந்தன. திடீரென எதிரியின் ஆழ ஊடுருவும் ரோந்து அணிவந்திருப்பதை கண்டுகொண்டாள்.

அவளது துப்பாக்கி சடசடத்து ஓய்ந்தது. எதிரியில் ஒன்று அல்லது இரண்டுபேர் காயமடைந்திருக்கவேண்டும். எதிரி திருப்பித்தாக்காமல் ஓடிவிட்டான். எதிரி காயமடைந்து இருந்தாலும் ஒருவனாவது சாகவில்லையே என்ற கவலையில் முகாம் திரும்பாமல் எப்படியும் இங்கிருந்து போறதிற்கு இடையில் ஒருவனையாவது பலி எடுக்கவேண்டும் என்று சீறிக் கொண்டிருந்தவள், மணலாற்றுப்பக்க எமது எல்லைக்காவலரணுக்கு முன்னால் கண்ணிவெடிகளை வைப்பதில் தீவிரம் காட்டினாள். அவளது தீவிரமான பற்றுதலுக்கு வித்திடுவது போல் எங்களது காவலரணை கடக்க நினைத்த எதிரியின் கால்கள் சிதறிப்போயின. இப்படி நடந்த இடத்தில் எதிரியின் அகங்காரப்பாதங்களின் சிதைவுகளே சிதறுண்டு கிடந்தன.

இப்படியாக தனது கண்ணிவெடி சேவைகளை சிறப்பாகச் செய்து முடித்த மேஜர் இன்பநிலா 09.08.2001அன்று எதிரியின் பதுங்கித் தாக்குதல் ஒன்றில் வீரகாவியமாகி, ஈழ மண்ணை முத்தமிடுகிறாள். அவளது உடல் மண்ணில் சரிந்தபோது தனது உயிர் தாய்மண்ணில் சரிந்திட தனது உயிரான சுடுகருவி தனது கரங்கள் தழுவிட, தனது நேசமிகு தலைவனின் படம் தனது சட்டைப் பையில் பாதுகாப்பாக இருக்க, வீர மரணத்தை தழுவிக்கொண்டாள்.

எதிரியால் அவளது உயிரைப்பறிக்க முடிந்ததே தவிர அவளது உணர்வை எதுவுமே செய்ய முடியவில்லை. அவளது உயிர் தமிழீழ மண்ணிற்காய் அன்று பிரிந்தாலும், அவள் தாயக உணர்வுடன் எல்லைகளில் வைத்த கண்ணிவெடிகள் ஒவ்வொரு இன்பநிலாவாக எதிரியை சிதைக்கிறது.




# தூரம் அதிகமில்லை



புதுக்குடியிருப்பு பஸ் நிலையம். நாயாறு, மடு, முகமாலை பகுதிகளுக்கு செல்வதற்காக தமிழீழ போக்குவரவுக் கழகத்திற்கு சொந்தமான பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. பஸ் நிலையத்திற்கு அருகில் பாண்டியன் நிறுவனத்தின் சுவையூற்று அழகாக கட்டப்பட்டிருந்தது. பேருந்து நிலையத்தின் முன் உள்ள வேலியின் அருகில் உள்ள பூவரச மரத்திற்குக் கீழே பச்சை, சிவப்பு வண்ணம் பூசப்பட்ட முச்சக்கரவண்டிகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. நானும் எனது மனைவியும் எங்களின் இரண்டு பெண் குழந்தைகளும் பூநகரியில் உள்ள எனது மனைவியின் சகோதரியின் வீட்டிற்கு செல்வதற்காக மடுவிற்கு செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்து கொண்டோம். பேருந்து பரந்தன் வீதியால் தனது பயணத்தை ஆரம்பித்தது. எட்டு வருடத்தின் பின்பு தமிழீழத்திற்குள் வந்து இருப்பதால் எல்லாமே புதிதாக தெரிந்தது.

நானும் எனது மனைவியும் எட்டு வருடங்களுக்கு முன்பு இந்தியா சென்று தமிழ் நாட்டிலுள்ள மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்தோம். எங்கள் குழந்தைகள் அங்கேயே பிறந்ததால் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் எங்கள் வாழ்க்கை நகர்ந்தது. தொடர்ந்து அங்கு வாழப்பிடிக்காததால் அங்கிருந்து வந்த சிலருடன் சேர்ந்து நாமும் படகுமூலம் மன்னார் வந்து புதுக்குடியிருப்பை வந்தடைந்தோம். பேருந்து இப்போது விசுவமடுவிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தது. துயிலும் இல்லத்திற்குள் மாவீரர்களது கல்லறைகள் வரிசையாக கட்டப்பட்டிருந்தன. அவற்றை பார்க்கும்போது இந்த மாவீரர்களைப் போல் உள்ள ஆயிரமாயிரம் மாவீரர்களது கனவுகள் நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும் என்று மனது சொல்லியது. தமிழீழத்திற்குள் நடைபெற்ற போர்களுக்குள் நின்று போராளிகளுக்கு உதவி செய்யாது வெளியே இருந்து விட்டேன் என்று நினைக்கும் போது என்னிலேயே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. இனி எங்கள் மண்ணைவிட்டுப் போவதில்லை என்று உறுதியாக எண்ணிக் கொண்டேன். பேருந்து புளியம் பொக்கணை சந்தியால் திரும்பி வட்டக்கச்சிசெல்லும் பாதையில் சென்று கொண்டிருந்தது. பாதையின் இரு பக்கங்களிலும் பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகள் பாதையின் கரையால் ஓடும் இரணைமடுக்குளத்துத் தண்ணீர் இவைகளைப் பார்க்கும்போது மனதிற்குள்ளே குளிர்ந்தது.

பிள்ளைகள் இருவரும் வயல் வெளிகளையும், தண்ணீரையும் பார்த்து சந்தோசத்தில் துள்ளினார்கள். பேருந்து கிளிநொச்சி பஸ் நிலையத்தை அடைந்து பின்பு அங்கிருந்து பரந்தன் நோக்கி சென்றுகொண்டிருந்தது. கிளிநொச்சியிலும் பரந்தனிலும் கடைகளும் கட்டடங்களும் மீண்டும் கட்டப்பட்டு நகரம் அழகாக காட்சியளித்தது. எம் மக்களையோ, எம்மக்களின் உடமைகளையோ அழித்து எம் மக்களை அடிமைப்படுத்த முடியாது என்பதை சிங்கள தேசத்துக்கு உணர்த்துவது போல் அந்தநகரம் நிமிர்ந்து நிற்கிறது.

பேருந்து பரந்தன் சந்தியால் திரும்பி பூநகரி நோக்கிச் சென்றது. பேருந்து நல்லூரை கடக்கும் போது பழைய நினைவுகள் ஞாபகத்திற்கு வருகின்றன. முன்பு பூநகரியிலும் ஆனையிறவிலும் இராணுவம் இருக்கும் போது இங்கிருந்து தான் மக்கள் கிளாலி செல்வதற்கான பயணத்தை ஆரம்பிப்பார்கள். அப்போது எம் மக்கள் எவ்வளவு துன்பப்படுவார்கள் சிலரின் படகுப் பயணம் கடைசிப் பயணமாகவும் முடிந்துள்ளது. ஆனால் தானைத்தலைவனின் தமிழர் படையால் ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்ட பின் எம் மக்கள் நிம்மதியாக பயணிக்கிறார்கள். தடை முகாம் இன்று தடுப்பார் அற்று கிடக்கிறது. போராளிகளின் குருதியும், தசையும் கலந்து உரமேறிய ஆனையிறவில் இன்று உப்பு உற்பத்தி பேட்டை உறுதியுடன் நிற்கிறது.

"இஞ்சேருங்கோ இடம் வந்திட்டுது இறங்குங்கோ" மனைவியின் குரல்கேட்டு நினைவுகள் தடைப்பட எழுந்து எங்கள் பயணப்பையை தூக்கிக்கொண்டு எங்கள் ஐந்து வயது மகளை கையில் பிடித்துக்கொண்டு பேருந்தை விட்டு இறங்கினேன். எனக்கு இந்த இடம் புதிது. எனது மனைவி பிறந்தது வளர்ந்தது எல்லாமே பூநகரியில் தான் 91 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து ஜெயபுரத்தில் இருந்து பின்பு 96 ஆம் ஆண்டு இந்தியா சென்ற பின் இப்போதுதான் பூநகரிக்கு வருகிறேன். "இதுதான் அப்பா வாடியடி". அந்த கடையளுக்குப் "பின்னால பாருங்கோ கோட்டை தெரியுது. உதிலதான் முந்தி ஆமி இருந்தவன்" மனைவி காட்டிய திசையை நோக்கினேன். உடைந்து போயுள்ள கோட்டைச்சுவர் தெரிந்தது. எங்கள் வருகையை எதிர்பார்த்து நின்ற மனைவியின் சகோதரியின் கணவர் வைத்திருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி நெற்புலவு நோக்கிப் பயணமானோம். சங்குப்பிட்டி செல்லும் பாதையில் மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தது. பாதையின் இரு கரைகளிலும் பூவரச மரங்கள் மஞ்சள் நிற பூக்களோடு வரிசையாக நிற்கின்றன. மைத்துனியின் வீடு ஐந்து ஏக்கர் காணியின் நடுவில் கட்டப்பட்டிருந்தது. வீட்டின் முன்னால் வேம்பு ஒன்று நிழல் பரப்பிக்கொண்டு நிற்கிறது. தங்கையைப் பார்த்த சந்தோசத்தில் அக்காவும் அக்காவை பார்த்த சந்தோசத்தில் தங்கையும் கட்டித்தழுவிக்கொண்டார்கள். பிள்ளைகளும் ஓடி வந்து சேர்ந்து கொண்டார்கள். நலமறிதல், உபசரித்தல் முடிந்தபின் நானும், மனைவியும் காணியின் பின் பகுதிக்கு வந்தோம். நாலஞ்சு தென்னை மரங்கள் நின்றன. எல்லாமே நன்றாக காய்த்திருந்தன. காணியின் பெரும் பகுதி மரங்கள் ஏதுமின்றி வெளியாக இருந்தது. ஆங்காங்கே தென்னைமரம் நின்று அழிக்கப்பட்டதுக்கான அடையாளம் தெரிந்தது. அதைப்பார்த்த எனது மனைவி அழத்தொடங்கிவிட்டார்.

"காணி நிரம்ப தென்னை மரம் நிண்டது. எல்லாம் நல்லாய் காய்க்கிறது. ஆமியள் எல்லாத்தையும் வெட்டி நாசமாக்கிப் போட்டாங்கள். இப்ப அந்த மரங்களும் நிண்டால் காணி எவ்வளவு சோலையாய் இருக்கும்." என்று கூறி கண்களை கசக்கினார்.

"விடுங்கோ அப்பா எவ்வளவோ போராளிகளின்ர இரத்தம் சிந்தி இந்த மண் எங்களுக்கு மீண்டும் கிடைச்சிருக்கு அதை நினைத்து சந்தோசப்படுங்கோ. தென்னம்பிள்ளைகள் புதுசாய் வைச்சிட்டு போறது." மனைவிக்கு ஆறுதல் கூறிய நான் எனது கண்கள் கலங்கவே திரும்பிநின்று கண்களைத் துடைத்துக் கொண்டேன். எனது கண்கள் கலங்குவதை கவனித்த என் மனைவி "நீங்கள் ஏன் இப்ப கண் கலங்கிறீங்கள் எண்டு எனக்கு விளங்குது. நீங்கள் பிறந்த காங்கேசன்துறைக்கு எப்ப போறது எண்டுதான் கவலைப்படுறீங்கள். கவலைப்படாதேங்கோ "டொட் டொட் டொட் டொட் " சத்தம் கேட்டு திரும்பினேன். எனது பிள்ளைகளும், மைத்துனியின் பிள்ளைகளும் பதுங்கியிருந்தனர். கைகளில் விளையாட்டுத்துப்பாக்கிகளோடு.

**முல்லை சதீஸ்**



# இளைய நாதம்



க.ஜானகி,
பாரதி இல்லம்.

# எங்கள் மான்

புள்ளிமான் பற்றி பாட்டுகள் எல்லாம் படிப்பீரகள். அதிகமான ஆட்கள் வீடுகளில் வளர்ப்பதையும் பார்த்திருப்பீரகள். மான்களின் கிளை கிளையான கொம்புகளை வேட்டையாடி வீடுகளில் தொங்கவிட்டிருப்பதும் பொதுவாக நீங்கள் கண்டிருக்கக்கூடியது.



உடம்பில் புள்ளிகளைக் கொண்டது. புள்ளிமான் என்றது அதன் பேரிலேயே உங்களுக்குத் தெரியும். வன்னியில் இப்ப மான்களை வேட்டையாடத்தடை. இதுக்கு முதல் புள்ளி மான் இறைச்சி கடை கடையாக தொங்கிறத பார்த்திருப்பீரகள். மான் வத்தல் பற்றி கேள்விப்பட்டிருப்பீரகள். இந்தப் புள்ளிமான்கள் எமது காடுகளுக்குரிய தனித்துவமான மான் இனம். வேட்டையாடுவதால் இது அருகிவரும் இனமாக- பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இப்படியான இனங்களை கொண்ட பட்டியலை 'ரெட்லிஸ்ட்டில்' என்று சொல்வார்கள். இந்த 'ரெட்லிஸ்ட்டில்' எங்கள் புள்ளிமானும் இருக்கு.

எங்களுக்குரிய தனித்துவமயமான இந்த புள்ளி மான் இருக்கிறதால இதின்ர உயிரியல் பெயரான அக்ஸிஸ் அக்ஸிஸ் உடன் 'சிலோனென் சிஸ்' என்ற எங்கள் பிராந்தியப் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.

எமது புள்ளி மானின் உயிரியல் பெயர் அக்ஸிஸ் அக்ஸிஸ் சிலோனென்சிஸ்.

உலகில் இருக்கிற சகல மான் இனங்களிளையும் மிக அழகானது புள்ளி மானேதான்.

புள்ளிமானில் கொம்பும் முளைக்கிறது ஆண் மானுக்கு மட்டும்தான். அந்தக் கொம்பு குறிப்பிட்ட காலம் தலையில் முளைத்து பின் முதிர்ந்த பிறகு கழன்று விழும். இந்தப் புள்ளி மான்கள் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கின்றன. ஒரு கூட்டத்தில 50 வரையான புள்ளி மான்கள் இருக்கும். எங்கட என்றும் பசுமையான வரண்ட காடுகளில தான் புள்ளிமான்கள் வாழ்கின்றன. ஆடு மாடுகள் மாதிரி இலை குழைகள் தான் இதன் சாப்பாடு. அதிகம் யானைகள் கூட்டத்தின் பின்னால் புள்ளிமான் கூட்டம் போகும் எண்டும்- அதற்கு யானைகள் முறித்துப் போடுகிற குழைகள் தான் காரணம் எண்டும் எங்கடை வேட்டைக்காரர் சொல்கினம்.

காட்டின் வெளிகொண்ட இடங்களில தான் மான் கூட்டம் நிக்கும். மானுக்கு காது கேக்கிறது வலுதுல்லியம். அதனால எதிரியளைக் கண்டால் எடுக்கும் வேகமான ஓட்டம். புள்ளி மான்களின்ர உயரம் 3அடி வரை இருக்கும். நிறை 100 கிலோவரை வரும். இன்னொ ருதகவலும் தாறன். குரங்குகள் எங்கை மரங்களில் இருந்து சாப்பிடுகுதோ அதன் கீழ புள்ளி மான்கள் நிக்கும் எங்கட காட்டில புள்ளி மானுக்கு இப்ப எதிரி யார் தெரியுமோ?

காட்டுச் சிறுத்தை. முதலை மாதிரியான ஊனுண்ணிகள் தான். எமக்குரிய தனித்துவமான மானினமான .புள்ளிமான்களையும் அழியவிடாமல் நாங்கள் பாதுகாக்க வேண்டும். எமது மரபுஇனச்சொத்துகள் அவை.

# பாவம் வெளவால்

வட்ட நிலா ஒளியிலே
வானில் வெளவால் பறந்ததாம்
எட்டி எட்டி எவ்வியே
எங்கோ எல்லாம் பறந்ததாம்.

இலுப்பந் தோப்பு நின்றிடும்
இடங்கள் தேடி அலைந்ததாம்
இலுப்பைப் பழங்கள் தின்றிடும்
இச்சை கொண்டே திரிந்ததாம்!

இங்கே உண்டு பறந்து வா
என்று சொல்லுங் குரலிலே
அங்கே வெளவால் போலவே
அழைக்குங் கூச்சல் கேட்டதாம்

கேட்ட திசையில் வெளவாலார்
கிட்டக் கிட்டச் சென்றாராம்
மாட்டுப் பட்டுக் கொண்டராம்
மரத்தில் மனிதன் வலையிலே!

உதறித் தள்ளிப் பார்த்தாராம்
உடலில் குத்துப் பட்டாராம்
கதறிக் கத்திச் சோர்ந்தாராம்
கயவன் மனிதன் என்றாராம்!

# சொற்சிலம்பம் - 50

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ட | ா் | ஜ | ஃ | றி | ஏ | டு |
| ரு | கா | நி | ா் | கௌ | சி | த் |
| அ | செ | ல் | ஆ | பி | எ | ட் |
| த | றீ | சீ | சு | உ | மூ | ஊ |
| ண | ஆ | ம் | த் | ம | தி | த |
| ர | கை | டி | இ | ப் | ஈ | தே |
| ஔ | பூ | வ | ஓ | ச | வி | ஒ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -48 இன் விடைகள்

01. சிகிரியா.

02. காங்கேசன்துறை.

## சொற்சிலம்பம் - 48 இன் பரிசுக்குரியவர்

க.கபிலேஷ், தரம் 4A
மு/பாலிநகர்-
மகாவித்தியாலயம்,
வவுனிக்குளம்.

## சொற்சிலம்பம் - 48 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.மேனகா,
தரம்-04,
கிளி/மத்தியகல்லூரி.

02. கு.தட்சாயினி,
யாழ் கோப்பாய்,
கிறிஸ்தவக்கல்லூரி.

03. பே.கவியரசன்,
யா/இராமநாதன் ம.வி
யாழ்ப்பாணம்.

04. சு.நளினி,
கொக்கட்டிச் சோலை,
மட்டக்களப்பு.

05. எஸ்.டினுசர்,
ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

06. கி.கோகிலன்,
பட்டகாடு,
வவுனியா.

07. இ.தேவிகா,
திருமுறிகண்டி,
முல்லைத்தீவு.

08. நே.கஷ்மியா,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

01. தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள் ஐந்து?

01) ......................................

02. தமிழீழத்தின் தேசிய பூ எது?

01) ......................................

பெயர் :- ......................................

முகவரி :-......................................

......................................

சொற்சிலம்பம்-50
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

# எலியாரின் தொப்பி

## பகுதி-04



# சமன்பாடு ஒன்றின் பதிவு 01

நீண்ட
இந்த நிகழ்காலத் தெருவினில்
நடக்க முனைகிறேன்
முடியவில்லை.
நீறு பூத்துப்போன-என்
வாழ்வியல் மட்டும்
மீளவும்.
நினைவுகளாய்......
'...............................'
அதன் சமன்பாடாய்
எறிகணை குடித்த
எனது தாய்....
ஏப்பமிட்ட வான்பறவை
குடித்த-
எனது தந்தை....
குரங்குகள் பிரித்த
எனது கூரை.....
கூடவே மாண்டுபோன
எனது சுற்றம்....

மறந்து விட்டது போல-இக்
காலப் புன்னகையுடன்
கலந்து-
நீண்ட இந்த நிகழ்காலத்
தெருவில்
நடக்க முனைகிறேன்
முடியவேயில்லை......

# வாழ்வுப்பாடலின் பதிவு-02

அவள் நேற்றும்
வந்திருந்தாள்.
நினைவுகளை மீட்டுப்
போயிருந்தாள்.

சோருகின்ற
குஞ்சுகளின் உடலசைவிற்காய்.
ஒருபிடி-
ஆகாரத்திற்காய்.
வான் கொட்டுமழை பாராது
வாழைக் குலையுடன் தான்
போகின்றாள்.

கொடுத்து விடுவாளோ
என்னவோ.....

சாத்தியமெனின்.
கொதித்தெழும் வீட்டுலை...
இல்லையேல்.
கொத்தாகும் காளான் முளை...

இதுவே இவளின்
நிலையாகையில்
பணம் தந்தென்ன
புலம் வந்தென்ன
கொடுத்து விட முடியுமா
எவராலும்.
இவள் துணைவனின்
என்புக் கூட்டுக்கு
உயிரை.......

நா.கானகன்





"உன் வாழ்க்கை என்பது
எங்களின் பாடமண்ணா
உன் அக முகமே
எங்களின் தோற்றமண்ணா
ஊன்றுகோல் எங்களுக்குத் தேவையில்லை.
ஊன்றுகோலாய் மாறுவதே எங்களின் நோக்கமண்ணா

# இலக்கியப்பகிர்வு

கைகள் இரண்டும் இல்லை-நீ
கலங்கிப் போகவில்லை.
கால்கள் இரண்டும் -உன்னைக்
கட்டிப்போட்டதில்லை.
விடுதலை என்பது- உன்
வாழ்வின் ஷஷஎல்லை"
நேர்வழி சென்றாய் -நீ
தலைவன் பிள்ளை
தொட்டாற்சுருங்கி உன்தோலைத்தொட்டுச்
சுருங்கிப்போகவில்லை.
நெருஞ்சி முள் உன்பாதம் பட்டு
சற்றும் வியக்கவில்லை.
முதலிப்பழமுன் பேச்சின் முன்
சொட்டும் இனிக்கவில்லை.
காற்றுக்கூட உன்படை வேலியை எட்டிப்பார்த்ததில்லை.

என்கிற சி.மாதுளாவின் அர்த்தம் பொதிந்த வரிகளுடன்

# "முதற் பயணம்"

பூ த்த பின் அட்டையுடன் வெளி வந்திருக்கிறது "முதற் பயணம்" சிறுகதைத் தொகுப்பு.

மாவீரர் லெப்டினன் கேணல் அருமை அவர்கள் பெயரில் அமைந்த அருமை கல்விக்கூடத்தின் முதலாவது வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்த சிறுகதைத்தொகுப்பு.

"கருமணி" "புனிதன்" "தமிழ்நிலா" "தேவபாணு" "சிவேந்திரன்" ஆகிய போராளிகளின் பன்னிரண்டு கதைகள் இதில் உள்ளன.அருமை கல்விக்கூடத்தில் கல்வியை முடித்துக் கொண்டு புதிய பணிகளுக்காகப் புறப்பட்டுள்ள மாணவர்களில் மேற்குறித்த சிறுகதைப் படைப்பாளிகளும் அடங்குவர்.

தமது பயிற்சியை முடித்து சான்றிதழ் பெறும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்விலேயே இந்தச்சிறுகதைத்தொகுப்பு வெளியிடப்பட்டதால் ஒரு சிறப்புத்தொகுதி இந்தத் தொகுப்புக்கு [illegible]ள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள், மூத்த உறுப்பினர்கள், போராளிகள் மத்தியிலேயே இந்த சிறுகதைத் தொகுப்பின் முதலாவது பிரதியினை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அந்த நிகழ்வில் தலைமை தாங்கிய கல்விக் கூடத்தின் பொறுப்பாளர் "நாவலன்" அவர்களாலும், கருத்துரை வழங்கிய போராளிகளாலும் சுட்டிக்காட்டப்பட்ட ஒரு விடயம்; தேசியத்தலைவர் அவர்கள் கல்விக்கூடத்தின் திறப்புவிழாவில் தெரிவித்த ஒரு கருத்தே.

"எந்த விடயத்திலும் அதன் ஆரம்ப அத்திவாரம் கல்லு வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதை விட அதன் நிறைவில் அதாவது அதன் செயற்பாட்டின் நிறைவில் கலந்து கொள்வதையேதான் விரும்புவதாக அவர் தெரிவித்தாராம்.

உண்மையில் அருமை கல்விக்கூட மாணவர்கள் தமது மூன்று வருட கல்வியில் அறுவடையின் விளைவாக வெளிப்படுத்திய கண்காட்சி, கலைநிகழ்வு, நூல் வெளியீடு என்பவை 'தலைவர்' அவர்களுக்கு பெரிதும் விருப்பமுடையதாகவே இருந்திருக்கும்.

கைகள் இரண்டையும் இழந்தாலும் சாதனைகள் பல புரிந்து வீரச்சாவு அடைந்த லெப்.கேணல் அருமை கல்விக்கூட மாணவர்களாக இந்தத் தொகுதியின் படைப்பாளிகள் தம் எண்ணத்தை பின்வருமாறு பகிர்ந்து கொள்ளுகின்றார்கள்.

"எங்கள் தாயக விடுதலைக்காய் களத்தில் நின்று போராடினோம். விழுப்புண்கள் தாங்கினோம். இதனால் எங்களது உடல் வலுக்குறைந்தது உண்மைதான். ஆனாலும் உளத்து உறுதி குறையவே இல்லை. எனினும் மீண்டும் களத்தில் நின்று செயற்பட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானோம்.

எங்களது உள்ளத்தில் இலட்சிய நெருப்பு எரிந்து கொண்டே இருக்கிறது. அதனால் என்றும் நாங்கள் ஊக்கம் பெற்றபடியே உள்ளோம்.

உடலில் ஓர் உறுப்பை அல்லது சில பாகங்களை இழந்தமையால் களத்தில் நின்று நேரடியாகச்செயற்பட முடியாத நிலையில் எமது அடுத்த கட்டப்பணிக்கான தயார்ப்படுத்தலில் தமிழீழ விடுதலைப்புலிகள் அருமை கல்விக்கூடப்போராளி மாணவர்களாகிய நாம் எமது மனப்பதிவுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள முனைகின்றோம். விழுப்புண்களால் பட்ட கற்றற்களச் சந்தர்ப்பம் எமக்களித்த பணி இது.

என இந்தப்படைப்பாளிகள் கூறுவதைக்கவனிக்க வேண்டும். எத்தகைய மனநிலையில் என்ன மாதிரியான தாகத்துடன் அவர்கள் உள்ளார்கள் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அதனையே இந்தச்சிறுகதைத்தொகுப்புக்கு அணிந்துரை வழங்கிய மூத்த போராளி இ.கபிலன் அவர்களும் வெளிப்படுத்துகின்றார்.

"இன்றைய இலக்கிய வளர்ச்சிப்போக்கில் குறிப்பிடத்தக்க பண்புயர்வுடைய பல படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவைகளில் போராளிகளினால் எழுதப்படும் படைப்புக்களின் செயலறிவால் தெரிந்து கொள்ளப்படுகின்ற போராட்ட அம்சங்கள் ஆழமாகப்பதிவாகி இருக்கவே செய்யும். அந்த உணர்வுகள் எழுத்தின் மீது அழுங்குப்பிடியாய் இருப்ப தனால் அவைகள் உன்னதமான ஆக்கங்களாகவே பிறக்கின்றன" என்கிறார் கபிலன் அவர்கள்.

கருமணி, புனிதன், தமிழ்நிலா, தேவபாணு, சிவேந்திரன், ஆகியோரால் விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர், பிரியாத வரம் வேண்டும், என்னவழி... துளிர்க்குமா? முதற்பயணம், எங்களையும் வாழவிடுங்களேன், எதிர்பார்ப்பு, அவனும் ஒரு போராளி, வேப்பமரங்கள், சிரஞ்சீவிகள் , நிலவு, அவள் மறக்கவில்லை, இங்கும் இவர்கள், என்ற தலைப்புக்களில் கதைகள் படைக்கப்பட்டுள்ளன.

கருமணி எழுதிய கதை "விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர்"

"அம்மா நீங்கள் கூட இந்தக்கறுத்தக்கண்ணாடியின் அர்த்தத்தைப்புரிந்து கொள்ளவில்லையா? என தர்மன் விம்மும் இடத்தில் வாசகர்களும் விம்முவார்கள். அவ்வாறு அந்தப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது. இதைவிட அற்புதமாக இந்தக் கதை எழுதப்படமுடியாதா எனக் கேட்கலாம். ஆனால் அது வல்ல பிரச்சினை. சொல்லப்பட்டவற்றை வைத்துக்கொண்டே எப்படி சொல்லப்பட்டுள்ளது என்பது தொடர்பில் முடிவு எடுக்க வேண்டும்.

புனிதன் எழுதிய கதை "பிரியாத வரம் வேண்டும்" "நட்பு பிரியும் இடம்" சமர்க்களம் ஆனால் அந்தப் பிரிவு கூட நண்பனுக்கு எத்தகைய உணர்வினை ஊட்டுகின்றது என்பது கதையின் முடிவில் உள்ளது.

"என்னவழி" என்ற சிவேந்திரன் கதை பெண்களின் சிந்தனைக்குரிய ஒரு கதை "துளிர்க்குமா" தமிழ் நிலாவின் கதை இராணுவத்திடம் பிடிபட்ட அண்ணாவின் நிலையை கயிறு அறுத்து வந்த மாட்டால் சேதமுறும் ரோஜாச்செடி




மூலம் பூ டகமாக காட்ட ஆசிரியர் முனைந்துள்ளார்.

"முதற்பயணம்" தேவபாணுவின் கதை. ஒரு விஞ்ஞான கற்பனைக்கதை. எனினும் ஒரு போராளி காணும் கனவின் தன்மை. நாட்டின் வளர்ச்சியில் உள்ள ஆவல் என்பன இதில் வெளிப்படுத்தப்படுகின்றன.

"எங்களையும் வாழவிடுங்களேன்" என்ற தமிழ்நிலாவின் கதை "எங்கட பிள்ளையள் தங்களை அழிக்கப்பயன்படுத்தப்பட்ட பொருட்களையே தங்களுக்கு உபயோகமானதாக மாற்றிக கொண்டு உயர்ந்து நிற்கிறார்கள" என போராளிகள் சிறப்பினை சொல்லிச் சிலிர்க்கிறது.

"எதிர்பார்ப்பு" தேவபாணுவின் கதை. "நெருப்பிற்பட்ட தளிர்போல களையிழந்த முகம்" தொலைந்து விட்ட எதையோ தேடுவது போன்ற குனிந்த தலை "பேச்சை வாழைக்காய் நறுக்குவது போல நறுக்கிக்கொள்ள" என கதை சொல்லும் நடையில் வித்தியாசம் உள்ளது.

விடுதலைப்போராளியும் இலக்கியப்போராளியும் சமூகத்தொண்டர்கள் எனக் கூறுவது தேவபானுவின் "அவனும் ஒரு போராளி" சிறுகதை.

"இந்த வேப்பமரம் மாதிரி இவர்கள்(போராளிகள்) அவங்கட மக்களுக்கு பயன்குடுக்கிறாங்கள் எண்டது ஆருக்குத தெரியும" என்கிறது "வேப்பமரங்கள் சிரஞ்சீவிகள் என்ற சிவேந் திரன் கனவு."

தமிழ்நிலாவின் "நிலவு" கருமணியின் "அவன் மறக்கவில்லை" சிவேந்திரனின் "இங்கும் இவான்" போன்ற கதைகளும் இத்தொகுப்பில் உள்ளன.

மொத்தத்தில் இக்கதைகளில் விடுதலை வேட்கை நிரம்பிய போராளிகள் அதுவும் களம் கண்ட போராளிகள் தங்கள் சக்திக்கு மேலாக தங்கள் வல்லமையைக் காட்டியுள்ளனர். ஆனால் இதுவல்ல இவர்களின் உச்சம். இவர்களின் உன்னத நிலைக்கு இன்னும் காலம் உண்டு. அப்போது இவர்கள் நிச்சயம் இதை விடச்சாதிப்பார்கள் என்பது உண்மையே.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்



# திரைவிமர்சனம்

*கொஞ்சம் புதிதாய், சிறிது விலகலாய் ஒரு சினிமா -பிரகாஸ்ராஜின் "அழகிய தீயே..."*

இரண்டரை மணித்தியாலத்தின் சில விசயங்களைச் சொல்வதாய்,.. சிலவற்றைப் பகிர்வதாய், சிலவற்றை உணர்த்துவதாய் இந்தச் சினிமா எடுக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும் புதிய முகங்கள் நடித்திருக்கின்றன. கூடுதலாக இளையோர்.

திரைக்கதையும் வசனங்களும் ஒளிப்பதிவும் கவனிக்கும் படியாக இருக்கின்றன.

நடிப்பிலும் கூடுதல் நேர்த்தியைக் காணலாம். முடிந்தவரையில் 'யதார்த்தச் சினிமா' என்ற அடையாளத்தை நோக்கி நகர்ந்திருக்கிறார்கள். பிரகாஸ்ராஜ் இதில் கூடுலாக ஒளிர்கிறார்.

தமிழ்ச்சினிமாவை விமர்சிக்கிற கதை. சினிமாத்துறையில் புதிதாக ஈடுபட கிராமங்களிலிருந்து சென்னைக்கு வந்திருக்கும் நான்கு நண்பர்கள் சினிமாவுக்குள் நுழைவதற்கு முன்படுகின்றபாடுகள். வாழுகின்ற வாழ்க்கை, அவர்களின் கனவு மற்றும் யதார்த்தத்தின் கொடுமைகளை கதையில் பாதியாக அமைத்திருக்கிறார்கள். எழுபதுகளின் இறுதியில் வெளிவந்த 'பாலைவனச் சோலை' நால்வர் நினைவுக்கு வருகிறார்கள். அதிலும் ஒரு பெண்( சுஹாசினி) இதிலும் ஒரு பெண் ( நவ்யா நாயர்) அதில் இரக்கத்தைக் கோருகிறார் அவர். இதில் அறிவோடு இயங்கும் புதிய தலைமுறை வாழ்வோடு இணைய முற்படுகிறார் இவர். இரண்டு படங்களும் அடிப்படையில் வேறுவேறானவை. சாயலில் இணைந்தவையல்ல. ஆனால் கவனத்துக் குரியவை.இன்றைய தமிழ்ச் சினிமாவை கிண்டலடித்து, விமர்சித்து வந்து




கடைசியில் இதுவும் அந்த மந்தத்தனமான முடிவுக்குள்ளேயே சிக்கிவிடுகிறது.

காதல்தான் தமிழ்ச்சினிமாவின் மூலவிதை என்பதே இதிலும் நிரூபிக்கப்படுகிறது. "நீங்களும் உங்களின் சினிமாவும் காதலை விட்டால் உங்களுக்கு சினிமாவே வராது" என்று சொல்கிற பிரதான பாத்திரம், காதலை விட நட்பையே விரும்புகிற, மதிக்கிற பாத்திரம் இறுதியில் காதல் வயப்படுவது எதைக் காட்டுகிறது?

வீட்டின் இறுக்கச்சூழலிருந்தும், அவளுடைய சம்மதமில்லாமல் நிச்சயிக்கப்படுகிற கல்யாணத்திலிருந்தும் விடுபட வெளியேறுகிற பெண் தனக்கான சுதந்திர வெளியை உருவாக்கத்துடிக்கிறார்.

அவளுடைய வெளியேற்றத்துக்கு உதவுகிறவர்கள் எதிர்பாராத விதமாக அவளுடன் நட்பாகிறார்கள்.

எல்லோரும் அறிமுகமில்லாதவர்கள்... ஆனால் ஏதோ வகையிலெல்லாம் நல்லவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களுக்கும் பிரச்சினைகள் இருந்தாலும் பொதுவாக நல்லவர்களாக வாழ்கிறார்கள்.

தந்தை என்ற அடையாளத்தோடு ஆணாதிக்கவாதியாகவும் குடும்பத்தலைவன் என்ற அதிகாரத்தோடும் வருகிற தந்தை தோற்றுப் போவது சரி.

நல்ல மனதோடு, உதவும் பாங்கோடு புரிந்துணர்வோடு, தோழமை யோடு, அறிவுபூர்வமாக உதவுகிற மணமகனாக விருந்தவரை ஏமாற்றலாமா? இங்கே அவர் தோற்கடிக்கப்படுவது, ஏமாற்றப்படுவது வருத்தத்தை தருகிறது.

சினிமாக்கனவோடு வருவோர்- குறிப்பாக இளைஞர்கள் சென்னையில் படுகிற கஷ்டங்கள் பலநூறு காவியங்கள் ஏற்கனவே இப்படிக் கஷ்டப்பட்டு காலத்தை ஒட்டியவர்கள் இன்று வெற்றிக் கொடி கட்டி வசதியாகவும் பிரபலமாகவும் வாழ்கிறார்கள். இப்படி வாழ்வோரின் கடந்த காலப்பேட்டிகள் இந்த வாழ்வின் துயர்கதையை நம்முடன் பேசியிருக்கின்றன இதிலும் அது சொல்லப்படுகிறது.

படத்தில் ஆறுதலளிக்கிற விடயங்கள் பலவுண்டு. அதில் அடிதடிகள் இல்லாமலிருப்பதும் ஆட்டங்கள் கிளுகிளுக்காட்சிகள் இல்லாதிருப்பதும் கூடுதலான விசயங்கள்.

மனதில் பதிகின்றன காட்சிகளும் அந்த முகங்களும். படம்பற்றி இன்னும் சொல்லலாம். அதைவிட அதனைப்பார்ப்பது மேல்.

**ஆரதி**

# கோடையின் சாட்டையாய் எத்தனை காட்சிகள்

எறிக்கிறது வெயில். அனலடிக்கிறது முகத்தில். தகிக்கிறது உடம்பு. வெக்கை அகோர வெக்கை. தாகம் பெருந்தாகம். கோடை; கடுங்கோடை.

சூரியனைக்கண்டு அஞ்சுகிறேன். பகலைக் காணப்பயமாயிருக்கிறது. நாவரள்கிறது. மரங்கள் வாடுகின்றன. குளங்கள் வற்றுகின்றன. வயலில் புழுதி பறக்கிறது. கிணறுகளில் பாதிவாளியில் தண்ணீர் வந்தாலே போதும் என்ற நிலை. ஆறுகள் காய்ந்துவிட்டன. வாய்க்கால்களில் நீரோடிய சுவடுகளேயில்லை.

வாட்டம்; பெரும்வாட்டம்.

வெளியே வீதியில் இறங்கவே பயமாயுள்ளது. நடுவெயிலில், தலைவெடித்து இரத்தம் பெருகுவதாக கனவுகள் வருகின்றன. வீதியில் மத்தியானங்களில் போகையில் இந்தக் கனவுகள் நினைவுகளில் முட்டுகின்றன.

கொதிக்கும் வெயில்; அடிக்கும் புழுதி, எரியும் உடம்பு. ஒவ்வொரு நாளும் இப்படித்தானிருக்கிறது. இந்தக்கோடையில் ஒவ்வொரு நாளும் தீக்குளிப்பு.

நிழலுக்கொதுங்க வீதியோரங்களில் மரங்களுமில்லை. பள்ளிப்பிள்ளைகள் பாவம். வழிப்போக்கர்கள் பாவம். சைக்கிளோடிகள் பாவம்.

கோடை வெய்கிறது. எங்களுடைய அறியாமைகளின் முன்னே கோடை வெய்கிறது. எங்கள் அறியாமைகளோடு வீழ்ந்து கிடக்கிறோம் நாங்கள்.

*02) ஒரு காட்சி*

ஒரு லீற்றர் பாலின் விலை பன்னிரண்டு ரூபாய் ஒரு லீற்றர் தண்ணீரின் விலை முப்பது ரூபாய்.

பத்து வருடங்களுக்கு முன் யாராவது நினைத்திருந்தீர்களா இவ்வளவு காசு கொடுத்து தண்ணீரை இவ்வளவு கெதியாக வாங்குவோம். என்று.

*03) ஒரு காட்சி*

கொடும்பாவிகள் எரிக்கப்படுகின்றன. குளிர்த்திகள் செய்யப்படுகின்றன. மழையில்லா மேகம் காற்றோடு போகிறது. காற்றோ வெப்பக்காற்று. பகலில் எரிக்கும் சூரியனோடும் இரவில் சிமிட்டும் வெள்ளிகளோடும் ஏமாற்றும் வானம்.

*04)ஒரு கதை*

இலைகளில்லா மரங்கள் தான் இனி எல்லா இடங்களிலும் அதிகமாய் வளரும் என்கிறார் ஒரு நண்பன். வரட்சி வலயத் தாவரங்களின் காலம் தான் இனியாம். "காடுகள் பச்சையாய் இருந்தன. ஒரு காலத்தில்" என்று சொல்லும் வாழ்க்கை அருகில் வருகிறது என்கிறார் மேலுமவர்.

*05.*

இனிவரும் போர்கள் பெரும்பாலும் நீருக்கான போர்களாகவே இருக்கும் என்று சொல்லிவருகிறார்கள் சமூகவியலாளர்களும் அவதானிகளும். உலகின் பெரும்பாலான இடங்களில் நீர்ப்பங்கீடு பற்றியே பிரச்சினைகள் அதிகமிருக்கின்றன.

ஆறுகளைப்பகிர்வதிலுள்ள அக்கறையில் பாதியளவுகூட இல்லை பாலைவனங்களை பகிர்வதில்.

கடந்த சிறு போகச் செய்கையை விடவும் இம்முறையின் சிறு போகச்செய்கை மிகவும் குறைந்துள்ளது. நீர்ப்பற்றாக்குறையே காரணம். விதைக்கப்பட்ட வயல்களிலும் பயிர்கள் வாடுகின்றன. அதைவிட வாடுகின்றன விவசாயிகளின் முகங்கள். இன்று அவர்களின் முகங்கள். நாளை?

*06*

1930களில் வன்னிப் பகுதியில் இருந்த காட்டில் மூன்றில் ஒரு பகுதிக்கும் மேல் இதுவரை



யான எழுபத்திநான்கு வருடத்தில் அழிக்கப்பட்டிருக்கின்றது.

குளங்களை அமைப்பதற்கும்(நீர்த்தேக்கத்திற்கும்) குளங்களையண்டிய பயிர்ச்செய்கை (நீர்ப்பாசனம்) க்கும் குடியிருப்புகளுக்குமாகவே இவ்வளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

ஆறுதலழிக்கும் விடயம் இதில் என்னவென்றால் காடழிப்பைத்தடுப்பதில் தீவிரமாகியுள்ள வனவள பாதுகாப்புப்பிரிவின் செயற்பாடுகள் நன்றாக இருப்பதுதான். காடு பேணுதலும் புதிய காட்டுருவாக்கமும் மரநடுகையும் இதில் முக்கியமானவை. வனவளப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாட்டுக்கு பாராட்டுகள். அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் உதவியும் தேவை.

மழைவீழ்ச்சியும் படிப்படியாகக் குறைந்தே வருகிறது. பதிலாக எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது. கடும்வரட்சி.

**வெளிவாசல்பாலன்**

*07*

இப்பொழுது எங்களின் வேலிகளில் பூவரசு நிற்பதில்லை. கிளுவை கிடையாது. பல இடங்களிலும் மதில்கள் வந்துவிட்டன. சில இடங்களில் தகரங்கள் கண்ணைக்கூசுமளவுக்குள்ளன. மரங்களில்லாத வேலிகளில் பறவைகளுமில்லை. அவற்றின் பாட்டொலியுமில்லை. அணிலும் புளுனியுமில்லை. அனலடிக்கிறது. தகிப்பாய்.. பதிலாய்....

முந்தியெல்லாம் வேலியோரங்களில் நிழலுக்கொதுங்கி நின்று, ஆறிப்போவோம். இப்போதப்படி ஆறிப்போக முடியுமா?

வீடுகளில் கூட நிழல் மரங்களையோ பழமரங்களையோ நடுவதற்குப்பதிலாக பூமரங்களையே அதிகம் நடப்பழகிவிட்டார்கள். பூமரங்களை விற்போர்தான் தெற்கிலிருந்தும் கூடுதலாக வருகிறார்கள். இங்கே வருகிற பூமரவாகனங்களைச் சுற்றிக் கூட்டம் கூடுதலாக நிற்பதும் இந்தக் கவர்ச்சிக்காகத்தான்.

தினமும் ஆர்வத்தோடு நீர்வார்ப்பதும் இந்தப்பூமரங்களுக்குத்தான்.

பூங்கன்றுகளுக்கு வார்க்கின்ற நீரில் பாதியளவை வீட்டில் வேறு பழமரத்தையோ நிழல் மரத்தையோ வைத்து நீர் ஊற்றினால் எவ்வளவு பலனிருக்கும். அதற்காக பூங்கன்றுகளை வாங்காதீர். அவைக்கு நீரூற்றாதீர் என்று சொல்லவில்லை. மற்றவற்றையும் சேர்த்து வளர்த்தால் எத்தனை குளிர்மையாக இருக்கும் எங்கள் சூழல்.

இடம்பெயர்ந்து போயிருந்த இடங்களில் பலரும் புதிய காணிகளை வெட்டித்திருத்தியிருந்தார்கள். அங்கிருக்கும் போது அவற்றில் சில பழமரங்களையோ நிழல் மரங்களையோ வைத்திருந்தால் இப்போதவை வளர்ந்திருக்கும். சில பயன்தரவும் கூடும். ஆனால் அப்படியாரும் செய்ததாக இல்லை. ஒன்றிரண்டு அபூர்வமான விலங்குகளிருக்கலாம்.

இப்போது மீள்குடியேறிகளாக எல்லோரும் அகதியிடங்களைவிட்டு வந்தாயிற்று. அங்கே பரிதாபமாக மிஞ்சியிருப்பவை சில பூமரங்கள் மட்டுந்தான் அதிலும் தினமும் நீர்ப்பசியோடிருக்கும் குறோட்டன்களும் றோஜாக்களும் எப்பவோ செத்துவிட்டன. செவ்வரத்தையும் நித்திய கல்யாணியும் மல்லிகையும் பொன்னாச்சியும் தேமாவும் தான் மிஞ்சி நின்று பல்லிளிக்கின்றன.

காடுகளிலும் காட்டோரங்களிலும் குளக்கரை ஆற்றோரம் என்று பல இடங்களிலும் நெருக்கடி நாட்களில் இருந்திருக்கிறோம். அப்படி இருந்த நாட்களில் மா,பலா,தென்னை, பனை, ஈரப்பலா, கமுகு,நெல்லி என்று மரங்களை நட்டிருக்கவேணும். இன்னொரு நெருக்கடிக்காலமோ அகதிக்காலமோ வந்தாற்கூட அந்த மரங்கள் எங்களை யோசித்திருக்கும்.

*08*

நாங்கள் மனிதர். எப்படியாவது தாகம் தீர்ப்போம். எங்கிருந்தாவது தண்ணீர் எடுப்போம். குளிர்பானங்கள் ஆயிரம் வகையுண்டு அதிலொன்றைப்பருகுவோம். எங்கே போனாலும் ஏதோ வொன்றைக்குடிக்கக்கொண்டு போவோம். அல்லது வாங்குவோம்.

(20 ஆம் பக்கம் பார்க்க....)



# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய

## தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 27-08-2004



# தேவியின்திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்



அகில உலகமும் வியக்கும்படி இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் பெரு வளர்ச்சியை அடைந்துள்ளது. இவ் வாலயத்தின் தேர்த்திருவிழா நடைபெறும் இன்றைய தினத்திலே எமது மக்களை வாழ்த்தி சைவத்தைப் போற்றி பண்பாடுகளை மதித்து அமைதியையும் சமாதானத்தையும் விரும்பி தேவியின் திருவருளைப் "பிரார்த்திக்கின்றேன்."மக்கள் பணியே மகேசன் பணி" என்று செயலிலே காட்டிவரும் இவ் வாலயத்தில் அன்னசத் திரம், மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், அறநெறிப்பாடசாலை, யாத்திரிகர் விடுதி, ஆய்வு நூலகம் என்று பல்வேறுபட்ட பணி கள் இடம்பெற்றுள்ளன.

மகோற்சவ காலங்களில் ஆயிரக் கணக்கான அடியவர்களுக்கு சாதி சமய வேறுபாடுகளின்றி அன்னதானம் வழங்கப் படுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களால் உருவாக்கப்பட்ட தேர் இன்றும் புதுமை மங்காது காட்சியளிக்கிறது. இன்று காலை பக்தர்கள் கூட்டத்தின் மத்தியிலே ஆடியாடி எழுந்தருளிவந்து அம்பாள் தேரிலே ஆரோகணிப்பாள். ஆண்டுக்கு ஒரு முறை இந்த அற்புத மான காட்சியைக் காண்பதற்கு இந்த மண்ணின் நாலா பக்கங்களிலும் இருந்து பக்தர்கள் ஒன்று கூடுவார்கள். அம்மா சரணம், தாயே சரணம், என்று அழுது அழுது அம்பாளிடத்தில் தங்களை ஒப்புவிப்பார்கள். இந்த அற்புத காட் சியை அயல்நாட்டு அன்பர்கள் இலங்கை வானொலி மூலமும், செய்தித்தாள்கள் மூலமும் அறிந்து போற்றுவர். நாமனை வரும் இதே வழியில் துர்க்காதேவியைப் போற்றித்துதித்து அமைதியும் ஆனந்தமும் அடைவோமாக.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்-தெல்லிப்பழை



சிறப்பிதழாக்கம் காரையூரான்

**தெல்லிப்பழை துர்க்காதேவி அருள்பெற்று அனைவரும் இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றோம்.**


நியூ கார்த்திகா நகைமாடம்
அழகுக்கு அழகுசேர்க்கும் அழகிய தங்கநகைகளை பெற்றுக்கொள்ள
நியூ கார்த்திகா நகைமாடம்
இல:06, மகாராஜா கட்டடம், சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.
தொலைபேசி: 0777-290816 (சி-9995)

பரணிகா மல்ரி சென்ரர்
பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், வாழ்த்துமடல்கள், போட்டோபிரதிகள், அடையாளஅட்டை கவரிடுதல் ஆகிய சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
பரணிகா மல்ரி சென்ரர்
கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (சி-9996)

மருந்து வகைகள், பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள், கேக்தயாரிப்பதற்கான பொருட்கள் கோடியல் வகைகள் விற்பனையாளர்
மாதங்கி பாமசி & குறோசரி
கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (சி-9998)

சகல விதமான பிறின்டிங் வேலைகள் பழைய புதிய ஓடியோ வீடியோ சீ. டி. றைற்றிங் வீடியோகசற்றினை சீ. டியாகமாற்றுதல் மற்றும் போட்டோ டிசைனிங் வேலைகள் கையடக்கதொலைபேசி லொக்குடைத்தல் ஆகியவற்றிற்கு நாடுங்கள்
K.S.பிரின்டேர்ஸ்
கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (சி-9997)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை (சி-9992)

சயன் உணவகம்
மல்லாகம்சந்தி, மல்லாகம்.
உரிமையாளர்:வை.ரவி (சி-9993)

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
ஸ்ரீகரம் நகை மாளிகை
கே.கே.எஸ். வீதி, இணை நிறுவனம் சுன்னாகம்.
யாழரசன் நகைப்பூங்கா
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். (சி-9994)

சகல மங்கள வைபவங்களையும் சிறந்த முறையில் படம் பிடித்திட
சோதி ஸ்ரூடியோ
மல்லாகம் சந்தி, மல்லாகம்.
கிளை - ஏழாலை.
077-6592346 (சி-9987)

இலங்கையில் எப்பாகத்திற்கும் சென்று வர எமது போக்குவரத்துசேவையினை நாடுங்கள்
டனுஜன் போக்குவரத்து சேவை
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
T.P-0712-347548 (சி-9988)

தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் செய்து பெற்றிட
புதிய சோதி நகைத்தொழிலகம்
உரிமை : அமரர். இ. தங்கவேல்
இல. 64, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (சி-9989)

சிவராம் நகையகம்
அசல் 22 கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள சிறந்த நகையகம்
சிவராம் நகையகம்
காங்கேசன்துறை வீதி, மல்லாகம். சி-9990

கட்டடங்களுக்கான ஊசிக்கால் வகைகள், லான்மாஸ்ரர் பெட்டிகள், மரம்அரியும் பாட்டுவாள். றோதைவாள் விற்பனையாளர்கள்.
சிறி இரும்புத் தொழிலகம்
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
T.P-0712-347548 (சி-9991)

bajaj Pulsar DTS-i DEFINITELY MALE
ரஜீவன் வைன்டிங் அன் மோட்டோர்ஸ்
மோட்டார்சைக்கிள், வாட்டர்பம், எலற்றிக் மோட்டர், கிறைன்டர், பான் ஆகியவற்றையும் அவற்றின் உதிரிப்பாகங்களும் விற்பனையாளர்கள்.
பஜாஜ் மோட்டார் சைக்கிள்களுக்கு
சுன்னாகத்துக்கான அதிகாரம் பெற்ற முகவர்.
ரஜீவன் வைன்டிங் அன் மோட்டோர்ஸ்
இல. 66,68 கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
தொலைபேசி: 0777-727784
வைன்டிங் வேலைகளும் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
சி-9986

# எமது சமூகத்தின் கணைகள் வாள்களை விட கூர்மையானது

**நாடகநெறியாளர் றெஜினா**

***'விடிவை நோக்கி' 'வேலி' போன்ற நாடகங்களை நெறிப்படுத்திய நெறியாளர் றெஜினா அவர்கள் ஒரு நாடக நெறியாளர் மட்டுமல்ல, சிறுகதை எழுத்தாளர்; அத்தோடு அவர் ஒரு ஆசிரியர்.***

***கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் இவர் பருத்தித்துறை ஓடக்கரையைச் சொந்த இடமாகக் கொண்டவர்.***

***நாடகம் நாட்டியநாடகம், நடனம், வில்லிசை என பரிமானங்களில் இயங்கிவரும் ஆசிரியர் றெஜினா அவர்களுடன் நாம் நேர்காணலை மேற்கொண்டபோது.***

***இராணுவ அடக்குமுறைகளின் விளைவு முதல் எமது விமர்சனங்களின் போக்குகள் வரை தொட்ட அவர் தன் உணர்வலைகளைக் கொட்டினார்.***

***அவருடனான நேர்காணல் எமது வாசகர்களுக்கு இந்த வாரம் பிரசுரிக்கப்படுகிறது.***





**நேர்கண்டவர்: கருணைரவி**

எனது பேரனாரை நான் ஐயா என்றுதான் சொல்வேன். அவர் ஒரு நாடகக் கலைஞர். எனது ஊரும் ஒருகலைக் கிராமம். எனது கிராமத்தை விட்டு வேறு கிராமங்களில் கலை நிகழ்வுகள் நடந்தால் ஐயாவின் நாடகங்களைப் பிடிப்பார்கள். ஐயா முன்பு பிரிட்டிஸ் அரசின் பட்டாளத்தில் இருந்தார். அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்பு தான் ஐயா நாடங்களில் நடிக்கத் தொடங்கினார்.

'சத்தியவான் சாவித்திரி', 'அரிச்சந்திரா', 'அரிச்சந்திரா மயான காண்டம்', ' நல்லதங்காள்', "வள்ளி திருமணம்" போன்ற நாடகங்களில் நடிந்தார். கூடுதலாக ஐயாவின் பாத்திரங்கள் "பபூன்" 'பாத்திரங்களாகத் தானிருக்கும். "சார்ளிசப்ளின்" எப்படி இருந்தாரோ- அதேபோலத்தான் ஐயாவும் என்று இப்பவும் ஊரில் சொல்லுவார்கள்.

ஆயிரத்தித் தொளாயிரத்தி எழுபத்தெட்டுகாலப் பகுதியாகத்தானிருக்கவேணும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐயாவுக்கு "விகடவேள்" என்ற பட்டத்தை வழங்கிக்கௌரவித்தது. V.P வைரமுத்துவோடுதான் ஐயா கூடுதலாக நடித்திருந்தார். எனது சிறுபராயத்தில் ஐயாவின் அநேகமான நாடகங்களை நான் பார்த்திருக்கின்றேன். அந்தவேளைகளில் ஐயாவைப் போல நானும் நடிக்கவேணும் போலிருந்தது.

எனது தந்தைக்கும் கும்மி, கோலாட்டம், கரகம் எல்லாம் தெரியும் கூத்துக்களும் ஆடுவார். கிறிஸ்தவ நாடகங்களும் செய்திருக்கின்றார். நான் முறைப்படி நடனம் கற்கவில்லை தந்தையார் பழக்குவதைப்பார்த்தே ஓரளவு செய்வேன். படிக்கிறகாலத்தில் நிறைய நாடகங்களில் நடித்திருக்கிறன். யாழ்/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் 'ஏகலைவன்' மற்றும் 'சிறுவர்' நாடகங்களில் நடித்திருக்கிறேன். பின் உயர்தரம் படித்து ஆசிரியர் தொழில் கிடைக்கும் வரைக்கும் எந்த நாடகங்களிலும் நடிக்கவில்லை.1989ஆம் ஆண்டுதான் முதல் முதலில்வதிரியில் நடத்த மாவீர்தின நிகழ்வு மேடையில் பாட சாலை மாணவர்களை வைத்து, கவிதையும் வில்லுப்பாட்டும் செய்தேன்.

***பெண்கள் நாடகங்களில் நடிப்பதென்பது 'இழுக்கு' என கருதும் எமது சமூக அரங்கிலிருந்து, நீங்கள் முதல் முதல் ஆற்றுகைக்கு முகம்வெளிக் காட்டுகையில். ஏதாவது எதிர் வினைகள் பற்றி...?***

அம்மாடி...எமது சமூகத்தின் கணைகள் வாள்களைவிடக் கூரியன. அது கொடும் விசம் - முதல் முதல் இறங்குகையில் பயமாகத்தானிருந்தது. ஒரு ஆடவனுடன் ஒரு நாள் கதைத்தால் பேசாமல் போவார்கள். மறுநாள் கதைத்தால் பார்ப்பார்கள். மூன்றாம் நாள் கதைத்தால் கதை போச்சு.

எனக்கு அப்படியேதும் நிகழவில்லை. நான் முதல் முதல் விடுதலைப்புலிகளின் 'கலை, கலா சாரக் குழு''விலிருந்துதான் ஆற்றுகைகளைச்செய்தேன். அவர்களுடன் ஒரு நாளல்ல பலநாட்கள் சந்தி களில் நின்று கதைத்தாலும் எவரும் சந்தேகக் கண்களோடுபார்க்கமாட்டார்கள், அவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடுகளின் நம்பிக்கைகளில் தான் பெற்றோர்கள் என்னை அனுமதித்தார்கள். அவர்களின் கவசங்கள் தான் இத்துறையில் என்னை அதிகம் ஈடுபட வைத்தது.

***போராட்ட தளங்களில் இருந்து வந்த பெண்படைப்பாளிகளில் பலர் தங்கள் படைப்பிலக்கியங்களிலோ, நாடக ஆற்றுகைகளிலோ பெண் நிலைவாதக் கருத்துக்களை முன் வைப்பது குறைவு. வெறும் இராணுவ அடக்கு முறைகளையே கருப்பொருளாக்குவார்கள்- நீங்களும் 1993ஆம் ஆண்டு "விடிவை நோக்கி" எனும் நாடகத்தை ஆற்றுகைப் படுத்தியுள்ளீர்கள் அது பற்றி...?***

எந்த நாட்டிலும் ஒரு இராணுவ அராஜகம் நடக்குதென்றால் முதலில் பெண்கள்தான் மன ரீதியாகவோ, உடல்ரீதியாகவோ பாதிப்புக்குள்ளாவார்கள். "விடிவை நோக்கி"யின் பாடுபொருளே வடமராட்சியின் 'லிபறேசன் ஒப்றேசன்" நடவடிக்கை. இதில் கூடபெண்கள் பட்ட துன்பியலைத்தான் காட்சிப் படுத்தியுள்ளேன். அந்த நாடகத்தில் உத்தியாகக் காட்டப்படும் சில குறியீடுகள் கூட பெண்ணியல் சார்ந்த விடயங்கள் தான்.

***'விடிவை நோக்கி' ஆற்றுகைகள் ஒவ்வொன்றிலும் நீங்கள் பங்கெடுத்தீர்கள். அந்த அனுபவங்கள் பற்றி....***

ஒரு மாதம் மட்டும் தான் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. இடைவிடாது ஒவ்வொரு நாளுமாய் 125 மேடைகள் ஏறின. அந்த ஒரு மாதத்துக்குள் மொத்தம் 83 பேர் போராளிகளாய் இணைந்துகொண்டார்கள். அந்த நாடகத்தில் அனைத்துக் கலைஞர்களும் பெண்கள் என்றபடியால், ஒவ்வொரு இரவுகளும் நாடகம் என்று பெற்றோர்கள் ஆரம்பத்தில் பிள்ளைகளைவிட பின்னடித்தார்கள். அப்ப மேஜர் 'பகலவன்' தான் வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகம் செய்தார். அவர் ஒவ்வொரு நாளும் இணைந்த போராளிகள் தொகைகளை கூறும்போது பெற்றோர்கள் உற்சாகமடைந்து, சில பெற்றோர்கள் தாங்களும் பிள்ளைகளுடன் சேர்ந்து வந்தார்கள். எனக்கு அதன் பிறகுதான் தெரிந்தது நாடகங்கள் எவ்வளவு வலிமையுள்ளதென்று-சில வயது குறைந்தவர்களே வந்து எங்கள் வாகனங்களில் ஏறுவார்கள். தாங்களும் போராட வருகிறோம் என்று வயதை பார்த்து ஏத்தமாட்டோம். வயது வந்தவர்களில், அவரின் விபரம் அறிந்ததும், பகலவன் அவர்களை அனுமதிக்கமாட்டார். அவர்கள் வீட்டுக்குப் போகமாட்டோம் என்று சீற்றுகளிலிருந்து இறங்காது எத்தனையோ பேர் அழுதநிகழ்வுகள் கூடி, இப்பவும் கண்களில் வருகின்றன.

***உங்கள் "வேலி" என்ற நாடகம் குறியீட்டுத்தன்மை கொண்டது. சாதாரணமக்கள் மத்தியில் இப் பூடகத்தன்மையான கருத்துக்கள் தொற்றிக் கொள்ளுமென நீங்கள் கருதுகிறீர்களா?***

உண்மையில் விடுவிக்கப் படாத பிரதேசங்களில் தான் பூடகமாக சில கருத்துக்களை முன் வைக்கமுடியும். எமதுவிடுவிக்கப் பட்ட பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் 'பசித்த பிள்ளைக்குச் சோறு' என்ற மாதிரி உடனுக்குடன் செய்திகளைக் கொடுக்கவேணும். அந்தச்செய்தி தங்குதடையின்றி அவர்களிடம் போய்ச்சேரவேணும்.

இருந்தும் பூடகமாக,படிமங்களால் நான் ஏன் வேலி எனும் நாடகத்தை ஆற்றுகைப்படுத்தினேன் என்றால், மக்களின் சிந்தனைப் பரப்பைவிரிவு படுத்தவேணும். ரசனைகளில் மாற்றங்களை உண்டு பண்ணவேணும். கண்ணீர் வடிக்கவைத்தால் அதுதான் உச்சம் என பழக்கப்பட்ட சனங்களின் ரசனைகளில், சிந்தனைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் தான் "தரம்"- "தரமற்றது" எது என்ற நிலையில் படைப்புக்களை வகைப் படுத்துவார்கள். அப்படி ஒரு நிலைக்கு சனங்களின் ரசனைகளில் ஒரு மாறுதலைக் கொண்டு வந்தால் தான் "புதியதோர் வீடு" "மண்சுமந்த மேனியர்" போல ஒரு வளர்ச்சிப் படிகளுக்கு நாம் வரலாம்.

***அப்படியென்றால், எமது ஆற்றுகைகள் எல்லாம் ஊனங்களா?***

ஐயையோ... நான் அப்படிச் சொல்லவில்லை. வன்னியைப் பொறுத்தமட்டில் ஓரிரு நாடகங்கள் மெச்சத்தக்களவுக்கு செய்திருக்கிறார்கள். பெரும்பாலான நாடகங்கள் துயர் ததும்பிகளாகவே இருக்கின்றன. சனங் களின் கண்களில் கண்ணீர் வந்தால் காணும் என நினைப்பது போலும்.

***வன்னியில் உங்கள் ஆற்றுகைகளைக்காணவிலையே?***

நான் வன்னிக்கு வந்ததும் பெரும் துயர்க் கடல்தான் எனக்கு முன்னால் விரிந்து கிடந்தது. நான் ஒரு ஆசிரியை என்ற ரீதியில் ஆற்றுகைகளால் பெறும் அடைதலை விட, மரத்துக்குக் கீழேயும், புழுதிகளில் புரளும் சிறுவர்களுக்கும் கற்றலை வழங்குவதே ஆத்மதிருப்தியாக இருந்தது. அந்த வகையில் முள்ளியவளை 'பொன் நகர்' கிராமத்தில் வறிய மாணவர்களுக்கு இலவசமாகப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தேன்.

***எமது விமர்சனத் தளங்கள் பற்றி?***

உண்மையிலும் ஒரு நடுநிலை விமர்சனம்தான் ஒரு மனிதனையோ- ஒரு குழுவையோ- சமூகத்தையோ- அல்லது அளிக்கைகளையோ ஆரோக்கியப் பாதைகளுக்கு இட்டுச் செல்கின்றன. இங்கே சில ஆற்றுகைகளையும் அதன் விமர்சகர்களையும் பார்த்திருக்கின்றேன். பெரும்பாலான விமர்சகர்கள் அதன் கதைகள் சொல்லிகளாகவே இருக்கிறார்கள். 'உச்சம்' என்று சொல்லும் நிலை அநேகரின் பண்புகளாகவும் போய்விட்டது- நிறைகளைத்தான் அடுக்குவார்கள். குறைகளைக் குறித்தும் காட்டமாட்டார்கள். இப்படியே விமர்சனத் தளம் இயங்கும் போது எப்படி எமது 'அளிக்கைகள்' வளரும்?

***நீங்கள் சில சிறுகதைகள் எழுதியுள்ளீர்கள். ஈழத்துக் கவிதைகளின் வளர்ச்சியை சிறுகதைகள் எட்டவில்லை என்று சொல்லப்படுகிறதே....***

நான் இரண்டு சிறுகதைகள் மட்டும் தான் எழுதியிருக்கிறேன். இரண்டும் புலிகளின் குரலில் தான் ஒலிபரப்பாகியது. என்னால் சிறுகதைகள் பற்றி பெரிதாய் சொல்ல முடியாது.

***நீங்கள் "கோலாட்டம்" "கும்மி""கரகம்" "காவடி," "வில்லிசை, தாளலயம்"என பல குழும நிகழ்வுகளை, நிகழ்த்தி அரங்குகளில் பல பரிசில்களையும் பெற்றுள்ளீர்கள். தமிழீழஎழுச்சிப் பாடல்களுக்கும் அபிநயம் செய்துள்ளீர்கள். செய்கிறீர்கள். அந்த அபிநயங்கள் இன்றைய ரசனைகளிலிருந்து அன்னியப் படுகிறதே?***

ரசனை நிலையில்லாதது. ரசனை காலத்துக்குக் காலம் மாறும் பரதத்துக்குச் சில அடையாளங்கள் இருக்கின்றன. அது எப்பவும் மனதை தொற்றியபடியே இருக்கும். நான் இப்போதும் சில பாடசாலை மட்ட நிகழ்ச்சிகளுக்கும், ஊர் நிகழ்வுகளுக்கும் சில அமைப்புகளுக்கும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கிறனான். ரசனை என்று சொல்லிக்கொண்டு, அரைகுறை ஆடைகளோடு சினிமா ஆட்டங்களை அப்படியே ஆடை கட்டிக்கொண்டு ஆடுவது கூட எங்கள் அடையாளங்களிலிருந்து நாங்கள் அன்னியப்படும் ஒரு நிலையை தோற்றவைக்கும் என்றே நான் கருதுகிறேன். இங்கே நடப்பது எங்களின் அடையாளங்களுக்கான போர்- நாங்கள் நிறம் மாறக்கூடாது.

***நீங்கள் ஒரு ஆசிரியர் என்ற வகையில் இன்றைய கல்வி முறைகள் பற்றி?***

இந்தப் புதியகல்விச் சீர் திருத்த முறையானது. எங்கள் வாழ்வோடு அன்னியப்பட்டது. வெறும் இடிந்த கட்டடங்களுக்குள்ளும், கூரைகளற்ற இடங்களிலும். மரநிழல் புழுதிகளிலும் மேசை, கதிரைகள் இன்னும் எத்தனையோ பாடசாலைகளில் இல்லாது இருக்கின்றன.

இந்த நிலையில் உயர்ந்த மலைகளையும், அகன்ற நீர்வீழ்ச்சிகளையும், பூங்காக்களையும், உயர்ந்த கட்டடங்களையும், கணனிகள் பற்றியும் தான் புத்தகங்களில் -இன்று உலகம் சுருங்கிவிட்டது. பல நவீன முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இப்புதிய கல்விச்சீர் திருத்தத்தில் பல உத்திகள் புகுத்தப்பட்டாலும் எமது பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் அந்த நோக்கம் நிறைவேற்றப்படாதநிலைதான் உள்ளது.



# பொருண்மிய வாசல்

எமது சூழலை அச்சுறுத்தும் ஒரு முக்கியமான எதிரியாக உள்ள பார்த்தீனியம் தொடர்பாக பல தடவைகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எங்கள் பிரதேசங்களில் பல இடங்களில் பார்த்தீனியம் செடி நீக்கமற நிறைந்துள்ளது என்பதை எல்லாம் விட அது பல்வேறு பிர தேசங்களுக்கும் பரவிக் கொண்டு உள்ளது என்பது பாரதூரமான விடயமாகும்.

காலத்துக்குக் காலம் பல்வேறு

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் பார்த்தீனியம் செடிவ்யை அழிப்பதை தமது செயற்பாடுகளில் ஒன்றாக மேற் கொண்டு வந்தன. தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனம் இவர்களுக்கு உறுதுணையாக செயற்பட்டு வந்தது. வருகின்றது. வரும்.

எனினும் பார்த்தீனியம் எமது பிரதேசத்தை விட்டு முழுமையாக அகலவில்லை. உடனடியாக முழுமையாக அகலும் என எதிர்பார்க்க முடியாவிடினும் எங்கள் முயற்சிகள் சோர்ந்து போக முடியாது.

நாங்கள் காலாதிகாலமாக சிங்களத்தின் பல்வேறு அரசுகளின் ஆக்கிரமிப்புக்களும், பொருண்மியத்தடைகளுக்கும் இடையே வாழப் பழகியவர்கள். அந்த அனுபவங்கள் எங்களுக்கு எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய மனோபலத்தினை தந்துள்ளது.

இதனை எல்லோரும் உணர்ந்துகொள்வார்கள். உணர்ந்து கொள்ள வேண்டும். இதன் அடிப்படையிலேயே பார்த்தீனியம் செடி அழிப்பு நட வடிக்கையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் காணப்படும் பார்த்தீனியங்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

சங்கானை மண்டிலிகக் குளத்துக்கு அருகிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகிலும் காணப்படும் பார்த்தீனியம் களையை நிரந்தரமாக அழித்தொழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதிக் கிராம அலுவலர்கள் இணைந்து பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் இணைந்து நடவடிக்கை எடுக்க உள்ளார்கள்.

இவ்வாறான முயற்சிகளை பார்த்தீனியம் களை உள்ள பிரதேசங் கள் தொடர வேண்டும்.

(சி-10044)

# குப்பை கூளங்களில் போசணைப் பெறுமானமுள்ள பசளை தயாரித்தல்

கால் நடைகளை வளர்க் கும் விவசாயிகள் அவைகளை பட்டி அடைத்து எரு சேர்த்து விற்பனை செய்து இலாபம் பெறுகின்றனர். இதே போல் வீடுகளில் சேரும் கழிவு குப்பை கூளங்களைச் சேகரித்து கூட் டெருவாக்கி அதிக போசணையுள்ள பசளைகளை தயாரித்து விற்பனை செய்யலாம்.

தோட்டச் செய்கையில் ஈடு படும் விவசாயிகளும் தங்கள் பொ ழுது போக்காகவோ அல்லது படித்து வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளோ பாடசாலை மாணவர் களும் கூட இதில் ஈடுபடலாம்.

வீடுகளில் சமையல் அறைக கழிவு தொடங்கி தோட்டக் கழிவு வரையாக குப்பை கூளங்கள் நிறை யச் சேருகின்றன. அவற்றை வீணாக்காது, எரித்து சாம் பலாக்காது, புதைகுழிகளில் பிரயோ சனமற்ற முறையில் புதைக்காது தகுந்த முறையில் கூட்டெரு தயாரி த்தல் மாட்டெருவை விட பல மடங்கு போசணைப் பெறுமானமுள்ள பசளை கிடைக்கிறது.

வீடுகளில் கிடைக்கும் கழி வுப் பொருட்களை தெருவில் கொட் டாது கூட்டெருவாக மாற்றுவதன் மூலம் நோய்கள் தொற்றுதலில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. ஈ, நுளம்பு, கொசு பெருகுதலைத் தடுக் கலாம் இதனால் சுகாதாரம் சுத்தம் பேணப்படுகிறது.

வீதியோரங்கள் ஒழுங் கைகளில் அமைந்திருக்கும் வேலி களில் நாட்டப்பட்ட பூவரசு, கிளி சறியா, வேம்பு போன்ற மரங்களில் உள்ள கழிவுகளான இலை, குழை கள் தேடுவாரற்ற நிலையில் சிதைந்து வீணாக மண்ணோடு மண்ணாக மக்கிப் போகின்றது. இவற்றை வீணாக்காது, பயன்படுத் தலாம் அல்லவா?

சுகாதாரச் சீர்கேடு விளை விக்கக் கூடியவாறு தெருவோரங் களில் சந்தை போன்ற பொது இடங் களில் கிடைக்கும் கழிவுகளை, குப்பைகூளங்களை நகரசபையோ அல்லது பிரதேச சபையோ இந்த முறைகளைக் கையாண்டு வரு மானத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப் பளிக்கக் கூடியதாகும்.

யாழ்.மாவட்டத்தை எடுத் துக் கொண்டால் யாழ் மாநகரசபை எல்லைக்குள் நாளாந்தம் பல நூற்றுக் கணக்கான தொன் நிறையுள்ள குப்பை கூளங்கள் சேகரிக்கப் படுகின்றன. அவை பயன்பாடு இன்றி தீயிடப்பட்டும் புதைத்தும் வருகின்றன.

குப்பைக் கூளங்களைப் பயன்படுத்திக் கூட்டெரு தயாரிப்பதன் மூலம் விவசாயிகள் பயன் பெறுவதுடன் மண்வளமும் பேணப் படுகிறது.மாநகரசபை சுற்றுச் சூழல் மாசு அடையாமல் பாதுகாக்கப் படுகிறது.தொற்று நோய்கள் பரவாது தடுக்கிறது. நுளம்புகள் பல்கிப் பெருகாமல் தடுக்கிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு அதி போசணைப் பதார்த்தங்கள் நிறைந்த பசளை பெறப்படுகிறது. மாநகர சபைக்கு வருமானம் கிடைக்க வழி பிறக்கின்றது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு பிரதேச சபை, மாநகரசபை, நகரசபை, முயற்சி எடுப்பார்களேயானால் நிச்சயம் வெற்றி உண்டு என்பதில் ஐய மில்லை.

யாழ் மாநகரசபை கூட் டெரு தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அதற் கான இடவசதி பெறுவதற்கான ஆலோசனைகள் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாகவும் அறியப் படுகிறது.

எனவே எதிர்காலத்தில் தரமான பயிர் போசணை நிறைந்த கூட்டெருவை பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் சேரும் கழி வுகளைப் பயன்படுத்தி கூட் டெருத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டால் பிரயோகமாக அமையும்.

தனித்தனியாக தங்கள் வீடுகளில் சேரும் குப்பை, கூள ங்களை சேகரித்து கூட்டெரு தயா ரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் அதிக இலாபம் பெறலாம். கூட்டெரு தயாரிப்பதற் கான மூலப் பொருட்கள் எல்லா வீடுகளிலும் இருக்கின்றன. செலவு செய்யத் தேவையில்லை. கால் நடைகளை வளர்ப்போர் மாட் டெருவை விற்று இலாபம் பெறுவது போல் வீட்டில் சேரும் கழிவுகளை வீணாக்காது சேகரித்து கூட் டெரு வாக்கி விற்பனை செய்து கொள்ள லாம்.

எஸ்.கே

---

(17 பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் மனிதர் கோடையை வெல்லும் வல்லமை யுடையோம். AC யுண்டு. காற்றை விசி றப் Fan உண்டு. குளிராய்க் குடிக்கவும் தின்ன வும் குளிரூட்டித் தரும் Frige உண்டு. பழரசமென்றும் மதுரச மென்றும் குடிவகைகள் பலவுண்டு. மோருண்டு, இளநீருண்டு.

"நாங்கள் மனிதர். கோடையை வெல்லும் திறனுடையோம்" என்றோர் கர்வமுடையோம்.

மழையில்லா நாட்கள் நீள்கின்றன. நீரில்லா நிலைகளைச் சுற்றி நாவரளத்தவிக்கின்றன. காட்டு விலங்குகள்.

அவை விலங்குகள். அவையெங்குபோகும் தாகம் தீர்க்க? அவை எதைக்குடிக்கும் விடாய்தீர?

முன்பு ஆடு, மாடு கள் நீர்குடிக்க வீதியோரங்களில் நீர்த்தொட்டிகளிருந்தன. அவற்றில் நீரை நிரப்பும் வழக்கமும் இருந்தது. ஊர்நடுவில் குளங்கள் இருந்தன. வருடம் வருடம் தூர்எடுக்கும் வழக்க மும் இருந்தது. நீரும் நிறைந் திருந்தது.

ஆவுரைஞ்சிக் கல்லு மிருந்தது.

நாங்களும் மனிசராய் இருந்தோம்.

இன்றோ நாங்கள் தாகம் தீர்க்க மட்டும் தாரணமாய், விதவிதமாய் ஏற்பாடுகள் ஆயிரம் செய்துள்ளோம்.

நாங்கள் மனிதர் அல்லவா!

(09)

நீரில்லா குளங்கள், நீரில்லா கிணறுகள், நீரில்லா குடங்கள், நீரில்லா ஊர்கள், நீரில்லா நாட்கள் என்றாகின்றது எங்களைச் சுற்றி.

கோடையை குளிர்விக்க வழி தெரியும் நமக்கு.

வகை செய்ய வேண்டும். அதுவே அவசியம்.

10)

பூநகரியிலும், நெடுந்தீவு மற்றும் தீவகத்திலும் காரைநகரிலும் வடமராட்சியிலும் தான் உடனடியாக நன்னீரை வழங்கக்கூடிய அள வுக்கு நீர்த் தாங்கிகளும் நீர் விநி யோகத் திட்டமும் அவசியம்.

எப்போதும் அந்த மனி தர்கள் நீர் எடுப்பதற்காக குடங்க ளோடும் கொள் கலன்களோடும் அலைகிறார்கள்.

அதிகாரிகளும் திட்டமிடு வோரும் இது பற்றி கவனம் எடுத்த தாக இன்று வரை தெரியவில்லை.

உவர் வெளிகளில் நன்னீர் தேடிகளை எவர் தான் அறிவார்? "யாமறியோம் பராபரமே"

---


## 11ஆம் ஆண்டின் நினைவுப் பூக்கள்

மாணவனாக | மாவீரனாக





குழந்தையாக 1974-07-01 | குவலயத்தில் 1993-08-27

2ஆம் லெப்.
உத்தமன்/மருதவாணன்
(இரத்தினசிங்கம் அறிவழகன்)
ஏழாலை மேற்கு, ஏழாலை.

அளவோடு அளவலாவி
எமை அழவிட்டுச் சென்றவனே
பதினொரு ஆண்டுகளும் – உன்
பசுமையான நினைவுகளுடன்
பாசத்துடன் ஏங்கும்

த. மு:-
இல. 04, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

(4993)

குடும்பத்தினர்.



கிளிநொச்சி அரச அதிபர் பணிமனை
கிளிநொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப்
பேரவையின் அனுசரணையுடன்

கிளிநொச்சி அழகியற் கலாமன்றம் நடாத்தும்

## மாபெரும் ஓவியப் போட்டி-2004

★மாணவர்களுக்கான போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு கல்வி வலயங் களைச் சேர்ந்தவர்கள் பங்குகொள்ளலாம்.

★திறந்த போட்டியில் மாணவர்கள் அல்லாத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோர் பங்குகொள்ளலாம்.

*மாணவர்களுக்கான போட்டிப்பிரிவு*

1 ஆம் பிரிவு - தரம் - 5 தொடக்கம் தரம் - 7 வரை
2 ஆம் பிரிவு - தரம் - 8 தொடக்கம் தரம் - 10 வரை
3 ஆம் பிரிவு - தரம் - 11 தொடக்கம் தரம் -13 வரை

*ஒவ்வொரு போட்டிப் பிரிவுக்கும்*

1 ஆம் இடம் - ரூபா - 2500
2 ஆம் இடம் - ரூபா - 2000
3 ஆம் இடம் - ரூபா - 1500

பணப்பரிசிலும். சான்றிதழும் வழங்கப்படும்.

ஓவியங்கள் மாணவரது ஆக்கமாயின் அதிபர்களும், மாணவர் அல்லாதோருக்கு கிராம சேவையாளரும் உறு திப் படுத்த வேண்டும். ஓவியரின் பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்பட்டு தனியாக இணைக்கப்படல் வேண்டும். வரைதலுக்கான வர்ணக்கலவை (ஊடகம்) எதனையும் பயன்படுத்தலாம்.

அளவு 30செ.மீ x 40 செ.மீ (A4தாள்)

*தலைப்பு*

பிரிவு1 - "விடியும் வேளையில்...."
பிரிவு2 - "மனிதனால் மாறும் சூழல்"
பிரிவு 3- "இடம்பெயர்வும் அவலவாழ்வும்"
திறந்தபோட்டி "இயந்திரமாகும் மனிதவாழ்வு"

தெரிவான சிறந்த ஓவியங்கள் பரிசளிப்பு நிகழ்வின்போது ★காட்சிக்கு வைக்கப்படும்.

ஓவியங்களை 20.09. 04 இற்கு முன்னர் செயலாளர் / அதிபர் அழகியற் கலாமன்றம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அலுவலக நேரத்தில் நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

குறிப்பு:-
மேற்படி நிகழ்வுகளுடன் இணைந்து மாபெரும் ஓவி யக் கண்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளோம். ஓவிய நண் பர்கள் தங்களிடமுள்ள ஓவியங்களை அனுப் பிவைத்து தாங்களும் இக்கண்காட்சியில் இணைந்து கொள்ளுங்கள்.

*செயலாளர், அழகியற்கலாமன்றம் கிளிநொச்சி.*

(சி-9800)



# உலகின் மின்னல் வீரர்

பூகோளத்தின் அதிவேக வீரர் யார்? என்பதை முடிவு செய்யும் ஆண்களுக்கான 100மீ. ஓட்டப்பந்தயம் கடந்த திங்களன்று நடந்தது. உலகின் முன்னணி வீரர்கள் அனைவரும் தகுதிப் போட்டியில் கலந்து கொண்டு தங்கள்திறமையை வெளிக்காட்டினர். கடைசியாக 8 வீரர்கள் இறுதிச் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். கடந்த முறை சிட்னி ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற மவுரிஸ் கிரீனும் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதனால் இந்தப் போட்டியின் எதிர்பார்ப்பு இரட்டிப்பானது. பரபரப்புடன் நடந்த இந்த ஓட்டத்தில் அமெரிக்க வீரர் ஜஸ்டின் கேட்லின் தங்கப்பதக்கம் கைப்பற்றினார். இவர் பந்தய








தூரத்தை 9.85 வினாடிகளில் கடந்தார். 22 வயதான கேட்லின் தகுதிகாண் போட்டியின்போது மோசமாக ஓடினார். இருந்த போதும் இறுதிப் போட்டியில் யாரும் எதிர்பாராத வகையில்வெற்றியை தக்க வைத்துக்கொண்டார். நடப்பு சம்பியன் கிரீன் வெண்கலப்பதக்கத்துடன் திருப்தி பட்டுக் கொண்டார். போர்த்துக்கல் வீரர் பிரான்சிஸ் ஒபிக்வெலு வெள்ளிப்பதக்கம் வென்றார். ஒலிம்பிக் வரலாற்றில் கார்ல் லூயிஸ் மட்டுமே தொடர்ந்து 2 முறை 100மீ. ஓட்டத்தில் தங்கப்பதக்கம் கைப்பற்றி உள்ளா. இந்தசாதனையை சமன் செய்ய நினைத்த கிரீனுக்கு ஏமாற்றம் கிடைத்தது. 100மீ. ஓட்டத்தில் உலக சாதனை வைத்திருக்கும் டிம் மான்ட்கோமரி ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வுசெய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் மனைவியும், சிட்னி ஒலிம்பிக் போட்டியில் 100மீ. ஓட்டத்தில் தங்கம் வென்றவருமான மரியன் ஜோன்சும் இந்த முறை 100மீ. ஓட்டத்துக் 'கானதகுதியில் வாய்ப்பு இழந்தார்.

சிறுவயதில் 'பேட்மேன்' ஒலிம்பிக்கில் 'சூப்பர்மேன்' என்று ஜஸ்டின் காட்லினை வர்ணிக்கலாம். உலகமே எதிர்பார்த்த எதென்ஸ் ஒலிம் பிக் 100மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற இவர் 'மின்னல் வேக வீரர்' என்ற பெருமையை பெறுகிறார். 22 வயது இளம் அமெரிக்க வீரரான ஜஸ்டின், சிறுவனாக இருக்கும் போதே துறுதுறு என்று இருப்பார். பிரபல ஹாலிவுட் சினிமாவான 'பேட்மேன்' போல் உடலோடு ஒட்டிய உடை அணிந்து அங்கும் இங்கும் ஓடித் திரிவார். இதே உடையில் பெற்றோர் முன் தோன்றி அவர்களையும் வியப்பில் ஆழ்த்துவார். இப்படி எப்போதும் ஓட்டத்திலே குறியாக இருந்த இவருக்கு ஒலிம்பிக்கில் பங்கேற்க வேண்டும் என்பதே தீராத ஆசை.அதிலும் மவுரிஸ் கிரீன், மரியன் ஜோன்ஸ் போல் அதிவேக ஜாம் பவான்களாக வலம் வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

***இரண்டு ஆண்டு தடை***

இந்த குறிக்கோளுடன் தீவிர பயிற்சி மேற்கொண்ட இவர் 100 மீட்டர் போட்டிகளில் சாதிக்கத் துவங்கினார். இதற்கு 2001இல் சிறிது தடங்கல் ஏற்பட்டது. இவர் ஊக்க மருந்து சோதனையில் சிக்க, இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இவர் 'அபிடமைன்ஸ்' என்ற தடை செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது. இதை எதிர்த்து அப்பீல் செய்ய, ஜஸ்டினுக்கு விதிக்கப்பட்ட தடை ஒரு ஆண்டாக குறைக்கப்பட்டது. இதற்குப் பின் மீண்டும் தீவிர பயிற்சியில் இறங்கிய இவர் 2004, ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார். 100 மீட்டரில் உலக சாதனை (9.78வினாடி) படைத்த அமெரிக்காவின் டிம் மான்ட்கோமரி இம்முறை தகுதி பெறத் தவற ஜஸ்டினுக்கு வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. ஆனாலும் 2000, சிட்னி ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மவுரிஸ் கிரீன் கடும் போட்டியை கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**80ஆயிரம் ரசிகர்கள்**

இந்த சூழலில் மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையே 100 மீட்டர் போட்டி கடந்த திங்களன்று எதென்சில் நடந்தது. ஒலிம்பிக்கின் உச்சக்கட்ட போட்டி என்பதால் பிரதான அரங்கில் சுமார் 80 ஆயிரம் ரசிகர்கள் கூடியிருந்தனர். இறுதிப் போட்டியில் ஜஸ்டின், கிரீன் உட்பட7 பேர் பங்கேற்றனர். ஓட்டம் துவங்கியது...... எங்கும் பதட்டம். உலகின் மின்னல் வீரரை காண ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆர்வம். அப்போது கண் இமைக்கும் நேரத்தில் போட்டி தூரத்தை அதிவேகமாகக் கடந்தார் ஜஸ்டின். வெறும் 9.85 வினாடிகளில் கடந்த இவர் தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார். இதன் மூலம் மிக இளம் வயதில் (22) ஒலிம்பிக் 100 மீட்டரில் முதல் இடம் பெற்றவர் என்ற சாதனையும் படைத்தார். போர்த்துகல் வீரர் பிரான்சிஸ் ஒபிக்வெலு 9.86 வினாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கம் கைப்பற்றினார். 100 மீ, ஒலிம்பிக் ஓட்டத்தில் நடப்புச் சாம்பியனாக வந்த கிரீன், இம்முறை வெண்கலப்பதக்கம்தான் ஜெயிக்க முடிந்தது. இவர் பந்தயத் தூரத்தை 9.87 வினாடிகளில் கடந்தார். தூய்மையான சாம்பியன். இம்முறை ஊக்க மருந்து எதையும் உட்கொள்ளவில்லை என்று உறுதியாகக் கூறுகிறார் தங்கம் வென்ற ஜஸ்டின் காட்லின். "ஓடத்துவங்கியகாலத்தில் இருந்து 100 மீட்டர் பதக்கம்தான் கனவு. இப்போது அது நனவாகிவிட்டது. ஊக்க மருந்து போன்ற சோகங்கள் தடகள வீரர்களின் வாழ்வில் ஏற்படுவது சகஜம். ஆனால் இம் முறை நான் தூய்மையான சாம்பியனாக களமிறங்கினேன். இதனால்தான் எந்த வித கவலையும் இல்லாமல் முகத்தில் புன்சிரிப்போடு ஓட முடிந்தது," என்கிறார். ஜஸ்டின்.

**கண்ணன்**

# அஸ்தமனம் ஆரம்பமா?

இந்திய கிரிக்கெட் அணிக்கு மீண்டும் ஏமாற்றம். நெதர்லாந்து மும்முனை போட்டித் தொடரில் இறுதிப்போட்டிக்கு கூட தகுதிபெற முடியாத நிலை.

ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றியே நாடு திரும்புவோம் என்று கூறி புறப்பட்டுச் சென்ற இந்திய அணிக்கு அது முடியவில்லை சிறிலங்காவிடம் படுதோல்வி அடைந்து வெறுங்கையுடன் நாடு திரும்ப வேண்டிய நிலை.

மேற்படி தோல்வியை நெதர்லாந்து தொடரில் இறுதிப் போட்டி வரை பிரவேசித்து வெற்றி பெற்று தமது பலத்தை மீண்டும் நிரூபிக்கும் இந்திய அணிக்கு எதிர்பார்ப்பும் தற்போது கைநழுவிப் போயுள்ளது.




இப் போட்டித் தொடரின் போது இருந்த காலநிலை இந்திய அணிக்கு பாதகமாக அமைந்து விட்டது என்று கூறி ஆறுதல் அடையலாமே தவிர, இந்திய அணி முன்னர் இருந்த பலத்தை இழந்துவிட்டது என்ற முடிவுக்கு வருவது பொருத்தமானது.

இப் போட்டி முடிவு ஆசியக் கிண்ணப்போட்டித் தோல்வி தங்களை எந்த வகையிலும் பாதிக்கவில்லை என்று கூறிய அணித் தலைவர் கங்குலியின் வாய் வீச்சுக்கு விழுந்த அடியாக பார்க்கப்படுகிறது. அத்துடன் அவர் தொடர்பாகவும் அவரது அணி தொடர்பாகவும் பல விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளது.

இதற்கிடையில் முன்னணி வீரர்கள் தொடர்ந்து உபாதைக்கு உள்ளாகி வருவதும் அவ்அணி பலமிழக்கக் காரணமாக அமைந்து விட்டது.

முக்கியமாக அவர்களது 'பலன்ஸ்' அதாவது சமநிலை குழம்பிக்கொண்டிருக்கிறது.

தற்போது முன்னணி துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது மட்டுமல்ல மினி உலகக் கிண்ணப் போட்டியிலும் விளையாடுவதும் சந்தேகமாக மாறியுள்ளது.

ஏற்கனவே ஹர்பஜன்சிங், சஹீர்கான், அஜித் அகார்கர் ஆகியோர் அணியில் இடம்பெற முடியாத நிலை என்பன அவ் அணியை கேள்விக்குள்ளாக்கிக் கொண்டுள்ளது.

இந்நிலையில் புதிய வீரர்களும் ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டியை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது. இந்திய அணியென்ற கேள்வி எழுந்துள்ளது.

அதனை விட இவர்கள் உபாதையில் இருந்து மீண்டும் அணிக்குத் திரும்பினாலும் அவர்கள் சிறப்பாகப் பிரகாசிப்பதற்கு நாட்கள் செல்லலாம் இதனால் இந்திய அணி பலமிழந்த அணியாகவே காணப்படப் போகின்றது.

அந்த வகையில் தொடர் தோல்விகளை சந்தித்து வரும் இந்திய அணி மினி உலகக் கிண்ணப்போட்டியில் என்ன செய்யப் போகின்றது. இதற்கான அணியை எவ்வாறு தயார்படுத்தப் போகின்றது.

எனவே வாய்வீச்சில் சவால்விடும் அணியாக இல்லாது களத்தில் சவால் விடும் அணியாக இந்தியா மாற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.




சீதனம் என்ற கொடிய நோய் எமது சமூகத்தைப்பற்றியுள்ளது. எயிட்சைப் போல மிகவேகமாகப் பரவிவரும் இந்நோயினால் எண்ணற்ற பெண்கள் ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள். ஏன், மறைமுகமாக ஆண்களும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் முழுச்சமுகமும் தான்.

சீதன அரக்கனின் கொடிய விலங்குகளை உடைத்துக் கொண்டு வெளியேறமுடியாமல் இன்று எமது சமுதாயத்தில் முதிர் கன்னிகளின் ஏக்கப் பெருமூச்சுக்கள் கண்ணீருடன் காற்றில் கலக்கின்றன. எமது தாயகத்தில் கூட இந்த நிலை மிகமோசமாகத் தொடர்வது வேதனைக்குரிய விடயமாகும். ஒரு காலத்தில் எமது இனத்தைப் பின் தள்ளிக்கொண்டு வந்த இரு கொடியநோய்களாக சாதியும், சீதனமும் இருந்தன. இதில் சாதிப்பாகுபாடு இன்று அமர்முடுகலில் தேய்வுற்று வரும் இதேவேளை சீதனம் ஆர்முடுகலாகி ஆயிரங்கள் இலட்சங்களாகி, இலட்சங்கள் மில்லியன்களாகி கொடிகட்டிப் பறக்கின்றது.

எமது தாயத்தில் சீதனத்திற்கு எதிராகப் பல இறுக்கமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனாலும் அதைப் பயன்படுத்த எந்தப் பெண்ணும் முன்வரவில்லையே, ஏன்? இதற்குக்காரணம் ஒரே வீட்டிலேயே இருவித நிலைப்பாடு இருப்பதால் தானோ? தனது ஆண்பிள்ளைக்குச் சீதனம் வாங்கும் பெற்றோர், பெண்பிள்ளைக்கு என்று வரும் போது மட்டும்தான் சீதனத்தை எதிர்கொள்கிறார்கள் இதைக் கூட தப்பு என்று அவர்கள் கருதுவதில்லை. ஆணுக்கு வாங்கினால் தானே பெண்ணின் திருமணத்திற்குக் கொடுக்கலாம் என்று நினைக்கிறார்கள். கூட்டிக் கழித்துப் பார்த்தால் கொடுப்பதிலும் வாங்கு வதிலும் எந்தவித அர்த்தமோ நியாயமோ இருப்பதாகத் தெரியவில்லை.

சீதனம் கேட்டுப் பெறுவதனால் தமது சுய கௌரவத்தை இழப்பதாக எந்தப் பெற்றோரோ, மாப்பிள்ளையோ நினைப்பதில்லை



## சீதன அரக்கன் எப்போது சிறைப்படுவான்?

என்ப துதான் வியப்பளிக்கிறது. உண்மையிலேயே சீதனம் வாங்குவதால் ஆண் சிறுமை அடைகிறான். குடும்பத்திலும் பெண்ணின் கை ஓங்கிட வாய்ப்பு உண்டு. ஆனால் நிஜத்தில் இந்த நிலையைக் காணமுடிவதில்லை. வெளிநாட்டுப் பணத்தின்வரவு சீதனத்தை இன்றும் இறுக்கமடைய வைத்துள்ளது. பொதுவாக சீதனக் கொடுமையினால் ஏழைப் பெண்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். எனினும் பணக்காரப்பெண்கள் கூட இதனால் சில சந்தர்ப்பங்களில் கரையேற முடியாது தவிக்கிறார்கள். (கரைசேர்தல் என்ற பதம் கூட தவறானது என்று பெண்ணிலை வாதிகள் வாதிடுகிறார்கள்)

இரட்டைமாட்டுவண்டிலுக்கு இல்லறத்தை ஒப்பிடலாம். வண்டியை இழுப்பதற்கு இரண்டு மாடுகளும் தேவைப்படுகின்றன. இரண்டுமே அயராது பணியாற்றுகின்றன. இந்த நிலையில் ஒரு மாட்டிடம் மட்டும் சீதனம் கேட்பது என்ன நியாயம்?

மேற்கத்திய நாடுகளில் சீதனம் என்னும் நோய் இல்லாததனால் தான் அவை துரிதமுன்னேற்றம் காண்கின்றன. ஆபிரிக்க, அரேபிய நாடுகளிலோ கதை வேறு. அங்கு பெண்களுக்குத்தான் ஆண்கள் சீதனம் கொடுக்கவேண்டும். (இது கூட சரியென்று நான் கருதவில்லை.)

இன்று கல்வி, தொழில் வாய்ப்பு, சமூகப்பணி என பல துறைகளிலும் பெண்கள் முன்னேறிவிட்டார்கள். வீட்டுப் பணிகளிலும் முக்கிய பங்கெடுப்பது அவர்கள்தான். மேலும் பிரசவம், தாய்மை, குழந்தை வளர்ப்பு என அவர்களது பணிகள் அளப்பரியது. இந்த நிலையில் அவர்களிடம் சீதனம் கேட்பது நியாயமா என்று உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். சீதனம் கோரிய மாப்பிள்ளையை ஒரு மணப்பெண், மணமேடையிலேயே வைத்து பொலிசாரிடம் கையளித்த கதை எமது அண்டை நாடான இந்தியாவில் நடந்துள்ளது. முன்னேற்றம் பல கண்டுவரும் எம்மாலும் நிச்சயம் சீதன அரக்கனை வெற்றி கொள்ள முடியும். தனிமனித போராட்டமன்றி, இணைந்த போராட்டமாக சீதனத்திற்கு எதிரான அறைகூவல் எழுச்சி பெற வேண்டும். இனிய இல்லறத்தில் சம உரிமையுடன் நுழையும் போது எமது வாழ்வும் பூத்துக் குலுங்கும் ?

**மு. சந்திரகாந்தா**

# சமைப்பதில் தான் எத்தனை வகைகள்

*கொதி நீரிலும், ஆவியிலும், வாயு அழுத்தத்தாலும் வேக வைப்பது வறுப்பது, நெருப்பில் நேரடியாகச் சுடுவது: சாதாரணமாகச் சுடுவது (Baking), வரட்சியாக வறுப்பது என்று பல வகைகளும், முறைகளும் உள்ளன.*

*இவற்றைத் தனித் தனியே பார்த்தால்,*

*கொதி நீரில் வேக வைப்பதே இன்றைக்கு நாம் சாதாரணமாகச் சமைக்கும் முறை - இதனால் ருசி கெடுகிறது என்பது உண்மை. மணமும் கெடுகிறது. சத்துக்கள் தண்ணீருடன் போகின்றன. ஆகவே உணவு வெந்த தண்ணீரை வீணாக்காமல், உணவுடன் சேரச் செய்ய வேண்டும். இதனால் ஊட்டச் சத்துக் கள் அதிகம் வீணாகாது.*

*ஆவியில் சமைப்பதிலும் இந்த அபாயங்கள் உண்டு. உணவுக்கும் தண்ணீருக்கும் தொடர்பு இல்லை. இதிலும் இட்டிலி, புட்டு போல நேரடியாக ஆவியில் வேகின்றவைகளும் உண்டு. இன்னொரு முறை 'புட்டிங' செய்கிற மாதிரி இதில் நீரிலுள்ள பாத்திரம் சூடேறி வேக வைக்கிறது.*

*இவை இரண்டிலும் உணவுச் சத்து வீணாகுவதில்லை. எளிதில் சீரணமும் ஆகும். உணவு சுருங்குவதில்லை. மணமும் குறைவதில்லை. இந்த முறை பாத்திரத்தில் பல அடுக்குகள் இருந்தால், பல உணவுகளை ஒன்றாகச் சமைக்கலாம். எரிபொருள், நேரம் மிச்சமாகும் புதிய அரிசியையும் இப்படி நன்றாகச் சமைக்கலாம்.*

*வறுப்பதிலுள்ள வித்தியாசம் என்னவென்றால், தண்ணீருக்குப் பதிலாக எண்ணெய்- வெண்ணெய்- கொழுப்பு- முதலியவற்றைப் பயன்படுத்துகிறோம் என்பதே, இதிலும் இரண்டு வகைகள் இருக்கின்றன. அதிக எண்ணெயிலும் குறைந்த எண்ணெயிலும் வேக வைப்பது! முதல் வகையில் வடை, முறுக்கு மாதிரி எண்ணெயில் மூழ்கிவேகிற உணவுப் பொருட்கள், இரண்டாவதில் எண்ணெயில் புரட்டி வறுத்து எடுக்கப் படுகின்றன.*

# முட்டை-உருளைக்கிழங்குப் பொரியல்




**தேவையான பொருட்கள்:**

முட்டை-நான்கு

உருளைக்கிழங்கு-அரைக்கிலோ

வெங்காயம்-இரண்டு

மிளகாய்த்தூள்-அரை கரண்டி

மஞ்சள் பொடி-கால் கரண்டி

வெண்ணெய் அல்லது எண்ணெய்-சிறிதளவு

உப்பு-தேவையான அளவு

**செய்முறை:-**

வெங்காயங்களைத் துண்டுகளாக்கி, தாச்சியில் எண்ணெய் அல்லது வெண்ணெய் சேர்த்து வதக்க வேண்டும். பொன்னிறமானவுடன் உருளைக் கிழங்குகளைப் பொடியாக நறுக்கி வெங்காயத்துடன் சேர்த்துக் கொள்ளவும். மிளகாய்த் தூளுடன், மஞ்சள் பொடியையும் சேர்த்து நன்றாகக் கிளறிவிட வேண்டும்.

உருளைக்கிழங்கு நன்றாக வேக வேண்டும். இப்போது தேவையான அளவு உப்பினைச் சேர்க்கவும். பின்னர் முட்டைகளை உடைத்து ஒரு பாத்திரத்தில் நன்றாகக் கலக்கிக் கொள்ளவும். பின்னர் உருளைக் கிழங்கு கலவையில் முட்டையை ஊற்றி,சில நிமிடங்களுக்கெல்லாம் தாச்சியைக் கொதியிலிருந்து இறக்கிவிட வேண்டும். தயிர் சாதத்துடன் சேர்த்துச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர் பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*

*வீடு,*
*வெள்ளிநாதம்,*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை,*
*கிளிநொச்சி.*

# இப்படிச் செய்யலாம்...

தோலால் செய்யப்பட்ட உடுப்புப்பெட்டி (சூட்கேஸை) உபயோகிக்காமல் வைத்திருந்தால், அதனுள்ளே பூச்சி வரும். நாற்றம் வரும். உபயோகமில்லாத சூட் கேஸில், ஒரு சவர்க்காரத் துண்டைப் போட்டு வையுங்கள். பூச்சிவராது, நாற்றம் வராது.

* * *

நுளம்பு அதிகமாக இருக்கிறதா? படுக்கும் அறையில் வேப்பிலைகளை நெருப்புத் தணலில் போட்டு வையுங்கள். வேப்பிலையின் புகை, நுளம்புகளை வெகு தூரத்திற்கு விரட்டிவிடுகிறது! வேப்பிலையின் புகை உடம்புக்கும் நல்லது.

* * *

காய்கறிகளை நறுக்கு வதற்கு முன், சுத்தமாக அதைக்கழுவ வேண்டும். நறுக்கிய பிறகு காய்கறிகளைக் கழுவக்கூடாது. கழுவினால் அதிலுள்ள பிசிதச்சத்துத் தண்ணீரோடு போய்விடுகிறது!

* * *

சமையல் அறையில் சமையலுக்கு வேண்டிய பொருட்களை பிளாஸ்ரிக் டப்பாக்களில் போட்டு வைத்துக் கொள்வதுதான் நல்லது. தகரப்பேணிகள் துருப்பிடிக்கின்றன. துருகெடுதல், பயன்படுத்தக்கூடாது.

* * *




குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்-11

பெயர்:..........................................

முகவரி:........................................

..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! நான் இப்ப எங்கே நிற்கிறன் எண்டு நினைக்கிறீயள்? ஓமோம்! வன்னிக்கு ஒரு மாதிரி வந்து சேந்திட்டன். பூர்வீகமான யாழ்ப்பாணத்திலை நிற்கேக்கை ஒரு சுகம், இந்த வன்னி மண்ணிலை நிற்கேக்கை இன்னுமொரு வித சுகம். எங்கட நாட்டிலை எங்கை நிண்டாலும் ஒரு விபரிக்க முடியாத சந்தோசம் பாருங்கோ! மற்றது A-9 வாசியும், நேசியுமாகிய எனக்கு வந்து பேப்பர் வாசிக்க நேரம் இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தி பாருங்கோ! குறைஞ்ச பட்ச வளங்களோட, வளர்ச்சியடைஞ்ச நாட்டுக் காவல்துறையோடையே சவால் விடுற அளவுக்கு திறமையா செயற்படிற தமிழீழக் காவல் துறைக்கு, ஏதோ திருஷ்டிப்பொட்டு வைச்ச மாதிரி உந்த வீதி விபத்துக்கள் இருந்து வருகிது. அந்த விபத்துக்களாலை ஏற்பட்ட அவலங்கள் அடங்கிய வீடியோ விவரணம் ஒண்டை சாரதிகளுக்கு காவல் துறை போட்டுக்காட்டுதாம் எண்டது தான் அந்த நல்ல செய்தி. நல்ல வேலை, இன்னும் பரவலா எல்லா மக்கள் மத்தியிலும் செய்ய வேணும். ஏனெண்டால் பாருங்கோ! சாரதியள் எண்டால் அனுமதிப்பத்திரம் வைச்சிருக்கிற ஆக்கள் மட்டுமில்லை. நித்திரையில கிடக்கிற தகப்பன்ரை சேட்டுப் பொக்கற்றுக்குள்ள இருந்து திறப்பெடுத்த எல்லாரும் சாரதிதானே! பேப்பர் வெய்ற் (Paper-Weight) வைக்காட்டி, அடிக்கிறகாத்து அலாக்காத் தூக்கிக் கொண்டு போற சைஸில இருந்து கொண்டு,




அவையள் 'உஸ்'..... எண்டு பறக்கேக்கை, அவையின்ரை மூஞ்சையை நீங்கள் பாக்கோணும்! உந்த அம்மாளாச்சி மேலை அடிச்சுச் சொல்லுவன், 15வயசு தாண்டியிருக்காது அவையளுக்கு! "எட என்ரை பொடியன் சின்ன வயசிலேயே எவ்வளவு சோக்கா மோட்டார் சைக்கிள் ஓடிறான்" எண்டு நினைச்சுச் சந்தோசப்படுற அம்மாக்கள் தயவு செய்து எல்லாற்றையும் நன்மை கருதி காவல்துறையோட சேர்ந்து நீங்களும் கொஞ்சம் கூட இறுக்கிப்பிடிக்கவேணும்.

எனக்குத் தெரிஞ்ச வெளிநாட்டு நண்பர் ஒருத்தர் சொன்னார் நெடுஞ்சாலையிலை பயணிக்கிற வாகன ஓட்டியளுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்வை அடிக்கடி ஞாபகப்படுத்திற மாதிரி பெரியபெரிய அறிவிப்புப்பலகையள் அங்கே இருக்குமாம்.! 'அப்பா! நீங்கள் வாற வரைக்கும் நான் பார்த்துக் கொண்டிருப்பன்' எண்டு ஒரு மகள் சொல்லுற மாதிரியும், 'இன்னும் வேகமாப் போங்கோ! எங்களுக்குச் சரியாப் பசிக்கிது' எண்டு கழுகுகள் சொல்லிற மாதிரியும் அதிலை போட்டிருப்பினமாம்! இதேபோல விபத்துக்கள், அதாலை ஏற்படிற மனித அவலங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திற மாதிரியான போஸ்ரர்களைப் பரவலாக் கொண்டுவரலாம், இதுக்கெல்லாம் காவல்துறைதான் செலவழிக்க வேணும் எண்டில்லை. வியாபார ஸ்தாபனங்கள் ஸ்பொன்சர் செய்யலாம்! அதிலையும் பாருங்கோ! இஞ்சை வன்னியில இருக்கிற சாப்பாட்டுக் கடைக்கும், பலசரக்குக் கடைக்கும் ரி.பி.சி.யின்ரை சகோதரமான தென்றலில காசு செலவழிச்சு விளம்பரம் செய்தஆக்கள், இப்படியான நல்ல விசயங்களுக்கு செலவு செய்யலாம் தானே! எங்கட நாட்டு புலிகளின் குரல் வானொலியின்ரை வீச்செல்லைக்கு அப்பாலை இருந்து (உதாரணத்துக்கு வவுனியாவுக்கு வெளியால இருந்து) சாமான் வாங்கவும் சாப்பிடவும் கிளிநொச்சிக்குத் தானே வரப்போயினம் தென்றலில விளம்பரத்தைக் கேட்டு! ஏதோ அநியாயக்காசு! இனிமேலை எண்டாலும் கொஞ்சம் யோசித்துச் செயற்படட்டும்.

மற்றது பாருங்கோ! சில்லறைக்குப் பதிலா ரொபி தாற ஆக்கள், அந்த ரொபியளை விட்டிட்டு எள்ளுருண்டை மாதிரி ஏதாவது உள் நாட்டுத் தயாரிப்பாக (Product of Tamileelam) கொடுக்கலாம் தானே! சில்லறை தட்டுப்பாடா இருக்கலாம். அதுக்காக இந்தோனேசிய ரொபிகளை வித்துத்தள்ளோனும் எண்டு ஏன் ஒற்றைக்காலில நிக்கிறியள்? எங்கட தயாரிப்புகளா ஏதாவது கச்சான், அல்வா,எள்ளுருண்டை எண்டு ஏதாவதை குடுக்கலாம் தானே நீங்கள் நினைப்பியள் நைன்ரிக்கு அறளை பெயர்ந்திட்டு எண்டு! ஆனா ஒருக்காத்தான் சொல்லுவன், இரண்டு கிழமை ரைம் தாறன். அதுக்குப் பிறகும் ஆராவது வேறு நாட்டுத் தயாரிப்புக்களை மிச்சக் காசுகளுக்குப் பதிலா கொடுக்கோணும், நானும் ரொபிப் பக்கற் வாங்கிப் போடுவன். சொல்லிப் போட்டன். பின்னே! வயித்தைப்பத்தியெல்லே எரியுது. குடிக்கிறது American Water குந்திறது ... வேண்டாம்! வேண்டாம் ஏரம்பருக்கு ரென்சன் கூடுது. கடைவழியிலை ஏதாவது உடுப்பெடுப்போமெண்டு போனால், ரீசேட் எல்லாத்திலையும் அமெரிக்கன், அவுஸ்திரேலியன், பிரிட்டிஷ் கொடிகளதான்! இவங்களின்ரை கொடியளைப் போட்டுக்கொண்டு திரியிறதுக்கு, இவங்கள் எங்களுக்கு என்ன தந்தவங்கள்? தலையிடியைத் தவிர!தொப்பியளுக்கும் அதே கதி. அப்பிடிக் கொடியள் இல்லாட்டி, ஏதாவது ஒரு மேனாட்டு நகரத்தின்ரை பெயரோ, ஒரு கிளப்பின்ரை பெயரோ பதிக்கப் பட்டிருக்கும். ஏன் எங்கட தென்னை மரம், பனைமரம், கடற்கரை, வாசகங்கள் எண்டு பதிச்சா என்னவாம்? எங்கட வெளிநாட்டிலை இருக்கிற தமிழ்ச்சனங்கள் வந்து போற நேரம் உந்த ஏ9 கடையளிலை (சாப்பாட்டுக்கடையள் உட்பட) தொங்க விட்டால் அதுகளும் ஞாபகத்துக்கெண்டு ஆசையா வாங்கிக்கொண்டு போகுங்கள். அதை விட்டிட்டு மாற்றீடுகளுள்ள அடுத்தவங்களின்ரை தயாரிப்புகளுக்கு இஞ்சை கதவு திறக்கிறது, நாளைக்கு முழுமையா விடுதலை கிடைகிறதைப் பின் தள்ளும் எண்டிறதிலை கொஞ்சம் விழிப்பாயிருக்கோணும்!.

எனக்கும் பாருங்கோ! வயசு போனதாலை கனவிசயங்கள் இப்ப விளங்கிறேல்லை! யாழ்ப்பாணத்தில இருந்து வந்தனான், ஒரு போஸ்ரரைப் பார்த்து ஏங்கிப்போனன். 'குத்து' 7.30மணிக்கு எண்டு போட்டிருந்திச்சு. அதிலை குத்துப்படிற ஆரோ ஆக்களின்ரை பேரும் கிடந்திச்சு. உடல் உள ஆரோக்கியத்துக்காக போட்டியள் இருக்கத்தான் வேணும். ஆனால் அது குத்து, வெட்டு எண்டு மோசமான அளவுக்குப் போகக்கூடாது. முந்தியில தான் ஊருக்கொரு பிரபல்யமான சண்டியர்கள் இருப்பினம். போட்டியளில பங்குபற்றி பேரெடுப்பினம். எங்கட ஊரிலயும் ஒராள் இருந்தவர், அவற்றை பேரே சண்டியர் மார்க்கண்டு அவற்றை மகன் என்னோடை தான் படிச்சவன். அவனுக்கு நாங்கள் வீட்டுப்பாடம் எல்லாம் செய்துகுடுப்போம், சைக்கிளிலை ஏத்திக்கொண்டு திரிவோம். ஆனாப்பாருங்கோ எனக்குத் தெரிய அந்தச்சண்டியர் ஒருத்தரோடையும் சண்டித்தனம் காட்டினதா அறியேல்லை.. அவரின்ரை முறுக்கு மீசையே எல்லாரையும் வெருட்டும். ஆனா பிற்காலத்திலை காரைநகரிலை இருந்து நேவிக்காரங்கள் பீரங்கி அடிக்கேக்கை அவரும்தான் ஓடினவர். நானும் அவருக்குப்பக்கத்திலை சேர்ந்து ஓடினனான். சண்டியருக்குப் பக்கத்திலை ஓடேக்கை எனக்கு ஒரு அசட்டுத்தைரியமாய் இருந்திச்சு. ஓடிப்போய் கோயில் ஒண்டில இருந்தாப்பிறகுதான் யோசிச்சன் 'எட சண்டியர் எண்டு சனம் சொல்லுது. ஆனா மனுசன் எல்லாரையும் முந்தி தலைதெறிக்க ஓடுது' எண்டு என்ரை சந்தேகத்தை அவரிட்டைக்கேட்டு நிவர்த்தி செய்யிறதுக்கு அவற்றை மீசை அச்சுறுத்தலா இருந்திச்சு.அது அந்தக்காலம்! ஆனா உந்த "குத்து" போஸ்ரரைப் பார்த்ததுதான் எனக்கு தலை விறைச்சுப் போட்டுது. ஆரார் உங்க வெட்டுப்பட்டு நாசமாய் போகுதுகளோ தெரியாது. மனம் கேக்காததாலை அதிலை போட்டிருந்த இடத்துக்குப்போய் பார்த்த நேரம் தான் விளங்கிச்சு, அது இந்தியச் சினிமா ஒண்டின்ரை பேராம்! எட ஏன் உப்பிடி ஒரு பயங்கரமான பேரை வைக்கோணும்? கதையோட சம்பந்தப்பட்ட தலைப்பாக்கும் எண்டு பார்த்தால் அதிலை கதையையே காணோம்! விசாரிச்சுப் பார்த்ததிலை மச்சி, பச்சி, தூள், சொக்கிலேற், ராஸ்கல், சோடா, கீடா எண்டெல்லாம் ஏதோ பேருகளிலை படங்கள் வந்திருக்காம். உவங்களுக்கு ஏன் அப்படித் தலைப்புப்பஞ்சமோ?

உப்பிடித்தான் யாழ்ப்பாணத்திலை ஒரு வீதியாலை போய்க் கொண்டிருந்தன். ஒரு சாப்பாட்டுக் கடையடியால போகேக்கை "சாப்பிடவாடா! சாப்பிடவாடா!" எண்டொரு பாட்டு போய்ச்சிது. எட சாப்பாட்டுக் கடைக்குப் பொருத்தமான பாட்டாத் தான் போடினம். என்ன கொஞ்சம் வயசு மரியாதை இல்லாமல் வாடா போடா எண்டு சொல்லிறது. நெருடலாய்த்தான் இருந்திச்சு. எனி உதைப்பற்றி முதலாளியோட கதைச்சு மினைக்கெடக்கூடாது எனக்கும் பசிதான் எண்டிட்டு உள்ளுக்கை போனன். வந்த சாப்பாட்டுக்கிள்ளை கை வைக்கிற நேரம்பார்த்து, "தின்னாதே என்னைத் தின்னாதே!"எண்டு இன்னுமொரு பாட்டு போய்ச்சிது. இதென்னடா ஆக்கினை! சாப்பிடச் சொல்லிப்போட்டு மறிக்கிற குணம்! தெரியாத்தனமா அந்தப்பாட்டை முழுசாக் கேட்ட நேரம்தான் உண்மையிலேயே பசிமறந்து போச்சு கைகழுவிப்போட்டு வெளியால வந்திட்டன்.

உங்கள் எல்லோரோடையும் கொஞ்சம் மனம் திறந்து கதைக்கோணும். நான் சொல்லிறதைக் கொஞ்சம் சிந்திச்சுப்பாருங்கோ! வரலாற்றுக்கு முந்தின காலந்தொட்டு நாங்கள் இந்திய உபகண்ட கருத்தியல், பண்பாட்டு ஆதிக்கத்துக்கு உட்பட்டுத்தான் வந்திருக்கிறோம். இதாலை நன்மை, தீமை இரண்டும் இருந்திச்சு. ஆனால் இப்பை ஒரு வாழ்வாதார உரிமைப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிற எங்கட பண்பாட்டு நாகரிக அடையாளங்களை அழிக்கிற குப்பையளையும், பீடைகளையும் தான் இந்தியா எங்களுக்கு மேலை திணிக்கிது. முக்கியமா சினிமா, நாடகங்கள் எங்கடை சுயத்தை அழிச்சு, ஒரு வக்கிரம் பிடிச்ச அரைகுறைகளா எங்களை ஆக்கிறது மூலம், விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கப்பார்க்கிது. அங்கை அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படிறதைக் தவிர்க்கிறதுக்காக கொட்டப்படுற குப்பையளை எங்கட நடுவட்டுக்குள்ளை சக்திதரும் எண்டு நாங்கள் இடம் குடுத்தால் நாங்கள் உருப்படேலாது. அதிலையும் பெண்மையை படுகேவலமாச் சித்திரிக்கிற வக்கிர வரிகள். நீங்கள் சிலநேரம் சொல்லுவியள் அர்த்தத்தை ஒருத்தரும் கவனிக்கிறேல்லை, இசைக்காகத்தான் கேக்கிறோமெண்டு. கருவில இருக்கிற குழந்தையே வெளியால நடக்கிற அருப விசயங்களால ஆளுமை கொள்ளுது எண்டு அறியப்பட்டிருக்கிற நேரத்திலை உப்பிடிச் சொல்லேலாது நீங்கள். எல்லாரும் அன்னம் மாதிரி பாலைப் பிரிச்சுப்பருகிற பக்குவம் இருக்கிற ஆக்களில்லை. அதிலையும் பிழையான விசயங்கள்தான் மனுசரைக் கூட ஒட்டும். அநியாயம் அக்கிரமம் எண்டெல்லாத்தையும் சந்திக்கிற ஒவ்வொரு தனிமனிசனுக்குள்ளேயும் அதுக்கு எதிரான ஆவேசமும் போராட்டமும் எழவேண்டும்!

## ஊக்கமாத்திரை

இன்றைய சூழலானது வெகுவாக மாற்றமடைந்து செல்கின்றது. இச்சூழலில் ஒவ்வொருவரதும் ஒவ்வொரு நொடிகளும் வித்தியாசமாகவே சுழன்றுகொண்டிருக்கிறது. இந்தச்சூழலால் ஏற்படுகின்ற மாற்றங்களால் ஒரு அமைதியற்ற ஒரு மன அழுத்தத்தைகூட ஏற்படுத்திவிடுகிறது.

சாதாரணமாக ஏற்படும் ஒரு சிறுபிரச்சினைகள் குழப்பங்கள் என்று ஏதாவதொரு சிக்கல் மாறிமாறி ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால் மனக்கவலை சஞ்சலம் என்று திண்டாடிக்கொண்டே இருக்கிறோம்.

ஆம். இந்த மன அழுத்தம் ஏன் ஏற்படுகிறது? ஏதாவது ஒன்று எமக்கு ஏற்பட்டுவிட்டால் போதும் உடனே பொறுமையை இழந்துவிடுகிறோம். என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறோம். நிதானத்தை இழக்கிறோம். அடுத்த கட்ட முடிவை எப்

### மன அழுத்தத்திலிருந்து விடுபட

படி எடுப்பது என்று சிந்திக்க முடியாது இருக்கிறோம். அமைதியாக இருக்கமுடியாது. பார்த்தீர்களா? இந்த சின்ன மன அழுத்தமானது எவ்வளவு சிக்கலை ஏற்படுத்துகிறது. எவ்வளவு தான் எமது உடல் பலவீனப்பட்டிருந்தாலும் எமது மனமானது நலமாக இருக்கவேண்டும். தனியாக இருந்து யோசிக்கக்கூடாது. குடும்பத்திலோ, அல்லது நண்பர்களுக்கிடையிலோ குழப்பம் ஏற்பட்டுவிட்டால் தனியே இருந்து யோசித்துப் பயனில்லை. ஒன்று சேர்ந்து மனம் விட்டுப் பேசுங்கள். ஒவ்வொரு கணமும் உங்கள் மனதை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். பொறுமை இழக்காதீர்கள். நிதானம் தவறாதீர்கள். அமைதியாக இருங்கள். மனங்குழம்பியிருக்கும் நேரங்களில் வானொலி கேளுங்கள். தொலைக்காட்சி பாருங்கள். சுவாரஸ்யமான கதைப்புத்தகங்களை வாசியுங்கள். இவைதான் கைகூடவில்லை என்றால் வெளியே சென்று உங்களிற்கு பிடித்த இயற்கைக் காட்சிகளை பாருங்கள்.அன்றேல் உங்களை ஆழமாக நேசிக்கும் உறவினரோ நண்பரிடம் சென்று மனம்விட்டுப் பேசுங்கள் இது உங்கள் மனதை திசைதிருப்பும். இதைவிட்டு தலையே போனது போல் குழம்பாதீர்கள். உடல் நலமாக இருக்கும் அதேவேளை மனநிலை சரியாக இல்லையேல் எல்லாமே சிக்கல் தான் மனித வாழ்வில் மனநலம் அவசியம். இதற்கு நாம் முதலில் மன அழுத்தத்திலிருந்து விடுபடவேண்டும்.

ஈழவிழி

## படிக்கவேண்டிய புத்தகம்




விடுதலைக்காகப் போராடும்
ஒவ்வொருவரின் மனதிலும்
ஒப்பற்ற காவியமாக அழியாதிருப்பது
'உண்மை மனிதனின் கதை'என்ற
இந்த விடுதலை நாவல். பேர்க்களத்தில்
விழுப்புண் அடைந்து நடமாட
இயலாதென்ற நிலையான போதும்
பின்தங்கிவிடாது நம்பிக்கையுடன்
தொடர்ந்து சமராடி வெற்றிபெறும்
ஒரு விமானமோட்டியின் கதை இது.
காலத்தைக் கடந்து,
தேச எல்லைகளைக் கடந்து
விடுதலை என்ற ஒரே இலக்கில் பரந்து
ஒன்றிணைந்திருக்கிறது இந்த ரஷ்ய நாவல்
விடுதலையை விரும்பும்
ஒவ்வொருவரும் விரும்பிப் படிக்கும்
'உண்மை மனிதனின் கதை'
உலகின் அநேக மொழிகளில்
ஆயிரக்கணக்கான நூல்களாக
இதுவரையில் வெளியாகியிருக்கிறது.
விடுதலைப் போராளிகளிடம் பெரும்
நம்பிக்கையூட்டி அவர்களின் இதயத்தில்
ஒளிச்சுடராக என்றும் இருக்கிறது இது.
விடுதலைக்கான போராட்டம் நிகழும் வரை,
போராட்டங்கள் நிகழும் களங்கள் எங்கும்
இந்தக் கதை அறிமுகமாகியபடியே இருக்கும்.
மெய் வாழ்வின் அடிச்சரடாக இந்த நாவல்
எழுதப்பட்டிருப்பதே இதன் வெற்றி.

**இந்தப்புத்தகம் இப்போது அறிவமுது பொத்தக சாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.**



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 02

### பகுதி -11

கதவுக்கு அருகாக இருந்த சிறிய கதிரையொன்றில் நான் அமர்ந்துகொண்டேன். அறையின் நடுவில் பின்புறத்தை எனக்குக் காட்டியபடி நின்று கொண்டிருந்த டிப்ஸ் தன் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான். நான் காத்துக்கொண்டிருந்தேன். அந்த அறையில் ஒரு மணித்தியாலத்தை நாங்கள் செலவிட இருந்தோம். ஏதாவது செய்யவேண்டும் என்ற அவசரம் எதுவுமில்லை. விளையாடுவதா இல்லையா, கதைப்பதா அல்லது அமைதி யாகவே இருந்துவிடுவதா என்ற வேறுபாடு களுக்கெல்லாம் அந்த அறையில்



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

இடமில்லை. அந்த அறை மிகவும் சிறிதாக இருந்தது.அவன் அதற்குள் எங்கு என்றாலும் வெகுதூரம் போய்விட முடியாது. அவனுக்கு ஒழித்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றி னால் ஊர்ந்து புகுந்து கொள்வதற்கு ஒரு மேசையும் அங்கே இருந்தது. அமர்ந்து கொள்ள விரும்பினால் அதற்கென்று மேசையின் அருகே சிறிய கதிரையொன்றும் இருந்தது. அவன் விரும்பினால் விளையாடு வதற்கு பொம்மைகளும் அங்கே இருந்தன.



ஆனால் டிப்ஸ் எதுவுமே செய்யாமல் அறை யின் நடுவில் நின்று கொண்டிருந்தான். பெரு மூச்சு ஒன்று அவ்னி டமிருந்து கிளம்பி யது. பின்பு மிக மெதுவாக அறைக்குக் குறுக் காக நடந்து சென்றவன் பின் சுவர்களுக்கு அரு காக நடக்கத் தொடங்கினான். ஒரு பொம்மையிலிருந்து இன் னொரு பொம்மைக்குச் சென்ற அவன் அவைகளை மிக மென்மையாக வருடினான். அவன் நேரடியாக என்னைப் பார்க்கவில்லை. இடைக்கிடை என்னை நோக்கி தன் பார் வையைச் செலுத்துவான். எமது பார்வைகள் சந்தித்துக்கொண்டால் தன் பார்வையை சடாரென திருப்பிக்கொண்டான். அறையைச் சுற்றி வருவது கடினமான பயணமாக இருந்தது. கனத்த அடிகளை அவன் எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பிள்ளை யிடம் சிரிப்போ, மகிழ்ச்சியோ இருப்பதாகத் தோன்றவில்லை. வாழ்க்கை என்பது ஒரு சோகமயமான விடயமாகவே இருந்தது.

அந்தப் பொம்மை வீட்டை நோக்கி நடந்து சென்ற அவன் அதன் கூரை நெடுக வருடிக் கொடுத்தான். அதனருகே முழங் காலிட்டு அமர்ந்தவன் உள்ளேயிருந்த தள பாடங்களைப் பார்த்தான். மிக மிக மெதுவாக அவற்றை ஒவ்வொன்றாக எடுத்தான். அப்படிச் செய்யும் போது அவற்றினுடைய பெயரை உச்சரித்தான். தட்டுத் தடுமாறி வந்த குரலில் கேள்வித் தொனியே ஒலித்தது. மிகவும் தாழ்ந்த குரலில் அவன் அவற்றைச் சொன்னான்.

கட்டில்..? கதிரை...? மேசை...? ஒப்பனை மேசை...? ரேடியோ...? குளியல் தொட்டி...? என கேள்வித் தொனியிலேயே அவன் சொன்னான். ஒவ்வொரு பொருளாக எடுத்து அவற்றின் பெயரைக் கூறிவிட்டு அவதானமாக மீண்டும் வைத்துவிட்டான். பொம்மைக் குவியலின் பக்கம் திரும்பிய அவன் அவற்றிலிருந்து ஒவ்வொன்றார்களை தெரிந்து எடுத்தான். ஒரு ஆண், ஒரு பெண், ஒரு பையன், ஒரு சிறுமி, ஒரு குழந்தை என பொம் மைகளை தெரிந்து எடுத்தான். அப்பா...? அம்மா..? தங்கச்சி...? சின்னத்தம்பி...? என்று கூறும் பொழுதே அவன் அவற்றைப் பரிவுடன் அடையாளம் கண்டு கொள்வதான உணர்வே தோன்றியது. அதன் பின்பு அவன் அங்கிருந்த சிறிய மிருகங்களிலிருந்து தெரிவு செய்தான். "நாய்...?" "பூனை...?" "முயல்...?". மீண்டும் அதே கேள்வித்தொனி. அடிக்கடி ஆழமான பெருமூச்சுக்களை விட்டுக்கொண்டிருந்தான். ஏதோ கடுமையான பணியை தனக்குத் தானே விதித்துக்கொண்டிருப்பது போன்ற தோற்றம் அவனில் தெரிந்தது.

ஒவ்வொரு முறையும் அவன் பொம் மைகளின் பெயர்களைக் கூறும்பொழுது அவன் கூறுவதை நான் தெரிந்துகொண்டதை அவனுக்கு உணர்த்த நான் முயற்சி செய்தேன். "ஆமாம் அது கட் டில்தான்"அல்லது "ஒப்பனை மேசை என்று தான் நினைக்கின்றேன்"அல்லது "அது ஒரு முயல் போலத்தான் தெரிகிறது" என்றோ பதில் சொல்லிக்கொண்டிருந்தேன்.எனது பதில்களை சுருக்கமாகவும் அவன் சொன்னவற்றோடு ஒத்துப்போவதாகவும்,சலிப்பைத் தவிர்க்கும் விதத்தில் போதியளவு மாறுதலைக் கொண்ட வையாக இருக்கும்படியும் பார்த்துக் கொண்டேன். அவன் அப்பா பொம் மையை எடுத்து அப்பா...? என்றபோது "அது அப்பாவாக இருக்கலாம்" என்று நான் பதில் சொன்னேன். அவன் ஒவ்வொரு பொருளையும் எடுத்து அதன் பெயரைக் கூறும் பொழுதும் இதேவிதத்திலேயே எமது உரையாடல் தொடர்ந்தது. வாய் வழித் தொடர் பாடலை ஆரம் பிக்கும் அவ னது வழி இது தான் என்று நான் எண்ணிக் கொண்டேன். பொருட்களின் பெயர்களைக் கூறுவது பாதுகாப்பான ஒரு ஆரம்பம் என்றே தோன்றியது.

பின்பு அவன் பொம்மை வீட்டைப் பார்த்தபடி தரையில் வீட்டின் முன் அமர்ந்து கொண்டான். நீண்ட நேரம் அந்த வீட்டை மௌனமாகப் பார்த்துக்கொண்டே இருந்தான். நான் அவனை எதற்கும் தூண்டவில்லை. அவன் செய்வதற்கு ஏதோ காரணங்கள் இருக்க வேண்டும். எனக்கும் அவனுக்குமான உறவைக் கட்டியெழுப்பு வதற்கான முன்முயல்வை அவனே எடுக்க வேண்டும் என்று நான் விரும் பினேன். அநேகமான சந்தர்ப்பங்களில், இந்த வகை முன் முயல்வுகளை குழந்தைகளுக்காக ஆர்வம் கொண்ட மூத்தவர்கள் எடுப்பதே வழக்கமாக இருந்தது.

மார்புக்குக் குறுக்காக தனது கைகளை இறுகக் கட்டிக்கொண்ட அவன் மீண்டும் மீண்டும் "பூட்டின கதவுகள் வேண்டாம்", "பூட்டின கதவுகள் வேண்டாம்...பூட்டின கதவுகள் வேண் டாம்..." என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

(தொடரும்....)



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி-சுபாஸ் சந்திரபோஸ்

# மறக்கப்பட்ட ஒரு வீரனும், மறைக்கப்பட்ட அதன் பின்னணியும்

இந்திய அரசியல் வாதிகளாலும், உலக வரலாற்றுப் பதிவுகளினாலும் சுபாஷ்சந்திரபோஸிற்கு அளிக்கப்பட வேண்டிய உயர்நிலை வழங்கப்படா ததற்குக் காரணம், அவர் நாசி கிட்லரின் உதவியைப் பெற்றுக் கொண்டதும், அவர்களுடன் அவர் வைத்திருந்த நெருக்க மான உறவும்தான்! இந்த இடத்தில் முக்கியமான விடயத்தைக் கருத்தில் கொள்ளல் அவசியம். 6 மில்லியன் (60லட்சம்) யூதர்கள் உட்பட பெருந்தொகை மானிட உயிர்களை அழித்த கொடு நெஞ்சன் தான் ஹிட்லர். ஆனால் அவனு டைய இனக்குரோத, மானுடவிரோதப் போக்கு என்பது அவனுடன் தொடங்கி, அவனுடனேயே அழிந்து போனதொன் றல்ல! அது என்றுமேயிருந்து வந்த தொடர்ச்சியான போக்கு. உலகவரலாறு கண்ட கொடுநெஞ்சர்கள் பலரில் ஹிட்லரும் ஒருவன் என்பதே உண்மை. ஆபிரிக்கர்களை அடிமைகளாக அமெரிக்காவிற்கு மிருகங்களென அடைத்து, எடுத்துச் செல்லப்பட்ட நடைமுறை! செவ்விந்திய மக்களைக் கொல்வதற்காக திட்டமிட்ட ரீதியில் ஸ்பானியரால் அவர்களுக்கு அந்நியமான தொற்று நோய்கள் (அறியாத நோயென்பதால் சின்னமுத்துவிற்கு எதிரான நோயெதிர்ப்புச்சக்தி செவ்விந்தியர்களிடம் இருந்திருக்கவில்லை) பரப்பப்பட்டமை! நிமிடத்திற்கு 84 என்ற விகிதத்தில் இரண்டு மில்லியன் மக்களைப் பலிகொண்ட ருவாண்டா படுகொலையை நிறுத்த, ஐ.நா சபை முயன்ற போது ஒத்துழைக்காத அமெரிக்கா! ஹிரோசிமா-நாகசாகி அணுகுண்டுக் கோரங்கள்! ஹிட்லரிற்கு எந்த விதத்திலும் குறையாமல் மானுடவதை புரிந்த யப்பானிய தலைமை அமைச்சின் ரோஜோ, 91 வளைகுடாவில் நடந்த பாலைவனப்போரில் அகதிகளாக வெளியேறிய 60 000 (60ஆயிரம்) ஈராக்கிய அகதிகள், நெடுஞ்சாலையில் வைத்து சில மணித்துளிகளில் பொசுக்கப்பட்டமை! செம்மணி- நாயகி சந்திரிகா என வரலாறு இதுவரை பலரையும் கண்டுள்ளது.

இருந்தும் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்ட ஒரு கொடுநெஞ்சன். அது மாத்திரமல்லாமல் ஹிட்லரால் குறிவைக்கப்பட்டு அழிக்கப்பட்டு அவலங்களுக்கு உள்ளாக்கப்பட்ட யூதர்கள், இன்று ஒரு பலமான நிலையில், உலகில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் 2ஆம் உலகயுத்த சமகாலத்தில் யப்பானிய ரோஜோ, எந்தவிதத்திலும் ஹிட்லரிற்குக் குறையாமல் மனிதவதை முகாம்களை அமைத்திருந்தான். எதிரிநாட்டுக்கைதிகளை உறைகுளிரில் வைத்து வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளல், யப்பான் படைகளுக்காக சீனப்பெண்களை கட்டாய விபச்சாரத்திற்கு உட்படுத்தல் என்று அவனுடைய கொடுமைகள் நீளும். இருந்தும் ஹிட்லர் அளவிற்கு ரோஜோவின் கொடுமைகள் வரலாற்றுப்பதிவுகளில் இல்லை. ஏனென்றால் உலக வரலாற்றுப் பதிவுகளில் ஊடகங்களில் மேலைத்தேய ஆதிக்கமே அதிகரித்துக் காணப்படுகிறது. அந்த மேலைத்தேயத்துடன் கூட்டு வைக்காத கம்யூனிஸ்ற் சீனாவிற்குச் சார்பாக வக்காளத்து வாங்கி, ஏன் நேசநாடு யப்பானின் கடந்த காலத்தை விமர்சிக்க வேண்டும்! அப்படிச் செய்யத்தொடங்கினாலும், பதிலுக்கு யப்பானியர்களும் தங்கள் தலைமேல் போடப்பட்ட இரு அணுகுண்டுகளையும் தூக்கிப்பிடிப்பார்கள் அல்லவா! இந்தப் பின்னணியில் தான் ஹிட்லரைப் பார்க்க வேண்டும்.

எங்கள் நாட்டிலும் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. செம்மணி- நாயகிக்கு அண்மையில் சர்வதேச விருது ஒன்று கூடக்கிடைத்துள்ளது. உணவுத்தன்னிறைவுக்காக உழைத்ததாகக் கூறப்படும் இவர், பிறீமாவின் கோதுமை மாவோடு பிய்த்துக்கொண்டு நிற்பது, விருது வழங்கியவர்களுக்கு தெரியாமல் போய்விட்டது. இருந்தும் கூற வந்த விடயம் வேறு. தமிழர் தாயகத்தின் விடுதலைக்காய் இறுதிவரை போராடிய தமிழீழத்தின் இறுதிமன்னன் பாயும்புலி பண்டாரவன்னியன் நம் உயிர்மண்ணை முத்தமிட்ட இடம் கற்சிலைமடுவில் உள்ளது. அங்கே ஒரு ஞாபகச்சின்னமும் உள்ளது. வீரம் விளைவித்து வெற்றிகளை அறுவடை செய்யும் வன்னி மண்ணின் மன்னனை ஆண்டுதோறும் நினைவு கூர்ந்து விழா எடுக்கின்றோம்: பெருமைப் படுகிறோம்! இருந்தும் ஒரு மனத்தாங்கல்; ஆங்கிலேயர்களால் தங்கள் வீரத்தைப் பறை சாற்றுவதற்காக எழுப்பப்பட்ட அந்த ஞாபகச்சின்னத்தில், எங்கள் வீரமன்னன் 'பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட செய்தியே' பொறிக்கப்பட்டுள்ளது. இதற்காக defeated என்ற ஆங்கிலப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக மேற்கத்திய கருத்துருவாக்கத்தின் கீழே தான் உலகவரலாறு எழுதப்பட்டது/ எழுதப்படுகின்றது.இதில் உண்மைக்குப் புறம்பாக பதியப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள், எதிர்த்துக் குரலெழுப்பி வென்ற நிகழ்வுகளும் உண்டு.

அன்றைய உலக அரசியல், ராணுவங்கள் நிலவரங்களுக்கேற்ப தான் நேசிக்கும் பாரதத்திருநாட்டின் விடுதலையை வென்றெடுப்பதற்காய், சில முடிவுகளை எடுத்த சுபாஷ் சந்திரபோஸ் என்னும் வீரமறவனையும், அவரோடிணைந்த INA வீரர்களையும், வீராங் கனைகளையும், பிரிட்டிஷ் விசுவாசத்தில் காந்தீயமும், காங்கிரசும் மறந்தன! உண்மைகளாலேயே உருப்பெற வேண்டிய வரலாறு, பலமானவர்களால் பலவீனமானவர்களுக்கென எழுதப்படும் பக்கங்கள் அடிக்கடி இடைச்செருகப்படுவதால், தன் தூய்மையை இழக்கின்றது. இருந்தும் விதியென்று ஏதுமில்லை, வேதங்கள் நாம் செய்வன தான்! மாற்றிட முனைந்தெழுந்தால் முடியாததென்று எதுவுமில்லை. வரலாற்றுப்பதிவுகளில் உள்ள பிழையான பக்கங்களைப் பற்றி தட்டிக்கேட்கும் உரிமை, பூமிப்பந்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு. அதேநேரம் இந்திய சுதந்திரப் போராட்டவரலாற்றில் சுபாஷின் முக்கியத்துவம் புறந்தள்ளப்பட்டாலும், அனைத்து இந்தியர்கள் விடும் மூச்சில் அவர் அரூபமாக நிறைந்திருப்பார். (முற்றும்)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*ஐயா பாவலரே!*

*சந்திரிகா அம்மையார் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை சந்திக்கப் போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார், அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? அது சாத்தியமாகுமா?*

**இ.பாலசுப்பிரமணியம்.**
**நட்டாங்கண்டல்.**

அறிக்கை விடுவது அம்மையாரின் பொழுது போக்கு சாத்தியமாகுமா என்றெல்லாம் யோசித்து அரசியல் வாதிகள் அறிக்கை விடுவதில்லையே..!

*பாவலரே!*

*என்வயது (26) இருபத்து ஆறு எழுத்து ஆங்கிலம் படிப்பது எப்படி ஆலோசனை தாரும்.*

**இனியவன்.**
**கிளிநொச்சி.**

கால் நூற்றாண்டைத் தாண்டிய பின் தான் ஞானம் வந்துள்ளது. உங்களுக்கு வயது 26, ஆங்கில எழுத்துக் களும் 26, ஆறு தான் எனவே பயப் படாமல் படியும்... ஆலோசனை கேட்பதை விட ஆழ்ந்து படிப்பதே மேல்.

*பாவலரே!*

*ஒரு மாணவனை திசை திருப்புவது அவரது படிப்பும் வளர்ப்பும் தான் என்கிறார்களே அது சரியா?*

**தே.சரிதா.**
**கிளிநொச்சி.**

மாணவப் பருவம் வழி காட்டிகளின் மூலம் நெறிப்படுத்தப் படுவதே...

நெறியாளர் சரியில்லா விடில் திசை மாறுவது இயல்புதானே....!

*பாவலரே வணக்கம்!*

*தமிழில் கேள்வி கேட்டால் அரைகுறை ஆங்கிலமும் கலந்து பதில் தருபவர்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?*

**வ.சிவதர்சினி.**
**பளை.**

கவிஞர் காசி ஆனந்தனின் மொழியில் சொன்னால் அவர்கள் தமிங்கிலர்கள்.

*கனம் பாவலரே!*

*தங்களுக்கு அமெரிக்க சனாதிபதியாகும் வாய்ப்புக் கிட்டினால் நீர் முதல் செய்யும் கடமை என்ன?*

**மூர்த்தி**
**சோரன்பற்று**

அமெரிக்காவை விட்டு தப்பியோடி விடுவேன்...

எனக்கு மனிதனாக நிம்மதியாக வாழ்வது தான் விருப்பம்.

*திருமணத்திற்கு பின் கணவனோடு வந்த பிறகு ஏன்? தாய் வீட்டை நினைத்து பெண் அழுகிறாள்?*

**ல.வித்யா.**
**பருத்தித்துறை.**

தனது தாய் தனது தந்தை யோடு தனிக்குடித்தனம் ஆரம்பித்த போது எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாள் என்பதை உணர்ந்து...!

*பாவலரே!*

*மீனுக்கு வாலைக் காட்டி பாம்புக்கு தலையை காட்டும் விலாங்குமீனை போன்ற மனிதரைப்பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

**யோ.தாரணி**
**கிளிநொச்சி.**

தரை வில(ா)ங்கு...!

*அன்பின் பாவலரே!*

*அமெரிக்காவின் சனாதிபதிகளின் வரிசையை அன்று தொட்டு இன்றுவரை தருவீர்களா?*

**தீபா.**
**ஸ்கந்தபுரம்.**

அருகிலுள்ள நூலகத்திற்கு சென்று தேடுங்கள் கிடைக்கும்.. பொது அறிவைத் தேடித்தான் சேர்க்க வேண்டும்

*அன்பின் பாவலரே!*

*எதிரிகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**க.கஜிதா**
**பள்ளிக்குடா**

துரோகிகளை விடப் பரவாயில்லை என்று நினைக்கிறேன்.

*பாவலரே வணக்கம்!*

*சனாதிபதி சந்திரிகா-ஜே.வி.பி. உறவு தற்போது எப்படி இருக்கிறது பாவலரே?*

**ராணி.**
**வட்டக்கச்சி.**

ஓடும் புளியம் பழமும் போல் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறது.

*பாவலரே!*

*கிழக்குப்பகுதியில் நடந்த கிளைமோர் தாக்குதல் இராணுவ அரண்களுக்கு பக்கத்தில் நடைபெற்றுள்ளது. இராணுவம் இதற்கு என்ன பதில் நடவடிக்கை எடுக்கும்?*

**நளா.**
**கிளிநொச்சி.**

தாக்குதல் நடத்தியோருக்கு பாராட்டும் பாதுகாப்பும் வழங்கும்.

*அன்பின் பாவலரே!*

*திருகோணமலை துறைமுகத்தை சுற்றிவளைக்கும் நோக்குடன் புலிகள் முகாம் அமைப்பதாக சனாதிபதி கூறுகிறாரே. உண்மையா பாவலரே?*

**சதீஸ்.**
**கொக்குவில்**

அவர் எப்போதாவது உண்மை கூறியதுண்டா?

*அன்பின் பாவலரே!*

*எமது யாழ்ப்பாணத்தில் ஒரு சில இளைஞர்களின் "சண்டித்தன" போக்கு குறித்து யாது கூற விரும்புகிறீர்?*

**முரளி.**
**கிளிநொச்சி.**

சண்டியாய் எழுவான் நொண்டியாய் விழுவான். இதை நான் சொல்லவில்லை உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தான் சொல்லியிருக்கிறார்.

*பாவலரே!*

*இந்தியாவின் பங்களிப்பு எமது சமாதானத்துக்கும், தேசியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துமா பாவலரே?*

**நேசன்.**
**பளை.**

பங்களித்தால் பரவாயில்லை.... எல்லாவற்றிலும் பங்குமல்லவா கேட்கிறது... அதுதானே பாதிப்பை ஏற்படுத்தும் விடயம்.




*பெண்பிள்ளையளின்ர தன்னம்பிக்கை குறைஞ்சு போச்சு. இப்பிடி அநியாயமாச் சாகுதுகள்.*

*என்னப் பொறுத்தவரை பொறுப்புணர்ச்சியில்லாதபுருசன்மாருக்கு இதொரு பாடம். அவள் செத்தது தான் சரி இனி என்ன செய்வான்.*

*சும்மா விடு உதைப் போல எத்தின பெண்கள் செத்துட்டுதுகள் திருந்தினவங்களே. அந்திரட்டி முடிய அடுத்த கலியாணங்கட்டிருவாங்கள்.*

*கட்ட வாறவளும் ஒரு பொம்பிளையே கருத்தம்மா படத்தில வாற மாரி தண்டனை கொடுக்க வேணும் உதுகளை- உவங்களை யில்லை.*

* * *

*ஏனிப்பிடி பொடியன ஊர் சுத்தவிட்டிருக்கிறாய்... ஒண்டில்-படிக்கோணும் இல்லாட்டி தொழில் செய்யோணும்.*

*அவன் ஏன் சும்மா திரியிறான். இஞ்ச தென்கொரியாவுக்கு ஆக்களெடுக்கினம் அதுக்குக் காசு கட்டிப்போட்டு நிக்கிறான்.*

*எவ்வளவு பேர எடுக்கினம்.*

*மாவட்டத்துக்கு பதினைந்து பேராம் வவுனியாவால நிறையப் பொடியள் காசு கட்டியிருக்கினம்-ஓராளுக்கு அறுவத்தையாயிரமாம்.*

*சூ சம்பளம் என்னவாம்.*

*ஒரு லச்சத்துக்கும் கூடவாம் முதல் மூண்டு மாசச் சம்பளம் குடுக்கமாட்டினமாம். அது பயணச் செலவு.*

*அ...சிங்களப்பகுதியில இலவசப் பயணமெண்டு போட்டிருக்கே- தமிழருக்குக் காசாமோ.*

*அவன் அரசாங்கம் நாங்களின்னம் அகதியள் தானே.*

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-83



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்-83

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
..............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -82



**க.வாணி,**
**கிராம அலுவலகம்,**
**கோணாவில்.**

### பரிசுக்குரிய வரிகள்

*ஏரியிலே அள்ளியெடுக்கின்ற சேறினிலே*
*பிடிக்கப்படுகின்ற இறாலினிலே*
*கிடைக்கப் பெறுகின்ற நுறினிலே*
*தங்கியிருக்கிறது இவர்களது சோறு.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*உடல் வருந்தி உழைக்கும் எம்மவருக்கு*
*கடல் வலயத் தடைபோட்டுத்தடுத்தது முறையோ?*
*குளத்தில் வலை போட்டு உரிமையோடு எந்நாளும்*
*உழைத்து வாழ்வோம். உயர்வைக்காண் போம். இது உண்மை.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*மதங் கொண்ட சிங்கள அரசே - உனது*
*வெறி கொண்ட பொருளாதார தடையால்*
*ஒடுக்கிடலாம் என்றா நினைத்தாய் தமிழரை*
*முடியாது, எம்மிடம் உள்ளது அன்னை மண் தந்த நீர்வளம்.*

சு.சுகநீதன்,
ஸ்கந்தபுரம்.

*இன வெறி பிடித்த சிங்கள அரசே! நீ*
*திட்டமிட்டு செய்த சதியில் துன்புற்று வாடும்*
*தமிழினத்தின் தன்மான உணர்வுகள் எப்படியும்*
*வாழ்வோம் என்பதை உனக்கு உணர்த்தவில்லையா?*

ச.மேனகா,
கிளிநொச்சி.

*ஆழக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற துணைவான்*
*உயிரை, கொடிய சிங்களம் பறித்ததால்*
*குழந்தைகளின் வயிற்றுப் பசி போக்க*
*வளையல் போட்ட கை வலையை பிடித்ததோ.*

வி.அன்புமொழி,
புதுக்குடியிருப்பு.

*ஆழ்கடல் மீன்பிடிக்க அரசினது தடை*
*எம் கடலின் மீனினைக் கொள்ளையிடும் அயல்நாடு*
*எம் கடல் எமக்காகும் காலம் வரை*
*கப்பித்தண்ணீரில் நண்டு பிடித்தல் நமக்கானது.*

கா.ஓவியன்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

8ஆம் அகவையில் கால் பதிக்கும்

# டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை

## புதுக்குடியிருப்பு

### வளர்ந்து வந்த பாதையில் எண்ணற்ற சேவைகள் சாதனைகள்

- அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் உதவி
  மருத்துவர்களினால் வழங்கப்பட்டு வரும் 24 மணிநேர குளிரூட்டப்பட்ட வெளிநோயாளர் பகுதி.
- பிரத்தியேகமான படுக்கைகளைக் கொண்ட உள்நோயாளர் சிகிச்சைப் பகுதி.
- சகல வசதிகளையும் கொண்ட இரு சத்திரசிகிச்சைக் கூடங்கள்
- அண்மைக்கால கண்டு பிடிப்புக்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய மருந்துகளையும் கொண்ட மருந்தகம்.
- நவீன மருத்துவ உலகின் வளர்ச்சிக்கு ஏற்ற புதிய கருவிகளைக் கொண்ட மருத்துவ ஆய்வுகூடம்
- மிக நவீன வசதிகளைக் கொண்ட பற்சிகிச்சைப் பகுதி
- குடல் நோய்களை கண்டறியும் நவீன படப்பிடிப்புக் கருவி (எண்ரோஸ்கோப்)
- நிழலுருப் பிரிவு (ஸ்கானிங்)
- எக்ஸ் கதிர் பிரிவு (எக்ஸ்ரே)
- மாதந்தோறும் யாழ் பொது மருத்துவமனையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வருகை தரும் நிபுணர்களைக்கொண்டு வழங்கப்படும் இலவச அல்லது பகுதிக்கட்டண மருத்துவ சத்திரசிகிச்சை முகாம்கள்.

(இதுவரை இவ்வாறான 50 இற்கும் மேற்பட்ட சிகிச்சை முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதில் பயனடைந்த மக்கள் பல்லாயிரம்.)

7ஆவது அகவையினை நிறைவு செய்யும் எமது மருத்துவமனையின் சேவைகள் விரிவடைந்து அனைத்து மக்களும் பயன்பெற வாழ்த்தி நிற்கும்

பணிப்பாளர்,
மருத்துவர்கள்,
பணியாளர்கள்.

## 7ம் ஆண்டு நினைவில்



தோற்றம் 15-12-1973

**கப்டன் கோகிலா**

வீரச்சாவு 26-08-1997

இராஜேந்திரம் மைதிலி

சுன்னாகம் தெற்கு, யாழ்ப்பாணம்.

(வரைபடப்பிரிவு, மாலதி படையணி)

என்றும் நீங்காத
குடும்பத்தினர்.

(4683)

## அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்

யாழ் நகரில்...

நவீன வசதிகளுடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்

# மிலேனியம்

மிலேனியம் Millennium Guest House



உல்லாசப்பயணிகள் விடுதி உங்களை அழைக்கின்றது.

உங்கள் தொடர்புகளுக்கு:
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
78/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 2810

(சி-10130)

## FedEx Express®

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

E.mail :- thirumuruglan@lycosmail.com

## திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

## WESTERN UNION®

பணப் பரிமாற்றம்

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–11 | 27 –08–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –191




# கண்காணிப்புக் குழுவின் நடுநிலையில் தற்பொழுது தளம்பல் ஏற்பட்டு விட்டதா?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

**இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் மத்தியஸ்த நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி அரசாங்கத்திடம் எழுந்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்களசமரவீர கூறியுள்ளார்.**

கண்காணிப்புக் குழுவினர் பக்கச்சார்பற்ற முறையில் நடந்து கொண்டாலும் இதனைவிட கூடியளவு மத்தியஸ்தம் வகிக்க முடியும் எனவும் மங்கள சமரவீர மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை கிழக்கு மற்றும் கொழும்பில் நடைபெறும் கொலைகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இவ்வாறான படுகொலைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடுமையாக மீறுவதுடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும் மீறும் நடவடிக்கைகள் என அரசாங்கம் நம்புகின்றது. இது ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் வெளியிட்ட அறிக்கை மூலம் தெளிவாகின்றது என்றார்.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உள் விவகாரங்களில் அரசாங்கம் தலையிடமாட்டாது

### - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கிடையேயுள்ள உள்ளகப் போராட்டங்களையும், பிரச்சினைகளையும் அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டுமென பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களின் உள்ளக விவகாரங்களில் அரசாங்கமோ, பாதுகாப்புப் படையினரோ தலையிடமாட்டார்கள். எனவே புலிகளுக்கும், கருணா குழுவினருக்குமிடையே நடந்து வருகின்ற கொலைகளுக்கும், வன்செயல்களுக்கும் அரசாங்கம் அல்லது பாதுகாப்புப் படைகள் பொறுப்பேற்க வேண்டுமென

(IV ஆம் பக்கம் பார்க்க)

## "போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டை இரண்டாக்கியுள்ளது"

### அமைச்சரின் கூற்றை நிராகரிக்கிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தினால் நாடு இரண்டாகப் பிரிந்துள்ளதென்ற அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரின் அறிக்கையை கடுமையாக நிராகரிப்பதாக ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது மாளிகையைவிட்டு வெளியே சென்று வாக்களிக்க முடியாதிருந்த சனாதிபதி கூட சுதந்திரமாக [illegible]யில் பயணம் செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்தியது போர் நிறுத்த ஒப்பந்தமே என ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### - நிமலராஜனைப் படுகொலை செய்த -

## நெப்போலியனை நாடுகடத்துமாறு பிரித்தானிய அரசிடம் கோரிக்கை

ஊடகவியலாளர் நிமலராஜனை படுகொலை செய்த குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் நெப்போலியன் அல்லது பூபாலன்ராஜ் என்றழைக்கப்படும் செபஸ்தியான் ரமேஷ் பிரித்தானியாவில் அரசியல் அடைக்கலம் கோரியிருக்கும் விடயம் பிரித்தானிய உள்துறை அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

லண்டன் ஐ.பி.சி தமிழ் வானொலி உட்பட அனைத்துலக ஊடகங்களின் செய்தியாளராகப் பணிபுரிந்த நிமலராஜனைப் படுகொலை செய்ததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ ஆகியோரைத் தாக்கியதாகவும் நெப்போலியன் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக

(IV ஆம் பக்கம் பார்க்க)

### -இ.த.அ.சபைக்கெதிராக-

## வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கு பரப்புரை செய்ய ஹெ.உறுமய முடிவு

வெளிநாட்டுத் தூதரகங்களின் அதிகாரிகளை நேரடியாகத் தனியாகச் சந்தித்து, தற்போதைய தங்கள் கட்சியின் நிலைப்பாடு குறித்தும், இடைக்கால தன்னாட்சி அலகை ஏன் ஏற்கமுடியாது என்பது குறித்தும், விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்கு ஆதரவு தரும்படியும் விளக்கம் கொடுக்கவுள்ளதாக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டின் யுத்தநிறுத்த உடன்படிக்கை, இடைக்கால தன்னாட்சி அதிகார அலகு, நோர்வேயின் சமரசம், நாட்டில் இடம்பெறும் கொலைகள் உட்பட மதமாற்றத் தடைச் சட்டம் குறித்தும் இச்சந்திப்புக்களில் விளக்கமளிக்கத் தாம் முடிவு செய்துள்ளதாகவும், வெளிநாட்டுத் தூதுவர்களைத் தனித்தனியாகச் சந்தித்தே இவ்விளக்கத்தை வழங்கவுள்ளதாகவும் ஹெல உறுமயப் பேச்சாளர் வண.எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

## போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து தே.அ.அட்டைபெற முயன்ற பெண் கைது

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டை பெற முயன்ற தமிழ் யுவதியொருவர் சிறிலங்காப் பொலிசாரினால் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த 19 வயதான ரட்ணம் சிவமாச்சி என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

சவூதி அரேபியாவுக்குச் செல்வதற்கு கடவுச் சீட்டைப் பெறவேண்டிய நிலையில், போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து இவர் அடையாள அட்டையைப் பெறமுயன்றதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

இப்போலி ஆவணங்களைப் பெறுவதற்காக 3,000 ரூபாவை இலஞ்சத் தொகையாக வழங்கியதையும் இப்பெண் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

## படையினரின் பயிற்சி நடவடிக்கை வவுனியா முகாம்களில் தீவிரம்

### – வெடிச்சத்தங்களால் மக்கள் பதட்டம்

வவுனியாவில் சிறிலங்காப் படையினரின் பயிற்சி நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் ஈரப் பெரியகுளம் படை முகாமில் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து பாரிய தொடர் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தால் வவுனியா நகர் பாரியளவில் பதட்டமடைந்து காணப்பட்டதாகவும், வவுனியாவிலிருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். இதே போன்று வவுனியாவின் ஓமந்தை, நொச்சிக்குளம், கணேசபுரம், பிரமநாதகுளம் உள்ளிட்ட பகுதிகளிலும் சிறிலங்காப் படையினர் தீவிர பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டத்தொடர் கொழும்பில்

இந்தியக் கடற்பிராந்திய நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டு அமைச்சின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தியக் கடற்பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஏற்றுமதி இறக்குமதி மற்றும் முதலீடு குறித்து கலந்துரையாடுவதற்காகவே இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியா, பங்களாதேஸ், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், கென்யா, மடகஸ்கார், மலேசியா, மொரிசியஸ், மொசாம்பிக், ஓமான், செயிலிஸ், சிங்கப்பூர், இலங்கை, தன்சானியா,

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களின் விலைகள் அதிகரிப்பு அரசு மீது ஐ.தே.க.குற்றச் சாட்டு

தாம் ஆட்சியில் இருந்த காலத்தை விட தற்சமயம் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இவை மக்கள் மீது அதிக வாழ்க்கைச் செலவுப்பழுவை சுமத்தியுள்ளன என ஐக்கியதேசியக் கட்சியின் உப செயலர். திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். எவ்வித அனுபவங்களும் இல்லாத அரசாங்கத்தின் பங்காளியாக ஜே.வி.பியினர் செயற்பட்டு வருவதால், நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாட்டில் இரண்டு நிர்வாகங்கள் இருப்பதாகத் தெரிவித்தமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் தெரிவித்தார். நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண, சமாதானத்தை விரைவில் முன்கொண்டு செல்லுமாறு உலக வங்கி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகக கூறினார். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன் கொணரா விட்டால் இலங்கைக்கு நிதியுதவி எவையும் வழங்கப்பட மாட்டாது என்ற அறிவுறுத்தலை அது விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சடலம் ஒன்று கரை ஒதுங்கியது

மன்னார்-பேசாலையில் ஓலைதொடுவாய்ப்பகுதியில் ஒரு பழுதடைந்த சடலம் கரை ஒதுங்கிக் கிடக்கக் காணப்பட்டது. இச்சடலத்தை மன்னார் நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா முன்னிலை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

(செட்டிகுளம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த இரண்டு சிறுவர்களை வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த நிகழ்வு புதன்கிழமை வவுனியா மாவட்ட அரசியல்துறை காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் யுனிசெப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேலால் சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## வரிவிளம்பரம்

### ஆதவன் கல்வி நிலையம்

G.C.E.A/L பரீட்சை எழுதிய வர்த்தகப்பிரிவு மாணவர்களிற்கான விசேட மீட்டல் வினா விடை வகுப்புக்கள் 28.08.2004 சனி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. வழமையான ஆசிரியர் குழு. நிர்வாகி. (4994)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி,லெமனேட் டிங் போன்றவைகளை உடனுக்குடன்செய்து கொள்ளவும்:- பிள்ளையார் பொத்தகசாலை,கண்டிவீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எம்மிடம் புறொயிலர் இறைச்சிக கோழி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுடர் கோழி வளர்ப்பகம், புலிகளின் குரல் நடுவப்பணியகம் முன் ஒழுங்கை, விவேகானந்தநகர், கிளிநொச்சி. (4996)

---

COMITE INTERNATIONAL GENEVE

## தொடர்பு கொள்ளவும்

**கீழே பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.**

**(புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார்)**

லோகநாதன் சியாமளாதேவி, செல்வபுரம்,முல்லைத்தீவு.
அருந்ததி, இல. 1646, D குடிப், மடு.
செல்லத்துரை திரேசம்மா, 31 A, திருநகர், கிளிநொச்சி.
மகாலிங்கம் வசந்தி, E 43,ORSC, தட்சணாமருதமடு.
மகாலிங்கம் ஸ்ரீபாலறோகினி, இல. 105, புதிய புன்னைநீராவியடி, விசுவமடு.
சிதம்பரப்பிள்ளை சிவாஜினி, மே/பா தர்மலிங்கம், கோரக்கன்கட்டு, முரசுமோட்டை
சின்னத்தம்பி சின்னப்பிள்ளை, நாகதம்பிரான் ஆலயம் அருகில்,அரசர்கேணி, பளை
கணபதிப்பிள்ளை நடனசிகாமணி K.P சாத்திரியார், இரணைப்பாலை ,புதுக்குடியிருப்பு.
மனோகரன் சுவேந்தினி ,மே/பா K.P சாத்திரியார்,இரணைப்பாலை ,புதுக்குடியிருப்பு.
சிவகுமார் செல்வநிதி, புனித அந்தோனியார் ஆலயம் அருகில், கலைவந்தான்கேணி,ஸ்கந்தபுரம்.
இராமசாமி நகுலேஸ்வரன், இல. 39,ஐயனார் கோயிலடி, வன்னேரிக்குளம்.
சுப்பிரமணியம் பரமேஸ்வரி, அம்பலப்பெருமாள், அக்கராயன்.
புவனேஸ்வரி, கண்ணகிபுரம் அம்மன் கோயிலடி, ஸ்கந்தபுரம் (பாலர் பாடசாலை அருகில்)
மகாலிங்கம் கனகம்மா, அம்பலப்பெருமாள் சந்தி, அக்கராயன்.
செல்வநாயகம் உதயராஜ், யூனியன்குளம், கோணாவில்.
றெங்கன் இராஜலிங்கம், பிள்ளையார் கோயில்சந்தி, கோணாவில் வீதி, அக்கராயன்.
இராஜலிங்கம் தனலட்சுமி, பிள்ளையார்கோயில் சந்தி, கோணாவில் வீதி, அக்கராயன்.
தியாகராஜா ,4ஆம் கட்டையடி, வில்சன் வீதி, இரணைமடு.
தில்லைநாகேஸ்வரி, ரகு குடியேற்றத் திட்டம், சுதந்திரபுரம், உடையார்கட்டு.
நமசிவாயம், மகாதேவா ஆச்சிரமம், புதுமுறிப்பு, கிளிநொச்சி.
சத்தியபாமா, பிள்ளையார் கோயில் சந்தி, கரும்புத்தோட்டம் , ஸ்கந்தபுரம்.
சண்முகம், கோணாவில் பாடசாலை அருகில்,அக்கராயன்.
கந்தையா நடராஜா, பழையபொலிஸ் நிலையவீதி, துரை கடையடி, அக்கராயன்.
யோகேஸ்வரன் துஸ்மிதா, D-100,ORSC, தட்சணாமடு.

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,**
**மல்லாவி.**

(4999)

---

## பூநகரி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## கிளைப் பொதுச்சபைக்கூட்டமும் கிளைக்குழுத் தெரிவும்.

## 31.08.2004

மேற்படி சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டமும், கிளைக்குழுத் தெரிவும் , பொதுச்சபைப் பிரதிநிதிகள் தெரிவும் எதிர்வரும் 31.08.2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கீழ்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன. எனவே வாக்களிக்கத் தகுதியுள்ள கிளை உறுப்பினர்கள் கீழ்வரும் இடங்களில் மேற்படி திகதியில் உரிய நேரத்திற்குச் சமுகம்கொடுத்து தங்கள் கிளைக் குழுவையும், சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகளையும் தெரிவுசெய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| கிளை இல | கிளைப் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 40A<br>40B | மட்டுவில்நாடு<br>பள்ளிக்குடா | திரு.க.சின்னராசா | மட்டுவில்நாடு மேற்கு முன்பள்ளி |
| 41B<br>41C<br>41D | நல்லூர்<br>முட்கொம்பன்<br>செல்விபுரம் | திரு.சி.பாலசுந்தரம் | கந்தன் முன்பள்ளி ஆலங்கேணி |
| 43A | பல்லவராயன்-கட்டு | திரு.த.வித்தககவாதிதி | பல்லவன் முன்பள்ளி |
| 43D | ஆவரசம்குன்று | திரு.ந.நாவேந்தன் | குமுழமுனை,பொது நோக்கு மண்டபம் |
| 44A<br>49A | கிராஞ்சி<br>வலைப்பாடு | திரு.பா.சிறிகுமார் | கிராஞ்சி,பொது நோக்கு மண்டபம் |
| 44B | கிராஞ்சி | திரு.இ.விஜயகுமார் | கிளி.கிராஞ்சி, அ.த.க.பாடசாலை மண்டபம் |
| 48A<br>48B<br>48C | தம்பிராய்<br>செம்மன்குன்று<br>காவாக்குளம் | திரு.கோ.கிருஸ்ணகுமார் | தம்பிராய், பொது நோக்கு மண்டபம். |

**தி.இராசகுமார்,**
**செயலாளர்,**
**பூநகரி ப.தெ.வ.கூ.சங்கம்**

(சி-10202)

---

## பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**1.பணிநிலை :- கணக்கு எழுதுனர்**
★ தகைமை :- க.பொ.த.உயர்தரத்தில் வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3300\sim4300}{10X100} + 2000$

**2.பணிநிலை :- விலை மதிப்பீட்டாளர் - (புடைவை, இலத்திரனியல், ஊர்தி உதிரிகள்) (ஒப்பந்த அடிப்படையில்)**
★ தகைமை :- 01. ஆண்டு-08
02. குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு.
★ சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**3.பணிநிலை :- ஆய அலுவலர் (ஆண்கள்)**
★ தகைமை :- க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3630\sim4730}{10X110} + 2000$

**4.பணிநிலை :- ஆய உதவியாளர் (ஆண்கள்)**
★ தகைமை :- க.பொ.த சாதாரணதரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3080\sim4180}{10X110} + 2000$

**5.பணிநிலை :- அலுவலக உதவியாளர்**
★ தகைமை :- ஆண்டு - 8
★ சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**6.பணிநிலை :- சமையலாளர்**
★ தகைமை :- குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{4210\sim5410}{10X120} + 2000$

**7.பணிநிலை :- சமையல் உதவியாளர்**
★ தகைமை :- குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{2830\sim3930}{10X110} + 2000$

தகுதியுடையவர்கள் 2004.09.07 ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன்வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

மனிதவள மேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-10099)

# படையினரின் சேஷ்டை குறித்து கெற்பெலி மக்கள் புலிகளிடம் முறைப்பாடு

(தென்மராட்சி)

கெற்பெலி பகுதியில் கடற்கரைக்கு அண்மையாக உள்ள மக்கள் குடியிருக்கும் வீடுகளில் உள்ள பெண்களிடம் சிறிலங்காப் படையினர் சேட்டைவிட எடுத்த முயற்சிகள் அப்பகுதி மக்கள் விழித்துக் கொண்டதால் தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தினங்களாக மூன்று வீடுகளில் இச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில், படைமுகாம்கள் மக்கள் குடியிருப்பை சூழ்ந்திருக்கின்றன. இரவுவேளைகளில் படையினர் சிவில் உடையில் மறைந்திருந்து இயற்கை உபாதைகளுக்காய் வெளியில் வரும் பெண்களிடம் சேட்டைகள் புரிவதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா இராணுவத்தின் இச் செயற்பாடுகள் குறித்து அச்சமடைந்துள்ள மக்கள் கொடிகாமம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரிடம் முறையிட்டுள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்களைச் சூழ படைமுகாம்கள் இருப்பதால் மக்களுக்கு ஆபத்து இருப்பதாகவும் இப்படைமுகாம்களில் உள்ள படையினரின் செயற்பாடுகள் மக்களின் மனிதஉரிமைகளை மீறுவதாக அமைந்துள்ள தாகவும் இப் படைமுகாம்களை அகற்றி மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு வழிஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் மக்கள் தமது முறைப்பாட்டில் கேட்டுக்கொண்டுள்ளனர். (28)

# அலரிமாளிகைப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் கருதப்படும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வாசஸ்தலமாகிய அலரி மாளிகைப்பகுதியில் ஒன்பது மி.மீற்றர் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் நான்கு ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் அலுவலக செய்திக்குறிப்புத் தெரிவித்துள்ளது.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் இதனைக் கைப்பற்றியுள்ளனர். இதனுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 2004ஆம் ஆண்டிற்கான தினக்குறிப்பும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


## சிறுநீரகம் தேவை

அவசர சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக காத்திருக்கும் ஒருவருக்கு B(–) (பீ நெக்கட்டிவ்) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை

தொடர்புகொள்ள
T.த.தவராசா,
C/oதம்பையா நாகம்மா,
பத்தைமேனி,
அச்சுவேலி.
T.P.077 6232019

(5007)


# புலிகளுடன் பேச்சு நடத்தும் அவசியம் ஜே.வி.பி.க்கு தற்போது உள்ளது

## -மல்வத்த மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற வகையில் ஜே.வி.பி. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளதாக மல்வத்த மகாநாயக்கர் திக்கெட்டுவேகம ஸ்ரீசுமங்கல தேரர் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கும் மல்வத்த மகாநாயக்கர்களுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே மகாநாயக்கர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் இது தொடர்பாகக கருத்துக் கூறுகையில், வெளிநாடு களிலிருந்து இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்க்கவெனப் பிரதிநிதிகள் வரும்போது இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் தம்மால் பார்வையாளராக இருக்க முடியாது எனவும் கூறியுள்ளார். (32)

# மிதிவெடியில் சிக்கியவருக்கு இரு பாதங்களிலும் படுகாயம்

(பளை)

பளை சோரன்பற்றில் மிதிவெடியில் சிக்கியவர் இரு பாதங்களிலும் படுகாயமடைந் துள்ளார்.

பளை சோரன் பற்றைச் சேர்ந்த புண்ணியம் அம்பலவாணர் (வயது50) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் முதலில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் பளைப்பகுதியில் சிறிலங்காப்படைகளினால் வைக்கப்பட்ட வெடிபொருட்களில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் சிக்கி வருவது தெரிந்ததே. (28)


## வலைஞர் மடம் செபமாலை அன்னை திருவிழா

அன்னையின் திருவிழாவை முன்னிட்டு தமிழீழ போக்குவரவுக் கழகத்தினால் யாத்திரிகளுக்காகப் பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நேர ஒழுங்கு

28.08.2004, 29.08.2004 ஆம் நாள் காலை
புதுக்குடியிருப்பு - வலைஞர் மடம்
06.00 06.45

28.08.2004 ஆம் நாள் பகல்
நாயாறு - புதுக்குடியிருப்பு - வலைஞர் மடம்
01.00 03.20 04.00

29.08.2004ஆம் நாள் மாலை வலைஞர் மடத்திலிருந்து புதுக்குடியிருப்பு வரைநடைபெறும்.

(5008)

தமிழீழ போக்குவரவுக்கழகம்.



## பொருண்மிய மதியுரையகத்தின் வேலை வாய்ப்பு வங்கி

பின்வரும் பயிற்சி நெறிகளை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

* Masonary :- மேசன் பயிற்சி
* Carentry :- தச்சு வேலைப் பயிற்சி
* Electrical House wiring :- வீட்டுமின்னிணைப்பு
* National Certificat In English :- ஆங்கிலத்திற்கான தேசிய சான்றிதழ்

ஆகிய துறைகளில் பயிற்சி பெற்ற உங்களுக்கான வேலைகளை வழங்க நாம் தயாராகவுள்ளோம். உங்களுக்கான சம்பளம் திறமைக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும். விரும்பியவர்கள் கீழ்வரும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
பொருண்மிய மதியுரையகம்,
A- 9 வீதி,
இரணைமடுச்சந்தி,
கிளிநொச்சி.

(4997)



## வடகிழக்கு கட்டுமான தொழில்நுட்ப நிறுவனம்

## பணிநிலை வேண்டுகை

**01. கணிய வரையுனர் (Quantity Surveyer) தரம் III (ஆண்/பெண்)**

கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் கணிய வரையுனர் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அகவை : 22-45 வருடங்கள்

சம்பளம் : $\frac{5060-6250}{10X120}+2200$

**02. கணிய வரையுனர் (Quantity Surveyor) பயிலுனர் (பெண்)**

கல்வித் தகைமை : க.பொ.த.(உ/த) கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அகவை : 20-30 வருடங்கள்

சம்பளம் : $\frac{4000-5100}{10X110}+2200$

**03. வெளிக்கள வேலை மேற்பார்வையாளர் (ஆண்) தரம் III**

கல்வித் தகைமை : க.பொ.த.(ச/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அகவை : 22-45 வருடங்கள்

சம்பளம் : $\frac{3800-6300}{20X120}+2200$

**04. கணக்குப் பதிவாளர் (பெண்) தரம் III**

கல்வித் தகைமை : க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அகவை : 20-30 வருடங்கள்

சம்பளம் : $\frac{4000-5100}{10X110}+2200$

குறிப்பு:

01) தகுதிகாண் நிலை 03 மாதமாகக் கணிக்கப்படும்.
02) தொடர்ந்து வெளிக்கள வேலை செய்பவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
03) நேர்முகத் தேர்வுக்குவரும் பொழுது சுயவிபரக் கோவையுடன் சான்றிதழ்களும் அவற்றின் பிரதிகளும் கொண்டுவரவும்.
04) நேர்முகத் தேர்வு 01-09-2004 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்.

வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
North east Construction and Technical Organization (Nectec)
கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி (கிளி/மத்திய கல்லூரிக்கு அருகாமையில்)
T.P. No;021 2285917

(சி-10098)



## கால்நடை இயல விற்பனை

கீழ்க் குறிப்பிடப்படும் கால்நடைகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பரந்தன் பிரதேச செயலகத்தில் கட்டாக்காலியாகப் பிடிபட்டுள்ளது. இக்கால்நடைகள் எதிர் வரும் 29.08.2004 ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு குறித்த பிரதேச செயலகத்தில் பகிரங்கமாக இயலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

| இல | இனம் | குறி | நிறம் |
|---|---|---|---|
| 01 | நாம்பன் | எம்.எஸ் | கறுப்பு |
| 02 | பசு | எஸ்.ஏ | சிவப்பு |
| 03 | பசு | ஆர்.கே | வெள்ளை |
| 04 | பசு | என்.எஸ் | கறுப்பு |
| 05 | பசு | எம்.கே | கறுப்பு |
| 06 | கன்று | இல்லை | சிவப்பு |

பிரதேச செயலகம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
பரந்தன்.

(5006)

# வட்டக்கச்சி மாதிரிப் பண்ணையில் மாபெரும் விவசாயக் கண்காட்சி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாதிரிப் பண்ணையில் மாபெரும் விவசாயக் கண்காட்சி எதிர்வரும் 01.09.2004 தொடக்கம் 04.09.2004 வரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம் பல்கலைக் கழக விவசாயபீடம், கால்நடை உற்பத்தி திணைக்களம் என்பனவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

விவசாயம் தொடர்பாகவும் அதன் நோய்த் தாக்கம் பற்றியும் தொழில் நுட்ப அறிவைப் பெருக்குவதை நோக்காகக்கொண்டு இந்த மாபெரும் கண்காட்சி அமையவுள்ளது.

இந்தக் கண்காட்சியானது வன்னி பெருநிலப்பரப்பெங்கும் உள்ள மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும், விலங்குகளுக்கு ஏற்படும் நோய்கள் அவற்றின் உணவு வகைகள் பராமரிப்பு முறைகள் பற்றிய அறிவை வளர்க்கக் கூடியதாகவும், பயிர்கள் மேடையில் இடுவது தொடக்கம் அறுவடை வரையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடியதாகவும் அமையவுள்ளது. மேலும் பொதுமக்கள் விவசாயம் தொடர்பாகத் தமக்கிடையே ஏற்படும் சந்தேகங்கங்கள் பிரச்சினைகள் போன்றவற்றில் இருந்து விடுபட்டு விவசாயம் பற்றிய பூரண அறிவைப் பெற்றுக்கொள்ளவும் இக் கண்காட்சி வழிசமைக்கும். (12)

# எதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 25 | 29 | 23 | 77 |
| ரஷ்யா | 15 | 19 | 22 | 56 |
| சீனா | 24 | 16 | 12 | 52 |
| அவுஸ்திரேலியா | 16 | 11 | 15 | 42 |
| ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| ஜேர்மனி | 09 | 11 | 13 | 33 |
| பிரான்ஸ் | 10 | 07 | 09 | 26 |
| பிரிட்டன் | 07 | 08 | 10 | 25 |
| இத்தாலி | 09 | 06 | 08 | 23 |
| தென்கொரியா | 07 | 10 | 05 | 22 |
| உக்ரேன் | 08 | 04 | 07 | 19 |
| நெலர்லாந்து | 04 | 07 | 08 | 19 |
| ருமேனியா | 08 | 05 | 04 | 17 |
| ஸ்பெயின் | 02 | 09 | 04 | 15 |
| கிரீஸ் | 06 | 04 | 03 | 13 |
| கியூபா | 02 | 04 | 07 | 13 |
| பெலாரஸ் | 02 | 03 | 07 | 12 |
| ஹங்கேரி | 04 | 06 | 01 | 11 |
| பல்கேரியா | 02 | 01 | 07 | 10 |
| போலந்து | 02 | 02 | 04 | 08 |
| செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |

# வட்டக்கச்சி-கறுப்பிக்குளத்தில் முதலை கடித்து ஒருவர் காயம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கறுப்பிக் குளத்தில் குளிக்கச் சென்றவர் முதலையால் கடியுண்டு காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சண்முகம் (வயது-55) என்பவரே முதலையால் கடியுண்டு காயமடைந்தவராவார்.

இவர்குளத்தில் குளித்துக் கொண்டிருக்கையில் கையில் முதலை கடித்து ஆழத்திற்கு இழுத்ததாகவும், எனினும் தான் அதனை இழுத்துக் கொண்டு கரையேறியவேளை அது விட்டுவிட்டு நீருக்குள் ஓடிவிட்டதாகவும் காயமடைந்த நபர் தெரிவிக்கின்றார். (12)

# தென்மராட்சியில் மாதாந்தம் நூறு வீதி விபத்துக்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் அதிகளவு வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகத் தெரியவருகிறது, கடந்த மூன்று மாதங்களில் கிடைக்கப்பெற்ற மருத்துவமனை புள்ளி விபரங்களின் படி மாதம் ஒன்றுக்கு நூறுக்கும் அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அதிகளவில் உந்துருளிகளே விபத்துக்குள்ளவதாகவும் இதனால் சிலர் உயிரிழந்திருப்பதாகவும் பலர் படுகாயமடைந்திருப்பதாகவும் , சிலர் இவ் விபத்தினால் கை, கால் முறிந்து அங்கவீனமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதில் உள்ள முக்கிய விடயம் என்னவெனில், இவ் விபத்துக்களில் பாதிக்கப்பட்ட எண்பது சதவீதமானோர் முறையாகத் தேர்ச்சி பெறாதவர்கள் அல்லதுவாகன அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் என்பதாகும். இதனால் இவர்கள் பாதிப்படைவதுடன், மற்றவர்களையும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவும், தெரிவிக்கப்படுகிறது. எனவே வாகன ஓட்டிகள் அவதானத்துடனும் கட்டுப்பாடுள்ள வேகத்துடனும் வாகனங்களைச் செலுத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (28)

# யாழ்.வர்த்தகக் கண்கர்ட்சி இன்று ஆரம்பமாகின்றது

யாழ் நகரில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி இன்று யாழ். மத்தியகல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. மூன்று தினங்கள் நடைபெறும் இக்கண்காட்சி தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 8.00 மணிவரை நடைபெறவுள்ளது. 50இற்கு மேற்பட்ட காட்சியறைகள் இக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, வணிக ஒன்றியத் தலைவர் சொ.வெற்றியரசன், யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் சி. நடராசலிங்கம், மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர், யாழ். ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் தி.ஜெயராசசிங்கம், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர். ச.ரவீந்திரா, யாழ் செலான் வங்கி முகாமையாளர் கு.கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நாற்பது குடும்பங்களுக்கு கடற்புலிகள் கிடுகு வழங்கினர்

24.08.2004 அன்று பரமன்கிராய் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நாற்பது குடும்பங்களுக்கு கடற்புலிகளின் தலைமையில் கிடுகுகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பி.டி.ஆர்.ஓ.இணைப்பாளர் கிருபன், க.பூநகரி பிரதேசப் பொறுப்பாளர் அமுதன், பரமன்கிராய் கிராம சேவையாளர் காந்தி, பரமன் கிராய் கிராமத்தலைவர் சி.நவரத்தினம், எழுச்சிப்பேரவை பரமன் கிராய்செயலாளர் நவரத்தினம். ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தனியார் பேருந்து உரிமையாளர் அரசிற்குக் காலக்கெடு விதிப்பு

(கொழும்பு)

தமது கோரிக்கைக்கு மூன்று நாட்களுக்குள் உரிய பதில் அளிக்கப்படாவிட்டால் நாளை மறுதினம் 29ஆம் திகதி நள்ளிரவு முதல் நாடு தழுவிய பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாகத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று பிரதமருக்கும், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பிரதமரிடம் இருந்து உரிய பதிலைத் தெளிவாகப் பெறும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனுவியவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்கையில்; பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டுமானால் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அதற்குத் தகுந்த சேவைகளை வழங்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

## தற்காலிகத் தடை

கிளிநொச்சி நகர மின் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு ஜெனரேட்டர்களும் திருத்தம் செய்யப்படவுள்ளதால் எதிர்வரும் 2004.08.28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 01.00 மணி வரை மின் விநியோகம் தடைப்படுமென மின்சாரசபை வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

## படகு அன்பளிப்பு

தீவக மக்களின் நலன்கருதி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் நோயாளர் படகு ஒன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது என பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இன்று 27.08.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஊர்காவற்றுறை இறங்கு துறையில் மேற்படி படகினை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகப் பிரதிநிதி கையளிக்கவுள்ளார். என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளு. குழுவிற்கு புதிய தலைவர்?

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தனது பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

அக்கட்சியின் தற்போதைய தலைவராக வண. அத்துரலிய ரத்தினதேரர் பதவிவகித்து வருகின்றார். இவர் அண்மையில் மேற்கொண்ட சில முடிவுகளினால் கட்சியின் உயர்பீட பௌத்த சங்கத்தினர் சிலர் விசனமடைந்துள்ள நிலையிலேயே பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியில் மாற்றம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. புதிய தலைவராக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் வண. எல்லாவெல மேதானந்த தேரர் நியமிக்கப்படக்கூடும் என நம்பப்படுவதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சடலம்...

யில் பொலிசார் எடுத்து பதிவுகளை மேற்கொண்ட பின்னர், மேலதிக விசாரணைக்காக பிரேதப் பரிசோதனை நிபுணர்களிடம் கையளித்துள்ளனர்.மிகவும் கடுமையான அலைகளுள்ள தலைமன்னார்க் கடலினூடாக தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் தப்பிவரும் அகதிகளில் ஒருவரின் சடலமாக இது இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளில், தாங்களாக விரும்பி நாடுதிரும்ப முயற்சிக்கும் அகதிகளை உத்தியோகபூர்வமாகப் பாதுகாப்புடன் திருப்பியனுப்ப வழிசெய்யுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும், விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசைப் பலதடவைகள் கேட்டுக் கொண்டபோதும், இதுவரை அரசு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்புக்...

பதற்கான அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இருக்கும் நம்பகத் தன்மையை வாய்மூல வார்த்தைகளால் மாத்திரமன்றிச் செயற்பாட்டின் மூலமும் காண்பிக்க வேண்டும் எனவும்,

படுகொலைகள் நடைபெறுவது சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், இவ்வறான நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும் எனவும் கூறிய அவர்,

இது அரசாங்கத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் பொறுமையைச் சோதிக்கும் நடவடிக்கைகளாகும் எனவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளும் நோர்வேயின் மத்தியஸ்தமும் ஒருபக்கத்தைச் சார்ந்தில்லாமல் இருக்குமானால் அது தற்போதைய நிலையில் பெரிதும் விரும்பத்தக்கது எனவும்,அரசு தாம் வழங்கிய பெரும்பாலான உறுதிமொழிகளை நிறைவேற்றியுள்ளது எனவும் இதுதொடர்பில் தாம் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸிடம் சவால் விடுவதாகவும் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

## புலிகள்...

புலிகள் குற்றம்சாட்டக் கூடாதென அவர் மேலும் தெரிவித்துள்ளதுடன்

இவ் வன்செயல்களுக்கு எந்த விதத்திலும் அரசாங்கப் படைகள் சம்பந்தப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளார். ஆயினும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் கொலைகளும், வன்செயல்களும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறதெனவும் இவர் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார்ப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய பரந்தாமன் அவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வவுனியா நெடுங்கேணிப் பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலாளராக இடம் மாற்றப்பட்டுள்ளார். (மி)

## கூட்டத்...

தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், ஜேர்மன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களே இக்கூட்டத்தில் பங்கெடுக்க கொழும்புக்கு வருகைதரவுள்ளார்கள். இக்கூட்டத் தொடரில் பங்கேற்கத் தென்னாபிரிக்காவின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சூ வான் டேர் மேர்வியும் சிறிலங்கா வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

## நெப்போலியனை...

சிறிலங்கா நீதிமன்றத்தில் விசாரணைகளை எதிர்கொள்ளும் நிலையிலேயே நெப்போலியன், ரோமன் குமார் பற்றிக் டி சில்வா என்பவரது கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கடந்த ஜூன் மாதம் 3ஆம் திகதி பிரித்தானியாவுக்குள் நுழைந்து அரசியல் அடைக்கலம் கோரியிருப்பதாகப் பிரித்தானிய உட்துறைப் பணிமனையிடம் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நெப்போலியன் தற்போது டோவர் அகதிகள் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவரை உடனடியாக நாடு கடத்தி அவர் மீதான நீதி விசாரணையைத் தொடருவதற்கு பிரித்தானிய அரசு முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.